
www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

புதிய பூமி Puthiya Poomi
சுற்று 13 ஆனி (யூன்) 2006 பக்கம்12 விலை 15/ சுழற்சி 92

# அமெரிக்காவின் நேரடித் தலையீடு அதிகரிக்கும் அபாயம்!



இம்மாதம் முதலாம் திகதி அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்திற்கான ராஜாங்கச் செயலாளர் றிச்சார்ட் பௌச்சர் கொழும்பிற்கு வந்திருந்தார். ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சர் உட்பட அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளையும் முக்கிய வர்த்தகப் பிரமுகர்களையும் சந்தித்தார். தமது தூதரக உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடாத்தினார்.

அதன் பின் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய பௌச்சர் வெளியிட்ட கருத்துக்கள் இலங்கை மீது அமெரிக்காவின் தலையீடு அதிக

## இந்தியாவின் பாத்திரம் என்ன?

ரித்து வரும் போக்கினை வெளிப்படுத்திக் காட்டியது. அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தின் பக்கம் இருந்து வருவதையும் அதற்கான பொருளாதார ராணுவ உதவிகளைத் தொடர்ந்து வழங்க இருப்பதையும் பௌச்சர் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துரைத்தார். ஏற்கனவே வழங்கி வரும் ராணுவ உதவிகள் ஆயுதவிநியோகம் ஆலோசனை பயிற்சி என்பன புலிகள் இயக்கத்தை எதிர்கொள்ளக் கூடிய யுத்த சூழலில் மேலும் நேரடியாக அதிகரிக்கப்படும் என்பதையும் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை புலிகள் இயக்கத்தை அதன் செயற்பாட்டிலிருந்து மதிப்பிட்டே பயங்கரவாத இயக்கப் பட்டியலில் சேர்த்துக் கொண்டதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் அண்மைய புலிகள் இயக்கத் தடைக்குப் பின்னால் தாங்களே இருந்ததையும் சூசகமாகத் தெரிவித்திருந்தார். தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினைகளையும் துன்பங்களையும் தாங்கள் கவனத்திற்கு எடுப்பதாகவும், ஆனால் அதனையும் புலிகள் இயக்க நடவடிக்கைகளையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பக்கூடாது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

மேலும் அவர் தனது உரையில் இலங்கை அரசாங்கம் மேற் கொண்டுவரும் வடக்குகிழக்குத் தாக்குதல்களை நியாயப்படுத்தியதுடன் கொஞ்சம் மனித உரிமைக ளைக் கவனத்தில் எடுக்குமாறு துணைப் படைகளை கட்டுக்குள் வைத்திருக்குமாறும் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டார். அத்துடன் இந்தியா வகித்துவரும் தூர நிற்கும் நிலைப் பாட்டைத் தமக்குச் சாதகமானது என்றவகையில் குறிப் பிட்டு தாங்கள் இலங்கையில் தலையிட்டு வரு வதை இந்தியா அங்கீ கரிக்கும் என்ற வாறான எதிர்பார்ப்பையும் பௌச்சர் வெளிப்படுத்தத்த வறவில்லை.

கடந்த ஜனவரியில் இலங்கை வந்திருந்த றிச்சார்ட் பௌச்சர் இப் போது இரண்டாவது தடவையாக வந்து அமெரிக்காவின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்திச் சென்றிருக்கிறார். அவரது கருத்துக்களை ஊன்றி அவதானிப்போருக்கு அமெரிக்கா வின் பிடி இலங்கையில் இறுகி வருவதையும் நேரடித் தலையீடு ஏற்படக் கூடிய அபாயம் பிரதிபலிப்பதையும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

அமெரிக்க மேற்குல அரவணைப்பையும் அவர்களுக்கான விசுவாசத்தையும் கொண்டிருக்கும் தமிழர் தரப்பினர் இத்தனைக்குப் பின்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்வைக்கத்

12ம் பக்கம் →

## குளத்தைக் கலக்கி கழுகுக்கு கொடுப்பதா?

## ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடை ஆச்சரியம் தரும் விடயமல்ல!

இருபத்தைந்து நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியம் கடந்த மே 30ம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கம் எனக் கூறித் தடைவிதித்துள்ளது. ஏற்கனவே அவ் ஒன்றியம் புலிகள் இயக்கத்திற்கு பயணத்தடையை விதித்துக் கொண்டது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மேற்படி தடை தமிழர் தரப்பில் பலருக்கு ஆச்சரியமும் கவலையும் தருவதாக அமைந்து கொண்டது. ஆனால் இம் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் இறுதியில் இவ்வாறு தான் நடந்து கொள்ளும் என் பதை முன்கூட்டியே உணர்ந்து கொண்டவர்களுக்கு எவ்வித ஆச்சரியத்தையும் ஆதங்கத்தையும் அது ஏற்படுத்தவில்லை. உண்மையான விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் எந்தவொரு கட்சியும் அமைப்பும் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளை நம்பியோ உதவிகளை எதிர்பார்த்தோ போராடியதாகவும் வெற்றி பெற்றதாகவும் வரலாறு கிடையாது. விரிவான கட்டுரை 6ம் பக்கத்தில்.

## அந்நியப் படைகளை எதிப்பதாகக் கூறும் ஜே.வி.பி யின் இரட்டைவேடம்

வெளிநாட்டுப்படைகள் குறிப்பாக ஐக்கிய நாடுகளின் படைகள் இங்கு வருவதை எதிர்ப்போம் என்ற வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அவை ஜே.வி.பி யின் வழமையான கண்கவர் சுவரொட்டிகளாகும்.

இன்று வெளிநாடுகள் இலங்கையை இறுக்கிக் கொண்டிருப்பதற்கு தேசிய இனப்பிரச்சினையில் ஜே.வி.பி கொண்டிருக்கும் நிலைப்பாடு முக்கிய காரணமாகும். பேச்சுவார்த்தையின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கோ அதிகாரப் பங்கீட்டை மேற்கொள்வதற்கோ ஜே.வி.பி தயாரில்லை. தமிழ் மக்களுக்கு அதிகாரத்தைப் பங்கிடுவது என்பது நாட்டை பிரித்துக்கொடுப்பதாகும் என்றும் தேசிய இனப்பிரச்சினை என்றொன்று இங்கு இல்லையென்றும் தமிழ் இன வாதமும் தமிழ்ப் பயங்கரவாதமும் தான் இங்கிருக்கிறது என்றும் அது கூறிவருகிறது.

இலங்கையை ஆண்ட அரசாங்கங்களின் தேசிய இன விரோத நிலைப்பாடும், பேரினவாதிகளின் கூப்பாடுகளும் அந்நிய தலையீட்டுக்குப் பெரிதும் வழி சமைத்துள்ளன.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சமாதான நடவடிக்கைகள் என்று கூறிக் கொண்டே வெளிநாடுகள் இங்கு தலையீடுகளை செய்ய ஆரம்பித்தன. இன்று அவை தீர்மானித்து சொல்லுகின்றபடியே இங்கு எல்லாம் நடக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

உள்நாட்டிலேயே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைக் கொடுக்கக்கூடிய ஒரு அரசியல் சூழ்நிலை பலமானதாக இருந்திருந்தால் வெளிநாடுகள் இவ்வாறு தலையிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்காது.

வெளிநாடுகள் தமிழ்மக்களின் போராட்டத்தின் மீது அழுத்தம் கொடுத்துவருகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது விதித்துள்ளன தடையும் அத்தகைய அழுத்தமே ஆகும். அத்தடை குறித்து மகிழ்வடையும் ஜே.வி.பி அந்நியப்படைகள் அல்லது ஐ.நா.படைகள் வரக்கூடாது என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. ஐ.நா.படைகள் இங்கு வந்து தமிழீழத்தை புலிகளுக்கு பிரி த்துக் கொடுக்கப்போவதாகக் கூறிக் கொண்டே அப்படைகள் இங்கு வருவதை எதிர்ப்பதாக ஜே.வி.பி கூறுவது மேலும் வேடிக்கையாக இருக்கிறது.

வெளிநாட்டுப்படைகள் இங்கு வருவதை உண்மையாக ஜே.வி.பி எதிர்ப்பதாக இருந்தால் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டையே எடுக்க வேண்டும்.

புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் சார்பாக வெளி நாட்டுப்படைகள் வருவதையே ஜே.வி.பி எதிர்க்கிறது. ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை எதிர்த்து நிராகரித்து புலிகளை அழித்தொழிக்க அந்நியப்படைகள் இங்குவந்தால் ஜே.வி.பி அதனை ஆதரிக்கும். இது தான் பேரினவாத வெறி பிடித்த ஜே.வி.பி யின் சுவரொட்டிப் பிரசாரம் சொல்லும் செய்தியாகும்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு 350 ரூபா சம்பள உயர்வு வேண்டும்.

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த சம்பள ரூ 350 ஆக உயர்த்தப்பட வேண்டும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கின்ற வேகத்திற்கு ஏற்ப ஆகக்குறைந்தது தோட்டத்தொழிலாளி ஒருவர் ரூபா 350/= தாவது வேண்டியுள்ளது.

சில பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் தோட்டக்கம் கம்பெனிகளின் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்குமிடையில் ஏற்கனவே இருக்கும் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒக்டோபர் மாதம் சம்பளத்திட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அப்போது ஆக்குறைந்த சம்பள உயர்வுகளையும் சேர்ந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளம் ரூ350/= வாவது உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.

கூட்டு ஒப்பந்தத்தின் படி பேரப் பேச்சுக்கு செல்லும் தொழிற்சங்களும் அரசியல் கட்சிகளும் வெகுஜன அமைப்புகளும் இதனை பொதுவான கோரிக்கையாக முன்வைத்து இப்போது இருந்தே போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்தில் தொழிற்சங்கங்கள் வழமைப்போல் இம்முறையும் சம்பளஉயர்வு கோரிக்கையை விட்டுக் கொடுக்கவோ காட்டிக் கொடுக்கவோ கூடாது.

ஏனைய தொழிற்சங்கள் இச்சம்பளவுயர்வுக் கோரிக்கையை அவற்றின் பிரசாரத்திற்காக பயன்படுத்தும் வழமையான யுத்தியை கைவிட வேண்டும்.

எல்லா அமைப்புகளும் ஐக்கியப்பட்டு போராடி தோட்டத் தொழிலாளகளுக்கு ஆகக்குறைந்தது 350/= ஐ பெற்றுக்கொடுக்க வேண்டும். சில பெரிய தொழிற்சங்கங்கள் மௌனம் சாதித்து விட்டு ஒப்பந்த காலம் வந்ததும் இரகசியப் பேச்சுக்கள் மூலம் சம்பள உயர்வைக் காட்டிக் கொடுத்து அற்ப சம்பளத்தை வாங்கிக் கொடுத்து தொழிலாளர்களை ஏமாற்றவே காத்திருக்கின்றன. அதற்குப் பதிலாக இப்போதிருந்தே சம்பள உயர்வை வெகுஜனப்படுத்தல் வேண்டும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு கிழக்கின் படுகொலைகளை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் ஜனாதிபதிக்கு புதிய- ஜனநாயக கட்சி அவசரக் கடிதம்.

இன்று வடக்கு கிழக்கில் நாளாந்தம் இடம்பெற்று வரும் கொடூரமான படு கொலைகள் ஆட்கடத்தல்கள் தாக்கு தல்கள் அச்சுறுத்தல்கள் போன்றவற்றை உடன் தடுத்து நிறுத்துவதற்கு ஆயுதப்படைகளுக்கு கட்டளையிடும் உயர் அதிகாரத்தைக் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதியாகிய தாங்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் நாளாந்தக் கொலைகளாலும் இரத்தப் பெருக்காலும் அச்சம், பீதியுடன் வாழ்ந்து வரும் வடக்குக்கிழக்கு மக்களின் அவலச் சூழலை இல்லாதொழிக்க முடியும். ஆதாலால் தாமதமற்ற முன் முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என எமது புதிய- ஜனநாயக கட்சி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது. அதே வேளை முடக்க நிலையில் இருந்துவரும் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பித்து பயன் தரும் வழிகளில் அதனை முன்னெடுத்துச் செல்ல உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்திக் கூறுகிறது.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் மத்திய குழுவின் சார்பாக பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா இருவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு 24-05-2006 ல் அனுப்பிவைத்த விரிவான அவசரக் கடிதத்தில் கேட்டுள்ளனர்.

மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, வடக்கு கிழக்கில் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக நாளாந்தம் படுகொலைகள் ஆட்கடத்தல்கள் இடம் பெற்று வந்துள்ளன. இந்நிலை மென்மேலும் மோசமடைந்தே செல்கின்றன. இப் படுகொலைகளில் அரசின் ஆயுதப் படைகள், துணைப்படைகள், கருணா குழுவினர், புலிகள் இயக்கத்தின் படைகள் என்போர் சம்பந்தப்பட்டிருப்பது பகிரங்கமானதாகும். ஆயுதப்படைகளுக்கு எதிராக நடாத்தப்படும் தாக்குதல்களைத் தொடர்ந்து இடம் பெறும் எதிர்த்தாக்குதல்கள் பழிவாங்கும் படுகொலைகளால் ஒன்றுமறியாத சாதாரண மக்கள் அச்சம் பயப்பீதியுடனேயே அன்றாட வாழ்வைக்கழிக்க வேண்டியுள்ளது. கிழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் கொலை முஸ்லீம்கள் கொலை திருகோணமலையில் ஐந்து மாணவர்கள், கே.விக்கினேஸ்வரன், பத்திரிகையாளர் கொலை மற்றும் நாளாந்தக் கொலைகள் நடைபெற்றுள்ளன. வடக்கில் புத்தூரில் ஐந்து இளைஞர்கள், நெல்லியடியில் ஏழு பேர், இளைஞர் கொலைகள் மீசாலை மந்துவிலில் ஏழு இளைஞர்கள் காணமல் போனமை அல்லைப்பிட்டியில் பதின்மூன்று பேர் ஒரே இரவில் கொல்லப்பட்டுள்ளனர். உதயன் பத்திரிகைக் காரியாலயம் தாக்கப்பட்டு இருவர் கொல்லப்பட்டனர். நாளாந்தம் ஆங்காங்கே கொலைகள் நடந்த வண்ணமே உள்ளன. இதனால் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டு வருவதுடன் மக்கள் மீண்டும் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியும் வருகின்றனர்.

அத்துடன் சமூக அக்கறையாளர் அரசியல் கருத்துடையோர் பத்திரிகையாளர்கள் போன்றோர் கொலைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருவதுடன் தொடர்ந்தும் ஆயுதப் படைகளால் அச்சுறுத்தப்பட்டு எந்நேரமும் உயிராபத்து வரலாம் என்ற பீதியுடனேயே இருந்தும் வருகின்றனர். இந்த வகையில் எமது புதிய- ஜனநாயக கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவளார்கள் குறிப்பாக கட்சியின் வடபிரதேச செயலாளர் கா.கதிர்காமநாதன் ஆகியோர் அச்சுறுத்தல் உயிராபத்தின் மத்தியிலேயே இருந்து வருகின்றனர். இவ்வாறு இயல்பு வாழ்க்கை சீர்குலைந்து அச்சமும் பதற்றமும் நீடித்து வரும் சூழலில் அன்றாட உழைப்பாளர்களான தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் பாரிய வாழ்க்கைச் சுமைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகி வருகின்றனர். உயிர்வாழ்வதற்கும் தமது அன்றாட அலுவல்கள் கடமைகளைச் செய்வதற்கும் முடியாத சூழலுக்குள்ளும் இருந்து வருகின்றனர். ஆதலால் இந்நிலைமையை மாற்றுவதற்கும் மக்களுக்கு அச்சம் பீதி பதற்றமற்ற சூழலில் வாழ்வதற்கும் உள்ள உரிமையை உறுதிப்படுத்த தாங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையே எமது கட்சி தங்களிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

இவை அனைத்தினதும் மூலகாரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை ஊடான அரசியல் தீர்வே ஒரே வழி என்பதையே எமது கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளது. சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்தில் சுயாட்சி அமைப்பின் மூலமான தீர்வே நியாயமான தீர்வாக அமைய முடியும் என்பதே அரசியல் யதார்த்தமாகும். இதனை தெற்கின் தீவிர பேரினவாத சக்திகளின் அழுத்தங்கள் வற்புறுத்தல்களுக்கு அப்பால் துணிவுடன் சமாதானத் தீர்வாக முன்னெடுக்க வேண்டும். அதற்கான பேச்சுவார்த்தையை விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். இல்லாதவிடத்து யுத்த வாதிகளினதும் அந்நிய ஏகாதிபத்திய- பிராந்திய மேலாதிக்க சக்திகளினதும் உள் நோக்கங்களுக்குப் பலியாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே ஏற்படும் சூழலிலே காணப்படுகின்றது. நாட்டிற்குள் அந்நியப்படைகள் மீண்டுமொரு முறை கால் பதிக்க வேண்டிய அபாய நிலையையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்நாட்டின் மீதும் அனைத்து தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மீதும் ஒடுக்கப்படும் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் மீதும் அக்கறை மிக்க எதிர்காலத் தூர நோக்கின் அடிப்படையிலே மேற் கூறிய விடயங்களைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் தாங்கள் உரிய கவனத்திற்கு எடுத்து ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சி அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பி ட்டுள்ளது.

# மலையகத் தலைமைகள் மேற்குத்திசையில் பதவிகளுக்காக கதவோரம் காத்திருப்பு!

உள்ளூராட்சித் தேர்தலின் இரண்டாம் கட்டமும் முடிவடைந்து விட்டது. அதில் தமது கவனத்தை வைத்து வந்த மலையகத் தலைமைகள் இப்போது தமக்குரிய பதவிகளைப் பெறும் திசையில் கவனத்தை திருப்பியுள்ளன. ஏற்கனவே சதாசிவம்- அருள்சாமி கொம்பனி ஜனாதிபதித் தேர்தல் காலம் முதல் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து வந்தன. அதனால் மாகாண மட்டத்தில் தமிழ் கல்வி அமைச்சர் பதவி உட்பட வேறும் சிலர் அவரவர் விருப்புக்கும் வேண்டுதலுக்கும் ஏற்ப பதவிகள் பெற்றுமுள்ளனர்.

இருந்த போதிலும் மலையகத்தின் ஆதிக்க அரசியல் தொழிற்சங்கத் தலைமைகளான இ.தொ.கா, ம.ம.மு. ஆகிய இரண்டுக்கும் உயர் மட்டத்தில் அமைச்சர் பிரதி அமைச்சர் பதவிகள் இன்னும் வழங்கப்படவில்லை. ஆனால் "தருகின்றேன் சற்றுப் பொறுத்திருங்கள்" என்ற அருள் வாக்கை மகிந்தரிடம் இருந்து பெற்றுக் கொண்டும் விட்டனர். அதற்குரிய பின்புல வேலையை இந்தியத் தூதுவர் ஏற்கனவே செய்து முடித்தும் விட்டார். இருந்தாலும் ஆறுமுகனாருக்கும் சந்திரசேகரத்தாருக்கும் இருப்புக் கொள்வதாக இல்லை. இடையிடையே சென்று அலரி மாளிகையின் கதவோரம் நின்று கொள்கிறார்கள். ஆனால் இன்று வரை அமைச்சர் பதவிகளுக்கான குணம் குறிகள் தென்படவில்லை. இதனாலேயே சென்ற மேதினத்தில் சந்திரசேகரனார் நான் அரசாங்கத்துடன் செல்வதா அல்லது புலிகளுடன் செல்வதா என்பதை விரைவில் தீர்மானிப்பேன் என்று வெள் வெருட்டுப் பேச்சுப் பேசினார். அதன் அர்த்தம் விரைவாக அமைச்சுப் பதவியைத் தரவேண்டும் என்ற மறைமுக வேண்டுகோள்தான். அவ்வாறே ஆறுமுகனார் பகிரங்க வேண்டுகோள் விடாத போதிலும் ஏதோ தருவதை நேரகாலத்தோடு தந்தால் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்துக் கொள்ளலாம் என்ற நிலையில் எதிர்பார்த்து நிற்கின்றார். இவர்களது கெட்டகாலம் அமைச்சரவை மாற்றியமைப்பு இழுபட்டுச் செல்கிறது. எத்தனை பேருக்குத்தான் அமைச்சர் பதவிகளைக் கொடுப்பது என்ற தலையிடியில் ஜனாதிபதி மகிந்தவானவர் இருந்து வருகிறார்.

"யாரு அமைச்சர் பதவியில இருந்தாயென்ன நாம மலையிலை உழைச்சு ஒடிஞ்சு போக வேண்டியது தான். இதுவரையிலை நடக்காதது எனிமேல தான் நடக்கப்போகுதா. சும்மா விடுங்க அந்த ஏமாத்துக்காரங்க பேச்சை" இவ்வாறு குயில்வத்த தோட்டத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளி நறுக்குப் பட்டாற் போல் கூறிக் கொண்டார். இதற்கு மேலும் மலையகத்தின் மக்கள் விரோத தலைமைகள் பற்றிக் கூறிக் கொள்ள என்ன இருக்கிறது.

**மா. சந்திரகாந்தன்**
**அட்டன்**

# நாலும் நடக்கும் உலக'லே

நற்குணன்

## இங்கேயிருப்பதா? அங்கேயிருப்பதா?

மழை ஓய்ந்தாலும் தூவானம் ஓயவில்லை என்கிற மாதிரி ம.ம.மு அரசாங்கத்தில் சேர்ந்தாலும் பொலிஸ் அலுப்பு முற்றாக ஓயாத கடுப்பில் ம.ம.மு தலைவர் மேதின மேடையில் தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இருப்பதா விடுதலைப்புலிகளுடன் இணைவதா என்று முடிவு செய்ய வேண்டிய நிலையில் இருப்பதாகப் பொருமி இருக்கிறார். அவருக்கு முன் இருந்த தெரிவு நீலக்கட்சிக்கும் பச்சைக் கட்சிக்கும் இடையிலானதுதானே! இதென்ன விடுதலைப்புலிகளுடன் இணைகிறது பற்றிய பேச்சு? மூன்று மாதங்கள் முன்பு வரையும் விடுதலைப்புலிகளுடனான நெருக்கம் பற்றிப் போக்குக் காட்டிப் பின்பு அரசாங்கத்துடன் இணைந்ததால் விடுதலைப்புலிகளுடன் முறிந்துபோன உறவை ஒட்ட வைக்கிறதாகப் பேசுகிறாரா? இப்போதைக்கு யூஎன்.பி. ஆட்சிக்கு வராது என்பதால் ஸ்ரீ.ல.சு.க. போனால் மிஞ்சியிருப்பது விடுதலைப்புலிகள் என்கிறாரா? கழுதைகெட்டால் குட்டிச் சுவர் என்பார்கள். பாவம், இப்போது குட்டிச் சுவருக்கும் வழி இல்லைப் போல தெரிகிறது.

## மங்கிய பார்வையா?

07-05-06 ஞாயிறு தினக்குரலின் "மலையகப் பார்வை" பகுதியில் மலையக மேதினங்கள் பற்றிய ஒரு செய்தித் தொகுப்பு வெளியாகியிருந்தது. என்.ஜீ.ஓ ஆதரவில் நடந்த மேதினக் கூட்டம் பற்றிக் கூடக் குறிப்பிட்டுள்ள செய்தியாளருக்கு ராகலையில் நடந்த புதிய ஜனநாயகக் கட்சி மேதினம் பற்றி எதுவுமே தெரியாதா? பத்திரிகையாளர்களின் யோக்கியமே பத்திரிகைச் சுதந்திரத்தினதும் பத்திரிகையாளர்களுடைய உரிமைகட்குமான நியாயப்பாடு என்பதைப் பத்திரிகை நிருவாகமாவது கவனிக்க வேண்டாமா? ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒரு பிரிவுக்குப் பொறுப்பானவர் அது தன்னுடைய தனிப்பட்ட வட்டாரம் போல நடத்துகிற போக்கு வலுத்து வருவது அந்தப் பத்திரிகைக்கும் நல்லதல்ல. படிப்பவர்கட்கும் நல்லதல்ல.

## வாய்ச் சொல் வீரமா?

"மேல்கொத்மலை திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னின்று நடத்தி அத்திட்டத்திற்கெதிராக ஓங்கிக் குரல் கொடுத்த இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உபதலைவரும் முன்னாள் பா.உ.வுமான கணபதி கனகராஜுக்கு மின்சக்தி எரிபொருள் அமைச்சின் மலையகப் பகுதியின் இணைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

போராட்டத்தைக் கைவிடுவதற்கான கையூட்டாக இப் பதவியா என்று அவரிடம் கேட்கப்பட்டதற்கு "மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிராக நாம் முன்வைத்த மாற்றுத்திட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பே எனக்கு வழங்கப்பட்டுள்ளது" என்று ஞாயிறு (7/5-06) தினக்குரலில் விளக்கம் அளித்துள்ளார்.

அப்படியானால் மேல்கொத்மலைத்திட்டம் கைவிடப்பட்டுள்ளதா? அல்லது, அதை "யப்பானிய கம்பனியுடன் ஒப்பந்தம் செய்தபடியே அமுல்படுத்தும் பொறுப்பு" வேறு எவருக்கும் வழங்கப்பட்டுள்ளதா?

மேல் கொத்மலைத்திட்டத்திற்கான தனது மாற்றுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த. தான் என்ன செய்வார் என்று சொல்லுவாரா?

தன் மண்ணையும் மக்களையும் காட்டிக் கொடுக்கும் பிழைப்புவாத அரசியலை ஒரு போதும் செய்யமாட்டேன் என்று சூளுரைத்துள்ளார் அவர். தன் புதிய பதவியைத் துறப்பாரா? அல்லது அரசியலைத் துறப்பாரா? அல்லது சொன்ன வார்த்தையை மறப்பாரா?

அதை அறிய அதிகம் நாட்கள் போகாது.

## நாய்கள் பாடு பிழையில்லை

2550ம் வெசாக் வாரத்தில் தெரு நாய்களைப் பிடித்துக் கொல்வதற்குத் தடைவிதித்துள்ள சனாதிபதி. நாய்கட்கு வெறிக்கு எதிரான தடுப்பூசி ஏற்றுவதும் நாய்களின் இனவிருத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு இரக்கமான நடைமுறைகளைக் கையாள்வதும் பற்றி வற்புறுத்தியுள்ளார். ஆனால் வெசாக் வாரத்தின் போது அப்பாவித் தமிழரைக் கொல்லக்கூடாது என்று படையினருக்கும் துணைப்படையினருக்கும் ஆணை பிறப்பிக்கவில்லையே? ஏன் அப்படி இல்லை!

## அவர்கட்கு ஏது கவலை!

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குரிய எரிபொருள் விற்பனை நிலையங்களைத் தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் செய்தி வெளியாகியுள்ளது. ஜே.வி. பிக்கு அளித்த வாக்குறுதிக்கு எதிராகவே இது அமைந்துள்ளது என்று வலதுசாரிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். ஜே.வி.பி யுடன் முரண்பட வேண்டிய விடயங்களில் அரசாங்கம் முரண்படாமல் நாட்டை மேலும் போருக்குள் தள்ளி விடுவது பற்றி அவர்கட்கு அதிகம் கவலையில்லை. பங்குச் சந்தையில் சரிவு ஏற்படாத வரையில் யார் எக்கேடு கெட்டாலும் அவர்கட்கு என்ன கவலை?

## யாருடைய சதி? யார் வைத்த பொறி?

யூஎன்.பியைக் கொழும்பில் தோற்கடிப்பதற்கான ஒரு சதி முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் அதை முறியடிக்க வேண்டும் என்றும் யூஎன்.பி மாநகரத்தேர்தல் விளம்பரம் ஒன்று தெரிவித்தது.

எந்தச் சதியைப் பற்றிப் பேசுகிறார்கள்? யூ என். பி. பட்டியல் நிராகரிக்கப்பட்டது யாருடைய சதி? கட்சித் தலைமை அங்கீகரித்த பட்டியலை ஒழுங்கீனமான முறையில் மாற்றிய காரணத்தாலேயே பட்டியல் நிராகரிக்கப்பட்டது என்பது எல்லோரும் அறிந்தது. அந்தச் சதிகாரர்கள் யூஎன்.பிக்கு உள்ளேயே இருக்கிறார்கள். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

இது போல ஒரு முழுப் பட்டியலையும் நிராகரிக்கிற செயல் அடிப்படையில் சனநாயக விரோதமானது. இதற்கான காரணம் என்ன? யூஎன்.பி ஆட்சியாளர்களால் புகுத்தப்பப்பட்ட தேர்தல் விதிகள் பிற கட்சிகட்கு எதிராகப் பயன்பட்டது போல இப்போது யூஎன்.பிக்கு எதிராகவும் செயற்படுகின்றன. இதற்கு யார் மீது பழி சொல்வது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பாராளுமன்றத்தாருக்கு சம்பள மறுசீரமைப்பு உழைக்கும் வர்க்கத்தினருக்கு அநீதி

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வில் இழுபறி நடக்கிறது. எதிர்பார்த்த உயர்வு கிடைக்கவில்லை. தனியார் துறை பற்றிப் பேசுவார் இல்லை. பெரும் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு கூட்டு ஒப்பந்த காலம் முடிவுறப் போகிறது. அதுபற்றியும் யாருக்கும் கவலை இல்லை. ஆனால் ஜனாதிபதி பிரதமர் சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவர் அமைச்சர் பிரதி அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பள உயர்வுக்கு மறுசீரமைப்புச் செய்வது எல்லோரும் சம்மதம். ஜே.வி.பி. இதில் தாங்கள் ஏதோ புனிதமானவர்கள் போன்று காட்ட முனைகிறது.சம்பள மறுசீரமைப்புக்கு சம்மதமாம். ஆனால் சம்பள உயர்வுக்கு மறுப்பாம். எப்படி இருக்கு ஏமாற்று. மறுசீரமைப்பு என்பதே சம்பள உயர்வுக்கான நவீன மறுபெயரேயாகும். இந்த மறுசீரமைப்புச் சம்பள உயர்வால் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதி அமைச்சர்கள் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகர் அத்துடன் ஜனாதிபதி என்போர் பத்தாயிரம் முதல் ஐம்பதினாயிரம் ரூபா வரையான சம்பள உயர்வைப் பெறுகிறார்கள். இந்தச் சம்பள உயர்வுக்கு ஏற்றாற் போன்று பிரதம நீதியரசர் முதல் சகல நீதித்துறை உயர்பதவி வகிப்போரும் சம்பள உயர்வு பெறுவார்கள். அமைச்சுக்களின் செயலாளர்கள் யாவரும் அவரவர் பதவி நிலைக்கு ஏற்ப உயர் சம்பள உயர்வு பெறுவர். இவை மட்டுமன்றி உத்தியோக வாசத்தலங்கள் அவற்றுக்குரிய வசதிகள் உயர் ரக வாகனங்கள் உட்பட மேலும் பல பல சலுகைகள். ஏற்கனவே பாதுகாப்பின் பெயரால் குண்டுதுளைக்காத சொகுசு கார்கள் ஒவ்வொன்றும் பலகோடி ரூபாய்களில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மேலும் சொகுசுவாகனங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வழியில் இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய வாய்ப்பு வசதிகளை அனுபவித்து வருபவரே அரசியல் பிரதிநிதிகளாகவும் அரசு யந்திரத்தின் இயக்குனர்களாகவும் இருந்து வருகின்றார்கள். இத்தகையோரே சொத்து சுகம் அனுபவிக்கும் வர்க்கத்தின் பாதுகாவலர்களாவர்.

இத்தகையோர் எவ்வாறு சாதாரண நிலையில் உள்ள அரசாங்க தனியார் துறை ஊழியர்கள் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்குவார்கள். இந்த அரசியல் சமூக ஏற்றத்தாழ்வைப் புரிந்து கொள்ளாவிடின் மக்கள் பாராளுமன்றம் வழி நடாத்தும் ஏற்றத்தாழ்வு மிக்க இன்றைய சுரண்டல் சமூக அமைப்புச் சகதிக்குள் செக்கிழுத்த பாதையில் தொடர்ந்து சுற்றி வர வேண்டியது தான்.

# மலையக ஆசிரியர் நியமனங்களுக்கு போராட்டம்

மலையக ஆசிரியர் நியமனங்களை உடனே வழங்க வேண்டும் மெனக் கோரி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்து போட்டிப் பரீட்சை எழுதி தேர்ந்தெடுக்கப்பட்டு நேர்முகப்பரீட்சைக்கும் முகம்கொடுத்துவிட்டு இருப்பவர்களின் அமைப்பு தொடர்ச்சியாகப் பல வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்க இருக்கிறது.

ஆசிரியர் நியமனங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறல் மனுக்களை அடுத்து நியமனங்கள் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டது. அம்மனுக்கள் மீதான விசாரணைகள் இன்னும் முடியவில்லை. மலையகத்தமிழர்களுக்கு மட்டுமன்றி தமிழ்பேசும் ஏனையவர்களுக்கும் மலையகப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் போது சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று கோரியே அம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலைமையில் இருக்கும் மலையகத்தமிழ் சமூகத்திற்கான விஷேட ஏற்பாடாகவே மூவாயிரம் நியமனங்கள் மலையகத்தமிழர்களுக்கு வழங்கப்படவிருந்தன.

அந்நியமனங்களை வழங்கும்படி வற்புறுத்தியே தொடர்ச்சியான வெகுஜனப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. எதிர்வரும் 14 ஆம் திகதி இராகலை நகரில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. அதனைத்தொடர்ந்து ஏனைய இடங்களுக்கும் அது விஸ்தரிக்கப்படும்.

# மலையகத்தில் மாற்று அரசியல் அவசியம் அதனை மறுப்பது மோசடியாகும்.

மலையகத்தில் மாற்றுத் தலைமைகள் என்று சொல்லப்படுபவைகள் பலமாக இல்லை. அவர்களால் மலையகத்தில் தாக்கமான வேலைகளைச் செய்ய முடியாது. மாற்று அரசியலை முன்னெடுக்க புதிய அமைப்புகளை கட்டியமைக்கக் கூடாது. அதனால் வேறு விதமான விளைவுகளே ஏற்படும். ம.ம.மு. யிலிருந்து பிரிந்து சென்ற அருள்சாமி திகாம்பரம் குழுவினரை இ.தொ.கா. விற்கும் ம.ம.மு. க்கும் மாற்று சக்தியென காட்டுவதில் மலையகத்தின் படித்தவர்கள் என்று கூறப்படும் சிலரால் மேற்படி கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அதாவது படித்தவர்கள் என்று கூறப்படும் சிலரால் ஆட்டிப் படைக்கூடிய தலைமையாக அருள்சாமி தலைமையை வைத்துக் கொள்ள முடியும் என்று நம்புகின்றனர். மாற்றுத்தலைமைகள் பலமாக இல்லை என்று கூறும் மலையகப் படித்தவர்கள் உண்மையான மாற்றுத்தலைமை பலமடையக் கூடாது என்று எண்ணுபவர்களேயாவர். தொழிற்சங்க, பாராளுமன்ற அரசியலுக்கு மாறாக தொழிலாளர் வர்க்க அடிப்படையிலான தீர்வுகளை நோக்காகக் கொண்டு செயற்படுபவர்களின் கருத்துத்தளம் பலமாகவே இருக்கிறது. அத்தளம் விரிவடைந்தும் வருகின்றது. பாரம்பரிய தொழிற்சங்கப் பாதையாலும் பாராளுமன்ற பாதையாலும் மலையக மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்பது நன்கு அம்பலமாகி வருகிறது. அப்பாதையில் தொடர்ந்தும் மக்களை இழுத்துச் செல்ல முடியாது என்பது இலகுவில் புரியப்பட்டும் வருகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் மாற்றுத் தலைமை பலமில்லாதால் தாக்கமான வேலைகளை செய்ய முடியாது என்று கூறுவது மலையகத்தின் பழைய, புதிய பிற்போக்கு தலைமைகளுக்கு சாமரை வீசி அவற்றை தொடர்ந்தும் பாதுகாக்கும் முயற்சியாகும்.

மாற்று அரசியலை முன்னெடுக்க புதிய அமைப்புகளை கட்டியமைக்கக்கூடாது என்று கூறுவதும் மாற்று அரசியல் அமைப்புகள் இயங்குவதை ஏற்றுக்கொள்ள மறுப்பதாகும். அவ்வாறான அமைப்புகளை கட்டியமைப்பதால் வேறு விளைவுகள் ஏற்படும் என்று கூறுவது மாற்று அரசியல் அமைப்புகளில் இருப்போரை அச்சுறுத்துவதும் எச்சரிப்பதுமாகும்.

அருள்சாமி திகாம்பரம் குழுவினர் மாற்று அரசியல் சக்திகளா? அவர்களிடம் தொழிற்சங்க, பாராளுமன்ற சலுகைபெறும் நடவடிக்கைகளைத் தவிர வேறு ஏதாவது இருக்கிறதா? அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு தலைவர்கள் சலுகைகளுடன் வாழ்வதே அவர்களினதும் அரசியல் என்றால் இ.தொ.கா, ம.ம.மு என்பவற்றிலிருந்து எவ்வாறு அவர்கள் வேறுபடுகிறார்கள்?

அவர்கள் வேறுபடாதபோது அவர்களை மாற்று அரசியல் வாதிகளாக ஏற்றுக்கொள்வதெப்படி? இன்னொரு ஆறுமுகனோ, சந்திரசேகரனோ அல்லது அவர்களுக்கு குறைவான வர்களோ தேவை இல்லை. மாற்று முகங்களன்றி மாற்று கொள்கையும் நேர்மையான அரசியலும் மாற்று நடவடிக்கைகளுமே தேவையானதாகும்.

முதலாளித்துவ, பேரினவாதிகளுடன் கூட்டுசேராத அவர்களுக்கு அடிபணிந்து போகாத சுதந்திரமான தொழிலாளர் வர்க்க அடிப்படையைக் கொண்ட வெகுஜன அரசியலே தேவை. அந்த அரசியலிலேயே மக்களின் அக்கறைகள் பேணப்படுவதுடன் மக்களின் பங்களிப்பும் இருக்கும். மக்களுக்கான மக்களின் அதிகாரம் மக்களிடையே இருந்து கட்டிவளர்க்கப்படும். ஏமாற்றுபவர்களுக்கும், கோமாளிகளுக்கும் அவ்வரசியலில் இடமிருக்காது. படித்தவர்கள் என்ற பெயரில் மக்கள் மீது சவாரி செய்யும் சிலருக்கும் இடமிருக்காது. தனிப்பட்ட வக்கிரங்களுக்காகவும் தனிப்பட்ட முன்னேற்றங்களுக்காகவும் அரசியல் தலைவர்களை பயன்படுத்த நினைப்பவர்களுக்கும் இடமிருக்காது.

பேரம் பேசும் பலமிருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு தொழிற்சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கையைக் கூட்டினாலும் தொழிலாளர்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை. பேரம்பேசும் பலம் வேண்டுமெனக் கூறிக்கொண்டு வாக்குகளை குவித்துக் கொள்வதாலும் மலையக மக்களுக்கு எத்தகைய பயனுமேற்படவில்லை.

ஆக மக்கள் போராட்டப் பாதையில் உரிமைகளை வென்றெடுக்கும் பாதையே எம்முன்னுள்ள தெரிவாகும். அப் பாதையில் பயணம் செய்வது இலகுவானதல்ல, இருந்தும் சரியான பாதையாக இருப்பதால் பயணம் செய்தே ஆக வேண்டும்.

மலையகத்தில் மாற்று அரசியல் என்று கூறுவதும் அது அங்கு சாத்தியமில்லை என்று கூறுவதும் சில படித்தவர்கள் எனப்படும் வேடதாரிகள் செய்யும் மோசடியாகும்.

# இன்றைய போப் அன்றைய நாஜி ?

14வது போப் பெனடிக்கட் அண்மையில் போலந்திக்கு சென்ற போது ஹிட்லரின் காலத்தில் போலந்து ஆக்கிர மிக்கப்பட்டு, ஹிட்லரின் நாஜி படையினரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட பல்லாயிரக் கணக்கான போலந்தியர்களுக்காக பிரார்த்தனையொன்றை நடத்தியுள்ளார்.

போப் செய்த பிரார்த்தனையில் அவர் இதுவரை அக்கொலைகள் பற்றி எதுவும் கூறாது இருந்து வந்தமை பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அத்துடன் அக்கொலைகள் நடைபெற்ற போது அவர் ஹிட்லரின் படையில் இருந்துள்ளார். அப்போது அவர் அக்கொலைகளை எதிர்க்கவில்லை. அவ்வாறாயின் அக்கொலைகளை செய்வதற்கு போப் அப்போது துணைபோனவராக மாட்டாரா? துணைபோயிருப்பின் அவருக்கு பாவ மன்னிப்பு கொடுப்பது யார்?

இதேபோன்று இவருக்கு முன்பிருந்த போப்பும் சோவியத் யூனியன் வீழ்த்துவதற்கான சதியில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்டதும் கேட்டதும்

-சாந்தன்-

### திருடரைப் பிடிக்க திருடர் குழு

அண்மையில் இலங்கை ஐ.நா. சபை யின் கீழான உலக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உறுப்புரிமை பெற்றுக் கொண்டது. அதனை சிங்கள ஆங்கில ஏடுகள் தலையில் வைத்து தம்பட்டம் அடித்தன. காரணம் நாளாந்த மனித உரிமை மீறல்கள் நடாத்தப்படும் இலங்கைக்கு அங்கு இடம் கிடைத்த ஆச்சரிய மகிழ்ச்சியேயாகும். இப்போது வடக்கு கிழக்கில் இடம் பெற்று வரும் சம்பவங்களில் மனித உரிமை மீறல்களை பற்றி ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கு படை அதிகாரிகள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட மனித உரிமைக் குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது. இது திருடர் கூட்டத்தினரைப் பிடிக்க சில திருடர்களைக் கொண்ட குழு அமைத்துக் கொண்டதைப் போன்றதேயாகும்.

### மகிந்த சிந்தனைக்கு அரோகரா!

ஆறு மாதங்களுக்கு முன் "மகிந்த சிந்தனை" கொடிகட்டிப் பறந்த போது விவசாயிகளுக்கு உரம் 350 ரூபாவிற்கு வழங்கப்படும். ஒரு கிலோ நெல் 16- 50 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படும். இதனால் விவசாயிகள் சொர்க்கத்தில் வாழ்வார்கள் என்று வாக்குறுதி வழங்கப்பட்டது. அந்த உரவிநியோகத்தின் லட்சணத்தை விவசாயிகளிடம் சென்று கேட்டால் அதன்கிழிந்த கதை கூறுவார்கள். அவ்வாறே நெல் கொள்வனவும் முடிந்த கதையாகிவிட்டது. இன்று தனியார் அரிசி ஆலை முதலாளிகள் ஒரு கிலோ நெல்லை ரூபா 9 அல்லது 10 ரூபாவிற்கே விவசாயிகளிடம் கொள்வனவு செய்கிறார்கள். இதில் உள்ள ருசிகரம் என்ன வெனில் பொலநறுவை மாவட்டத்தின் மிகப் பெரிய அரிசி ஆலைச் சொந்தக்காரரான பிரதி அமைச்சர் சிறிபால ஹம்லத் தனது லொறிகளை கிராமங்களுக்கு அனுப்பி ஒரு கிலோ 9 ரூபா அறா விலைக்கு விவசாயிகளிட மிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து வருகிறார் என்பது தான். எல்லாம் மகிந்த சிந்தனைக்கே சமர்ப்பணம்.

### அம்மையாரின் ஆசை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தற்போது லண்டனில் இருந்துவருகிறார். அவருக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் மனக்கசப்பும் லடாயும் தான். காரணம் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவி பற்றியதாகும். ஆண்ட பரம்பரையில் வந்த வாரிசுப் பதவியை அம்மையார் விடத்தயாராக இல்லை. அதேவேளை தமது குடும்பத்தை ஆளும் பரம்ப ரையாக்கிக் கொள்ளத் தனது பதவியைப் பயன் படுத்தி வரும் மகிந்த மேற்படி தலைமைப் பதவியை உறுதியாக்க முனைகிறார். அம்மையார் நாடு திரும்பியதும் இத்தலைமைப் பாதவிக்கான "நாய்ச்சண்டை" தெருவிற்கு வரும் என யூஎன்.பி. காரர்கள் காத்திருக்கிறார்கள்.

### தேர்தலுக்கு முன்பும் பின்பும்

கொழும்பு மாநகரசபைத் தேர்தலின் போது தமிழர் மானம் தமிழர்பாதுகாப்பு தமிழர் பலம் போன்றவற்றுக்கு மனோ கணேசன் தலைமையிலான மேலக முன்னணிக்கு வாக்களிக்கு மாறு கேட்டனர். மேலும் ஒரு படி மேலே சென்று பேரினவாதக் கட்சிகளுக்கு தமிழர் வாக்களிக்க வேண்டாம் என்றும் கூறினர். ஆனால் தேர்தல் முடிந்த இரண்டு நாட்களில் மனோகணேசன் ரணிலிடம் சென்று பேச்சுவார்த்தை நடாத்தி தனது யூஎன்.பி. விசுவாசத்தை தெரிவித்துக் கொண்டார். தேர்தல் நேரத்தில் பேரினவாத முழக்கம் தேர்தல் முடிந்ததும் பேரின வாதத்தின் காலடியில். இது மனோகணேசனுக்கு மட்டுமல்ல தொண்டமான் ஆறுமுகம் சந்திரசேகரன் சதாசிவம் அருள்சாமி வகையறாக்களுக்கும் இரத்தத்தில் ஊறிப்போன விடயமாகும். இவர்கள் ஏமாற்றத் தெரிந்தவர்கள். மக்கள் ஏமாந்து கொள்பவர்கள். இவற்றுக்கு லட்சம் கோடி பணம் செலவிடப்படுகிறது என்று சொல்வதை விட முதலீடு டப்படுகிறது. அவை திரைமறைவில். வெளியே தமிழர் மானம், பேரினவாத எதிர்ப்பு, ஜனநாயகம் என்றெல்லாம் விளம்பரம். என்று முடியும் இம் ஏமாற்று. என்று ஒழியும் இப் பம்மாத்து.

### தமிழின் பெயரால் கோடீஸ்வரர்கள்.

தமிழுக்காக, தமிழர்களுக்காக தமிழ் மண்ணிற்காகவே இன்றும் உயிர் வாழ்கின்றேன் என எழுதியும் பேசியும் உடன் பிறப்புக்களை உசுப்பி விட்டு அரசியல் பிழைப்பு நடாத்தி வந்த கலைஞர் கருணாநிதி ஐந்தாவது தடவையாக தமிழகத்தின் முதல்வராகி உள்ளார். எண்பத்தி மூன்று வயது கண்ட இந்த முதிய தமிழ் த்தலைவரின் வெளிப்படுத்தப்பட்ட சொத்தின் பெறுமதி 27 கோடி 49 லட்சத்து எழுபத்து மூவாயிரமாகும். 1971ம் ஆண்டு இதே கருணாநிதி தமிழக வங்கி ஒன்றில் தனது மாத வருமானம் 50 ரூபா என்று காட்டி ஆயிரம் ரூபா கடன் பெற்ற கதையும் தேர்தலின் போது வெளிவந்தது. அதே கருணாநிதி தான் இன்று இரு மனைவியரதும் பெயரிலும் மட்டும் வெளிக்காட்டிய சொத்தின் பெறுமதியே மேற்கூறிய தொகையாகும். இப்படி அரசியலில் தமிழ், தமிழன் தமிழ்மண் பற்றிப் பேசும் பல கோடீஸ்வரர்கள் லட்சாதிபதிகள் என்போரை தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்திலும் காண முடியும். ஆனால் உழைத்தும் வாழ முடியாது இருந்து வரும் சாதாரண தமிழர் நிலைதான் பரிதாபமானது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பெருந்தோட்ட நிலப்பரப்பும் பிரதேச சபைகளுக்குள் கொணர வேண்டும்

## ஆரம்ப உரையில் தோழர் ச. பன்னீர்செல்வம்

எனக்கு வாக்களித்த பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்திற்கு எந்த வொரு அபிவிருத்தியும் போய்ச்சேராத பிரதேச சபைக்கு நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன் என்பதை முதலில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அவர்களுக்கு பிரதேச சபைகளுக்கூடாக அபிவிருத்திகள் சென்றடைவதற்கு தடையாக இருக்கின்ற சட்ட ரீதியான நிர்வாக ரீதியான முட்டுக்கட்டைகளை தகர்த்தெறிந்து தோட்டப்புறங்களும் பிரதேச சபைகளின் அபிவிருத்திக்கான அதிகார எல்லையாக விரிவு படுத்துவதற்காக போராடுவதற்காகவே நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். அப்பொறுப்பை நிறைவேற்ற தொடர்ந்து நான் போராடுவேன். பெருந்தோட்டக் காணிகள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதனாலும் தோட்டங்கள் தனியார் கம்பெனிகளால் நிருவகிக்கப்படுவதனாலும் தோட்டங்களுக்குள் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாது என்று கூறப்படுகிறது. அந் நிலைமாற்றப்பட வேண்டும். பிரதேச சபைகளுக்கு தோட்டத்தில் வசிப்போர் வாக்களிக்கும் உரிமையை கொண்டிருப்பதால் அபிவிருத்திகளும் அவர்களை சென்றடைய வேண்டும். தோட்டப்பரப்பையும் பிரதேச சபைகளுக்குள் உள்ளடக்க பிரதேச சபை மாகாணசபை சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றேன்.

இவ்வாறு புதிய- ஜனநாயகக்கட்சியின் மலையகப்பிரதேச செயலாளரும் வலப்பனை பிரதேச சபை உறுப்பினருமான தோழர் ச.பன்னீர்செல்வம் பிரதேசசபை உறுப்பினராக பதவியேற்ற பின்னர் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றிய ஆரம்ப உரையில் மேற்கண்டவாறு குறிப்பட்டார். மேலும் தனது உரையில் தோழர் பன்னீர் கூறியதாவது.

பிரதேச சபைகள் உட்பட அனைத்து உள்ளுராட்சிசபைகள் அதன் பரப்பெல்லையில் வாழும் மக்களின் நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும், அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மக்களின் அபிலாஷைகளை நிலைநாட்டக் கூடிய போதிய அதிகாரங்களை கொண்ட சுயாட்சி சபைகளாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

மத்திய அரசினதும் மாகாண அரசினதும் நிகழ்ச்சி நிரல்களை மட்டும்



நிறைவேற்றும் நிறுவனங்களாகவன்றி உள்ளுராட்சிச் சபைகள் குறித்த சூழ்நிலைக்கு ஏற்ப சுதந்திரமான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இயங்கும் நிறுவனங்களாக இருக்க வேண்டும்.

பிரதேச சபைகளுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவென தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியும் அதிகரிக்கப்பட வேண்டும். தற்போது உறுப்பினரொருக்கு வருடமொன்றுக்கு 50 ஆயிரம் ரூபாவிற்கு உட்பட்ட அபிவிருத்தித் திட்டங்களையே முன்னெடுக்க முடியும். அது மிகவும் குறைவான தொகையாகும். இத்தொகை அதிகரிக்கப்பட வேண் டும் உள்ளுராட்சிச் சபையின் அலுவல்கள் சிங்கள மொழியில் மட்டுமன்றி தமிழ்மொழியிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான சட்டரீதியான பிரகடனங்களை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்களின் ஆலோசனைகள் பங்களிப்புடனான பரந்தளவிலான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள உள்ளுராட்சி சபைகளுக்கு போதிய அதிகாரங்களும் நிதியும் வழங்கப்பட வேண்டும்.

சில இடங்களில் 10 ஆயிரத்திற்கு குறைவான வாக்காளர்களைக் கொண்ட பிரதேசத்திலும் பிரதேச சபைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் நுவரேலியா மாவட்டத்தில் பாரிய நிலப்பரப்பையும் அதிக எண்ணிக்கை கொண்ட மக்களையும் கொண்டதாகவே பிரதேச சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பரப்பெல்லையை குறைத்து இன்னும் பல பிரதேச சபைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பிரதேச சபையின் ஊடாக என்னைத் தெரிவு செய்த மக்களுக்கு முடிந்தளவுக்கு சேவை செய்ய சகல முயற்சிகளையும் முன்னெடுப்பேன். ஆனால் இந்த சபையின் நிலை குறுகிய வரையறுப்புகளையே கொண்டுள்ளது. நான் ஒரு கம்யூனிஸ்ட். எனது கட்சி புதிய- ஜனநாயக கட்சி. எமது பணி அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காகப் போராடுவதாகும். அந்த வகையில் இந்த பிரதேச சபையில் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலித்து பணியாற்றுவேன். மக்களுக்கான குரலை ஒலித்து செயலாற்றுவேன் என்ற உறுதி மொழியையும் முன்வைக்கின்றேன்.


# மலையக தேசிய இனத்துவ வளர்ச்சிக்கு கல்வியின் அவசியம்

கடந்த 13- 05- 2006 அன்று ரொசல்ல மைலாடி சிவசுந்தரி கல்வியகத்தில் "மலையக தேசிய இனத்துவ வளர்ச்சிக்கு கல்வியின் அவசியம்" என்னும் தலைப்பில் ஒரு விரிவான கலந்துரையாடல் இடம் பெற்றது. இதற்கு பத்தனை ஸ்ரீபாத கல்வியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவ. இராஜேந்திரன் தலைமை தாங்கினார். மேற்படி கல்விக் கலந்துரையாடலுக்கான முன்மொழி வுகளை கீழ் வரும் குறிப்புகளாக எழுத்துருவில் அவர் முன்வைத்தார். அதன் அடிப்படையில் விரிவான கலந்துரையாடல் இடம் பெற்றது. அதில் ஆசிரியர் மாணவர்கள் பெற்றோர் கலந்து கொண்டு பயன்தரும் கருத்து க்களை முன்வைத்தனர். அக் குறிப்புகளை இங்கு தருகின்றோம்.

மலையக தேசிய இனத்துவ வளர்ச்சிக்கு கல்வியின் அவசியம்.

* கல்வியின் இசைவாக்கம் இன்றி சமூக வளர்ச்சிக்கான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது.
* கல்வி என்பது அறிவைத் தேடுவதற்கு, அறிவை விசாலமாக்கிக் கொள்வதற்கு அடிப்படையாக அமைகின்றது. இதனால் பிரயோகத்துக்கு வாய்ப்பளிக்காத மனித முன்னேற்றத்துக்கு இடமளிக்காத விஞ்ஞானத் தன்மையற்றவற்றை நாம் கல்வி என்ற பகுதிக்குள் சேர்க்க முடியாது.
* சான்றுகளிலிருந்து உண்மையைத் தேட வேண்டும். புற நிலையில் உள்ள எல்லா விசயங்களும் சான்றுகளாகும். உண்மை என்றால் அவற்றின் அக உறவுகள். அதாவது அவற்றை ஆளும் விதிகள் என பொருள் கொள்ளப்படும். தேடல் என்பது விஞ்ஞான அடிப்படையில் ஆராய்வதாகும்.
* நிலைமைகளின் உண்மைகளை அறிவதற்கு ஒரே வழி சமுதாய ஆய்வுகளை நடத்துவது ஆகும். வெறுமனே விடயங்களை மனப்பாடம் செய்வது கற்றலாகாது.
* நிலைமைகள் தொடர்ச்சியாக மாறிக் கொண்டு செல்லுகின்றது. இதனால் தொடர்ந்து கற்பது அவசியமாகின்றது. கற்றலில் தற்திருப்தி கற்றலின் எதிரியகிவிடும்.
* செயலுக்கு வழிகாட்டுவதே அறிவு. செயல் மேலும் கற்பதற்கு இடமளிக்கின்றது. இத்தகைய தேர்ச்சியை ஒருவர் பெற்றிருக்காவிட்டால் அவர்

மலையக கல்வி - பகுதியும் முழுமையும்




## மலையக கல்வியைப் பாதிக்கும் சில காரணிகள்

| அரசியல் | பொருளாதாரம் | சமூகவியல் | பண்பாடு |
|---|---|---|---|
| இனவாதம் | சம்பளம் | வீடமைப்பு | கூட்டுறவு |
| சட்டங்கள் | சுய உற்பத்தி | தொழிற்கல்வி | சுகாதாரம் |
| வளர்ப்பகிர்வு | சேமிப்பு | தொடர்பாடல் | பொழுதுபோக்கு |
| அரசியலறிவு | முதலீடு | வேலைவாய்ப்பு | உணவுப்பழக்கம் |
| பிற்போக்குத் | வாய்ப்புகள் | சாதி | ஒத்துழைப்பு |
| தொழிற்சங்கம | போதாமை | | |

# மாற்றுக் கல்விக்கான அவசியமும் அடித்தளமும்

திருமதி. சுந்தரி நாராயணசாமி அம்மையாரின் 4வது வருட நினைவு நிகழ்வு சிவசுந்தரி கல்வியகத்தினரால் 13-05-2006 அன்று காலை 10.00 மணிக்கு கல்வியக வளாகம் அமைந்துள்ள நாவலப்பிட்டியிலுள்ள மைலடி கிராமத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துரையாடல், கவியரங்கு, பாடல்கள், புத்தகக் கண்காட்சி-விற்பனை, முன்பள்ளி மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்குதல் என்பன போன்ற நிகழ்வுகள் மாற்றுப் பண்பாட்டை பிரதிபலிக்கும் முகமாக நடந்தேறின. நிகழ்வின் ஆரம்பத்தில் அம்மையாரின் புதைமேட்டில் புரட்சிகர உறுதி மொழியை வாசித்த பின்னர் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கலந்துரையாடல், "மலையக தேசிய இனத்துவ வளர்ச்சிக்கு கல்வியின் அவசியம்" எனும் தலைப்பில் ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவனு. இராஜேந்திரன் தலைமையில் இடம் பெற்றது. கவியரங்கு "கல்விப்படகேறி" எனும் தலைப்பில் கவிஞரும் ஆசிரியருமான பத்தனையூர் வே. தினகரன் அவர்களின் தலைமையில் மார்க்ஸ் பிரபா, ஆ. செந்தில்குமார், ஜெயகாயத்ரி, இரா. வனிதா ஆகிய இளம் கவிஞர்களின் பங்குபற்றுதலோடு நடைபெற்றது. அத்துடன் புத்தகப்பண்பாட்டை வளர்க்குமுகமாக புத்தக விற்பனையும், முன்பள்ளி மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் பெருமளவில் முன்பள்ளி சிறார்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள், பெற்றோர்கள் நண்பர்கள் ஆகியோர்கள் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்வு மாற்றுக் கல்வி பற்றிய அவசியத்தையும், அதற்கான அடித்தளத்தையும் பற்றி தெளிவுபடுத்துவதாக அமைந்தது. சிவசுந்தரி கல்வியகமானது சுந்தரி நாராயணசாமி அம்மையாரின் 3வது வருட ஞாபகார்த்தமாக தாபிக்கப்பட்டு அவரது கணவராலும் பிள்ளைகளாலும் கடந்த ஒரு வருட காலமாக தனது மாற்றுக் கல்வி அடித்தளத்தின் ஆரம்பகட்ட பணிகளை செவ்வனே முன்னெடுத்துச் செல்கிறது. இது மலையக மண்ணுக்கு முன்னுதாரணமாகும்.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் உலக வங்கியின் வழிகாட்டலிலும் ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளின் ஆலோசனையின் பேரிலும் தமது கல்வித்திட்டங்களை வகுக்கின்றன. இது மாணவர்களை சிறந்த மனிதர்களாக மாற்றும் தமது செயற்பாட்டில் தவறிவிடுகிறது. மாணவர்கள் சுயமாக சிந்திக்கும் அறிவாளிகளாக இருப்பதை விடுத்து புத்தகப் பூச்சிகளாகவும் உலகமயமாதலின் சேவகர்களாகவும் மாறி வருகின்றனர்.

இந்த நிலையை முற்றாக நிராகரித்து சிறந்த மாணவர்களை சிறந்த புத்தி ஜீவிகளை உருவாக்கி அதன் மூலமாக மலையக சமூகத்தை சிறந்த புரட்சிகர சமூகமாக மாற்றும் நடவடிக்கையாக இந்தக் கல்வியகமும் இவர்களால் நடாத்தப்படும் நிகழ்வுகளும் அமைகின்றமை பாராட்டத்தக்கது. இவர்களும் இவர்கள் சார்ந்த புரட்சிகர மார்க்சிய, லெனினிய, மாவோ சிந்தனை கொண்ட புதிய-ஜனநாயகக் கட்சியும் இணைந்து இது போன்றே இன்னும் பல தோட்டப்புறங்களுக்கு சென்று தமது மாற்றுக் கல்விக்கான அடித்தளத்தை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மலையகம் விழிப்புறும் காலமும், புரட்சியும் வெகு தொலைவில் இல்லை என்பதை இந்த நிகழ்வு அனைத்து பிற்போக்கு அரசியல் தொழிற்சங்கத் தலைமைகளுக்கு அறிவிக்கிறது. வளர்க மாற்றுக் கல்வி. வெல்க போராட்டம். கிட்டு

# அமைதி வழியில் அடக்கப்பட்ட போராட்டம்

சென்ற இதழ் தொடர்ச்சி

இதுவரை ஈட்டாவினால் 830 பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதைவிட ஸ்பானிய அரச பயங்கரவாதத்தால் பல்லாயிரக்கணக் கான பாஸ்க் மக்கள் துன்புறுத்தப்பட்டும் உள்ளனர்.

ஈட்டா அமைப்புடன் நீண்டகாலமாக தொடர்புடைய அமைப்பாக வட அயர்லாந்தின் IRA அமைப்பு இருந்து வந்துள்ளது. 1996 இல் IRA பெரிய வெள்ளி உடன்படிக்கையுடன் வன்முறைப் பாதையை நிறத்தி அமைதி வழிக்கும் பின்னர் அவர்களது அரசியல் பிரிவான சின் பெயின் (Sinn Fein) மூலம் சனநாயக நீரோட்டத்திலும் இணைந்தது. ஈட்டாவின் தற்போதைய முடிவில் IRA அமைப்புக்கு பெரிய பங்கு இருப்பதாகத் தெரிகிறது.

ஐரோப்பாவின் நீண்ட வரலாறு கொண்ட தேசியத்துக்கான போராட்ட இயக்கங்கள் அமைதி வழிக்குத் திரும்பியிருக்கின்றன. இவை நல்ல அறிகுறிகளா என்பதே இங்கே தொக்கி நிற்கும் வினாவாக இருக்கிறது.

IRA யையும் வட அயர்லாந்தையும் எடுத்துக் கொண்டால் அமைதி வழிக்கு திரும்பிய பின்னர் அவர்கள் பெரிதாக எதனையும் பெற்றுவிடவில்லை. இன்னமும் பிரித்தானியாவின் இரும்புப் பிடிக்குள்ளேயே வாழ வேண்டிய நிலை. உடன்படிக்கை எட்டப்பட்டாலும் இதுவரை அவை எவையுமே நிறைவேற்றப்படவில்லை என்பது வெளிப்படை, இதனால் பல நூற்றாண்டு காலப் போராட்டம் இறுதியில் தோல்வியையே சந்தித்துள்ளது எனலாம்.

ஈட்டாவைப் பொறுத்தவரையில் ஸ்பானியாவின் தற்போதைய எதிர்க்கட்சி ஈட்டாவை தாங்கள் ஒரு போதும் நம்பமாட்டோம் என்று கூறியிருக்கின்றது. பிரதமரோ "இவ்வளவு கால வன்முறைகளுக்கும் கொடூரங்களுக்கும் பின்னரான சமாதான நடவடிக்கைகள் நீண்டதாகவும் மிகவும் சிரமமானதாகவும் இருக்கும்" என்கிறார்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று13 ஆனி 2006 பக்கம்12 விலை 15/– சுழற்சி 92

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

## தோட்டக் கம்பெனிகளின் லாபத்தைக் கண்டறிய சுதந்திரக் கண்காணிப்புக் குழு அவசியம்

அரசாங்க ஊழியர்களுக்கு ஆகக்குறைந்த சம்பளமாக மாதாந்தம் 11 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. அது அவர்கள் செய்யும் வேலைக்கு போதாதா என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கேட்டார். வேகமாக அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு11 ஆயிரம் போதுமா என்பது சாதாரணமாக எல்லோருக்குமே தெரியும். ஆனால் ஜனாதிபதி முதல் பா.ம உறுப்பினர்வரை சம்பள உயர்வு பெறவிருப்பது தெரிந்ததே. தோட்டத்தொழிலாளர்களுக்கு மாதத்திற்கு 26 நாட்களும் வேலை வழங்கப்பட்டால் ஒரு தொழிலாளி ஆகக் கூடியது ரூபா 3926 ஐயே பெறுவார். அரச ஊழியர்களுக்கு 11 ஆயிரம் போதாதா என்று கேட்பது போன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு 3926/= போதாதா என்று கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டின் வரவு செலவு திட்டத்திலோ அல்லது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு ஏற்ப நாட்டின் ஏனைய துறையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு சிறிதளவாவது சம்பள உயர்வு வழங்கப்படும் போதோ பல விதமான காரணங்களை காட்டித் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுவதில்லை.

பெருந்தோட்ட உற்பத்திகளான தேயிலை, றப்பர் போன்றன நட்டமான தொழிற்துறைகளல்ல. இன்னும் இலங்கையின் வருமானத்தில் 60 சதவீதத்தை பெற்றுத்தருவது பெருந்தோட்டத்துறையேயாகும். எனினும் நாட்டில் மிகவும் குறைவான சம்பளம் பெறுபவர்கள் தோட்டத் தொழிலாளர்களேயாவர். நாளாந்தச் சம்பளம் ரூபா 151/= ஆகும்.

பெருந்தோட்டங்களை அரசாங்க நிறுவனங்கள் நடத்திய காலத்தில் சிறுசிறு சம்பள உயர்வுகளையாவது போராடிப் பெறக்கூடியதாக இருந்தது. பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பும் போராட்டங்களினூடாக சம்பள உயர்வுகளைப் பெற முடிந்தது. 1991 ஆண்டு பெருந்தோட்டங்கள் தனியார் கம்பனிகளிடம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டதற்குப் பிறகு தொழிற்சங்கங்களுக்கும் தனியார் கம்பெனிகளுக்குமிடையில் வேலை நிபந்தனைகள், சம்பள உயர்வு போன்றன பற்றி கூட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு வருகின்றன. அதில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சம்பளத்திட்டம் புதுப்பிக்கப்படும் விதத்தில் ஏற்பாடுகள் இருக்கின்றன. பொதுவாக கூட்டு ஒப்பந்தங்களில் சாதாரணமாக சம்பளத்திட்டங்கள் எதிர்பார்க்கப்படும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பையும் உள்ளடக்கியதாகவே இருக்கும். ஆனால் தோட்டத்தொழிலாளர்கள் பற்றிய கூட்டு ஒப்பந்தங்கள் அவ்வாறான அடிப்படையில் அவர்களின் சம்பளம் தீர்மானிக்கப்படுவதாக இல்லை. தோட்டக் கம்பெனிகளின் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனம் ஆதிக்கம் செலுத்தும் நிலையிலேயே இருக்கிறது. தொழிற்சங்கங்கள் அவற்றின் இயலாமையின் காரணமாகவே முதலாளிமார் சம்மேளனத்தின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டுள்ளது. அத்துடன் தனியார்மய உலகமயமாதல் சூழ்நிலையில் கம்பெனிகளுக்கு நடைமுறையிலும் சட்டரீதியாகவும் அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டு ஒப்பந்தத்தின் கீழ வேலைநிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சம்பள உயர்வை கேட்டு வேலை நிறுத்த செய்ய முடியாது. கூட்டு ஒப்பந்தத்தில் ஒருதுறையில் 60 சதவீத அங்கத்தவர்களை கொண்டிருக்கும் தொழிற்சங்கமே தொழிலாளர்கள் சார்பில் கையெழுத்திட முடியும். தோட்டத்துறையில் ஒரு தனிச்சங்கத்திற்கு 60 சதவீதத்திற்கு மேல் அங்கத்துவர்கள் இல்லாதபடியால் இ.தொ.கா, இ.தோ.தொ, சங்கம் தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி ஆகிய மூன்றும் தொழிலாளர்கள் சார்பில் கையெழுத்திட்டு வருகின்றன. அவை உயர்வுகள் ஏதுமில்லாத சம்பளத்திட்டத்திற்கு கடந்த முறை கையெழுத்திட்டன. சம்பள உயர்வு பற்றிய ஏற்பாடுகள் இவ்வருடம் ஒக்டோபர் மாதத்திற்கு முன்பு புதிப்பிக்கப்பட வேண்டும். இதுவரை காலமும் தேயிலை உற்பத்தி அதிகரித்ததாகவும், தேயிலை விலை உயர்ந்துள்ளதாகவும் ஊடகங்களில் கட்டுரைகள் எழுதுப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக தேயிலை விலையில் வீழ்ச்சி என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. குறைந்த கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்களையே தோட்டங்களில் வேலைக்கு அமர்த்த வேண்டுமென்றும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. தோட்டத் தொழிற்சங்கங்கள் ஆவேச அறிக்கைகள் விடுகின்றன. இ.தொ.கா வினர் தாங்கள் இல்லாமல் சம்பள உயர்வு பெற முடியுமா என்று சவால் கேள்வி எழுப்புகின்றனர். கூட்டு ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக போக முடியாத தொழிற்சங்கங்கள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவும் மறியல் போராட்டங்களில் ஈடுபடப்போவதாகவும் அறிக்கைகள் விடுகின்றன. அவையெல்லாம் மக்களை ஏமாற்றும் வெறும் வாய் வீச்சுக்களேயாகும். நியாயமான சம்பள உயர்வை வென்றெடுக்க கூட்டு ஒப்பந்தமே தடையாக இருப்பதால் கூட்டு ஒப்பந்தமுறையை கைவிட்டு புதிய அடிப்படைகளை கொண்ட **சம்பள நிர்ணய சபை** முறையை ஏற்படுத்த வேண்டும். அல்லது நியாயாமான சம்பள உயர்வுக்கு தடையாக இருக்கும் கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகளையும் கம்பெனிகளின் ஆதிக்கத்தையும் இல்லாதொழிக்க வேண்டும். தோட்டக்கம்பெனிகளின் உண்மையான லாபத்தை கண்டறியவும், தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவை சரியாக கண்டறியவும் அதனடிப்படையில் சம்பள உயர்வை சிபார்சு செய்யவும் **சுதந்திரமான கண்காணிப்பு குழு** வொன்றை நியமிக்க வேண்டும். இல்லாவிட்டால் தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாகக் கூறிக்கொண்டு சம்பள உயர்வு வழங்க தோட்டக்கம்பெனிகள் தொடர்ந்து மறுப்பை தெரிவிக்கும் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படப் போவதில்லை. தோட்டத்தொழிலாளர்களுக்கான நியாயமான சம்பளஉயர்வை வென்றெடுக்க புதிய அணுகு முறைகளை தொழிற்சங்கங்கள் கையாள வேண்டும். தவறினால் தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் ஏமாற்றப்படுவார்கள். ஏமாற்றுக்கு துணைபோகும் தொழிற்சங்கத் தலைவர்களின் பைகள் நிறையும். ஆனால் தோட்டங்களில் அமைதி நிலவப்போவதில்லை.

தோட்டங்கள் கம்பெனிகளிடமிருந்து மீட்கப்பட்டு தொழிலாளர்களின் **பங்களிப்புடனான கூட்டுறவு** முறையில் இயக்கப்பட வேண்டும். அப்போதே தொழிலாளர்களின் சம்பளப்பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். அந்நிலை ஏற்படும் வரை சம்பள உயர்வுகளை தொடர்ந்து பெற்றுக் கொள்ள பலமான தொழிற்சங்க அணுகுமுறை அவசியமாகும்.

**ஆசிரியர் குழு**

# சர்வதேச சமூகம் என்போர் யார் இவர்கள் என்ன செய்கிறார்கள்?

**வெகுஜனன்**

நமது நாட்டின் ஊடகங்களிலே சர்வதேச சமூகம் என்ற சொற்பதம் தாராளமாக இடம் பெற்று வருவதைக் காணலாம். அரசாங்கம் எதிர்க்கட்சிகள் போராடும் சக்திகள் அரசியல் ஆய்வாளர்கள் விமர்சகர்கள் எல்லோரும் சர்வதேச சமூகம் என்றபதத்தை பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இந்தப் பதத்திற்கு ஒரு திட்டவட்டமான பொருள் பொதிந்த அர்த்தம் இருக்கின்றதா என்று பார்ப்பது அவசியமாகின்றது. அவ்வாறு நோக்கும் போதுதான் சர்வதேச சமூகம் என்பது யாரை அடையாளப்படுத்துகின்றது? அவர்கள் யார்? அவர்கள் உலகில் என்ன செய்கிறார்கள்? போன்ற நியாயத்தின் பாலான கேள்விகள் எழுகின்றன.

சர்வதேச சமூகம் என்பதை உலக நாடுகள் அனைத்தையும் சகல மக்களையும் எவ்வித வேறுபாடுகளுக்கும் உள்ளாக்காது இணைத்து மனிதத்துவத்தின் அடிப்டையில் நோக்குவதே அர்த்தமுள்ள ஒரு பதமாகக் கொள்ள முடியும். ஆனால் சர்வதே சமூகம் என்ற பதம் எடுத்தாளப்படும் போது அவ்வாறு நோக்கப்படுகிறதா என்பதே கேள்வியாகும்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையானது உலகின் சுதந்திரமடைந்த நாடுகள் அனைத்தும் அங்கம் பெறும் ஒரு சர்வதேச நிறுவனமாகக்கப்பட்டது. அந்த ஐ.நா.சபையில் இன்று 191 நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன. அங்கே ஐந்து நாடுகள் இரத்து (வீட்டோ) அதிகாரத்துடன் கூடிய நிரந்தர பாதுகாப்பு சபை நாடுகளாக இருந்து வருகின்றன. ஏனைய நாடுகள் வெறும் அங்கத்துவ நாடுகள் என்பதுடன் இந் நாடுகள் உலகின் முக்கிய விடயங்களில் பெரும்பான்மைப் பலத்துடன் தீர்மானங்கனை நிறைவேற்றிக் கொண்ட போதிலும் அவை முறையான நடைமுறைப்படுத்தலுக்கு உட்படுவதில்லை. காரணம் அத்தகைய நாடுகளின் நிலைப்பாட்டை ஐ. நா. சபையில் ஆதிக்கம் செலுத்திவரும் அமெரிக்க மேற்குலக நாடுகள் ஏற்றுக் கொள்வதில்லை. தனது உலக மேலாதிக்கத்திற்கு வாய்ப்பு வசதி அளிக்கும் தீர்மானங்களுக்கு மட்டும் அமெரிக்கா ஆதரவளிக்கும். அதேவேளை அதற்கு மாறாக இருந்தால் அதனைப் புறம் தள்ளும் அல்லது தனது ரத்து (வீட்டோ) அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும். இந் நிலையில் ஐ.நா.சபையானது உலகின் எல்லா நாடுகளையும் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச சமூகத்தின் உண்மையான நேர்மையான குரலைப் பிரதிபலிப்பதாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அது இல்லாமல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் மேற்குலக வல்லரசுகளினதும் தேவைகள் நலன்கள் ஆதிக்கம் போன்றவற்றுக்கான சர்வதேசக் கருவியாகவே இருந்து வருகின்றது. இதன் காரணமாகவே கடந்த நூற்றாண்டில் ஐம்பதுகளுக்குப் பின் உலகின் சுதந்திரம் பெற்ற நாடுகளான ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் தமக்குள் ஐக்கியப்பட்டு நிற்கும் ஒரு பொதுப்போக்கை உருவாக்கிக் கொண்டன. அதுவே அணிசேரா இயக்க நாடுகளின் உலக அமைப்பாகத் தோற்றமெடுத்தது. அறுபதுகளில் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் அங்கத்துவம் பெறும் ஒரு உறுதியான சர்வதேச சமூக அமைப்பாகத் தன்னை வெளிப்படுத்தியது. குறிப்பாக அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய பணக்கார மேற்குலக நாடுகளுக்குச் சவாலாக இருக்கக் கூடிய ஒரு சர்வதேச சமூக அமைப்பாக அணி சேரா இயக்கம் மாறி வந்தது. பொருளாதார அபிவிருத்தியிலும் சமூக அரசியல் உறுதிப்பாட்டிலும் சுதந்திரம் சுயாதிபத்தியத்தை நிலை நிறுத்துவதிலும் இவ் அணி சேரா இயக்கம் ஒரு வலிமையான சர்வதேச சமூகப் பாத்திரத்தை வகித்தது. இதற்கு அன்றைய சோஷலிச நாடுகள் வெளியில் இருந்து ஆதரவு கொடுத்தும் வந்தன. ஆனால் அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய முதலாளிய சக்திகள் அணிசேரா இயக்கத்தைச் சீர்குலைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாகச் செயற்பட்டு வந்தன. அவர்களைச் சிதைக்கும் செயற்பாடுகள் சோவியத் யூனியனினதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும் சோஷலிச வீழ்ச்சியுடன் வேகம் பெற்றன. அணிசேரா இயக்கம் என்ற பலமான சர்வதேச சமூகம் பலவீனமடைந்து செயலற்றுப் பெயரளவிலான ஒன்றாகிக் கொண்டது. அவ்வாறான அன்றைய அணிசேரா இயக்கத்தில் அங்கம் பெற்ற ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளே பின்பு மூன்றாம் உலக நாடுகள் எனச் சுட்டப்பட்டன. ஆனால் இம் மூன்றாம் உலக நாடுகள் ஒன்றுபட்டு ஒரு சர்வதேச சமூகம் என்ற நிலையில் அமைப்பு வாயிலாகக்குரல் எழுப்பப் கூடிய நிலை உலகில் இல்லாத ஒரு பலவீன நிலையே இருந்து வருகின்றது. அது மட்டுமன்றி பல்வேறு நிலைகளில் தோற்றுவிக்கப்பட்ட பிராந்திய நாடுகளின் அமைப்புகளும் கூட ஏகாதிபத்திய ஊடுருவல் சூழ்ச்சிகளுக்கு உள்ளாகி தளர்ந்து குரலற்ற நிலையிலேயே இருந்தும் வருகின்றன.

கொலனித்துவத்தின் இறுதிக்காலத்தில் உலகைப் பொருளாதார சமூக பண்பாட்டு அடிப்படையில் வைத்து மேற்குலகம் கிழக்குலகம் என வரையறை செய்து கணிக்கப்பட்டது. பின்பு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் உலகின் மேன் நிலை வல்லரசுகளாகப் போட்டியிட்டு நின்ற சூழலில் உலகம் மூன்றாகப் பிரித்துக் கணிக்கப்பட்டது. அமெரிக்காவும் சோவியத் யூனியனும் முதலாம் உலக நாடுகள் எனவும் மேற்கு ஐரோப்பிய அவுஸ்திரேலிய யப்பான் உள்ளிட்ட முதலாளித்துவ நாடுகள் இரண்டாம் உலக நாடுகள் எனவும் மீதமுள்ள ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் யாவும் மூன்றாம் உலக நாடுகள் என்பதாகவும் கணிப்புப் பெற்றன.

இதற்குப் பின் உலகின் கைத்தொழில் வளர்ச்சி பெற்ற செல்வந்த முதலாளிய நாடுகளை வடக்கு நாடுகள் எனவும் பின்தங்கி வளர்ச்சியடைய வேண்டிய நாடுகளைத் தெற்கு நாடுகள் எனவும் கணிக்கப்பட்டன. இதன் வாயிலாகவே ஜி. எட்டு நாடுகளின் கூட்டு உலகில் உருவாகியது. இவை அமெரிக்கா பிரிட்டன் பிரான்ஸ் இத்தாலி ஜெர்மனி நெதர்லாந்து யப்பான் ரஷியா ஆகியனவாகும். இவ் எட்டு செல்வந்த நாடுகள் எனப்படுபவை ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளாகும். இவை தம்முள் கூடி உலகச் சந்தையை எவ்வாறு கையாள்வது, உலக நாடுகளின் வளங்களை எவ்வாறு கொள்ளையிட்டு தம்முள் சமாதானமாகப் பங்கிடுவது பற்றியே பேசிக் கொள்வார்கள். உலக மக்களிடன் கண்களில் மண்ணைத் தூவ் "கடன் தள்ளுபடி" "வட்டி குறைப்பு" "வறுமை ஒழிப்பிற்கு உதவி" என்று மாய்மாலத் தீர்மானங்களை அவ்வப்போது நிறைவேற்றிக் கொள்ச்

இத்தகைய ஏகாதிபத்திய முதலாளிய நாடுகளும் அவர்களது நம்பிக்கை மிகுந்த எடுபிடிகளும் மட்டுமே "சர்வதேச சமூகம்" எனக் காட்டப் படுகின்றனர். நமது நாட்டு ஊடகங்களும் அரசாங்கமும் போராட்ட இயக்கங்களும் எதிர்க்கட்சிகளும் அரசியல் விமர்சகர்களும் இவர்களையே சர்வதேச சமூகமாகக் கொண்டாடுகிறார்கள். நம் நாட்டு தேசிய இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகம் என்னும் பெயரின் கீழ் யார் தலையிட்டு வந்திருக்கிறார்கள் என்பதை அவதானித்தால் இணைத் தலைமை நாடுகள் என்ற பெயரில் இருந்து வரும் அமெரிக்கா ஐரோப்பிய யூனியன், யப்பான், நோர்வே ஆகிய நாடுகளேயாகும். இந் நாடுகளுடன் இந்தியாவையும் இணைத்துக் கொண்டுவிட்டால் சர்வதேச சமூகம் என்பது முழுமையடைந்து விடும் என்றே கருத்துப் பரப்பப்படுகிறது. இவர்களை யாரும் சர்வதேச சமூகமாகத் தேர்தெடுக்கவில்லை. எவரும் நியமிக்கவும் இல்லை. அவர்கள் நமது நாட்டின் தேசிய இனமுரண்பாட்டை வளர்த்து எரிய வைத்ததில் பிரதான பங்களித்தவர்கள். அதன் ஊடாகத் தாங்களே தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க்கும் தகுதியும் வல்லமையும் உடையவர்கள் எனக் கூறி சர்வதே சமூகம் என்ற முகமூடியுடன் செயலாற்றியும் வருகிறார்கள். அவர்களது ஒரே இலக்கு இலங்கையை மீளவும் மறு கொலனியாக்கம் செய்வதேயாகும். அதன் மூலம் தமது பொருளாதார ராணுவ ஆதிக்கப் பிடிகளை இறுக்கிக் கொள்ளவே நிற்கின்றனர்.

இதற்கு சிங்கள தமிழ் முஸ்லீம் தரப்புகள் யாவும் எவ்வித மறுப்பையும் தெரிவிப்பது கிடையாது. நிலவுடைமைக் காலத்தின் நாடு பிடி மாடு பிடி யுத்தங்கள் தமக்குள் மோதுண்ட சன்டைகள் பின்பு ஐரோப்பிய வெள்ளையர்களுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்து அவர்களின் காலடியில் பட்டம் பதவி செல்வம் பெற்று வாழ்ந்தமைகள் போன்றவற்றின் தொடர்ச்சி வெவ்வேறு வடிவங்களில் தொடர்கிறது. அந்நிய வெள்ளைத் தோல் முன்பாக அடிமை விசுவாசமும் சேவகமும் செய்து வந்த சிங்கள தமிழ் பழைமைவாத மேட்டுக் குடிச் சிந்தனை நடைமுறைகளின் தொடர்ச்சிதான் இன்று "சர்வதேச சமூகம்" என்பதன் மீதான பற்றுப் பாசமாக நம்பிக்கை விசுவாசமாக மேலெழுந்து நிற்கிறது.

அந்நியத் தலையீடுகள் எதுவும் வேண்டாம். இந்த மண்ணின் சொந்தக்காரர்களான நாம் எமது பிரச்சினைகளை எமது எல்லைகளுக்குள் நின்று தீர்த்துக் கொள்வோம். எமது மக்களின் எதிர்காலத் தலைவிதியை எங்களது கரங்களில் ஏந்தி நின்று அமெரிக்க ஐரோப்பிய யப்பானிய சுரண்டல் ஆதிக்கப் பிசாசுகளுக்கோ இந்திய மேலாதிக்கவாதிகளுக்கோ அடிபணியாது முன் செல்வோம் என்று கூற சிங்களத் தரப்போ தமிழர் தரப்போ அல்லது முஸ்லீம் தரப்போ தயாராக இல்லை. இவர்கள் யாவரும் இந்த சர்வதேச சமூகம் என்ற எசமானர்களிடமிருந்து தத்தமக்கான ஆதரவையும் அரவணைப்பையும் பெறவே முன்னிற்கின்றனர்.

புரட்சிகரத் தலைமைகள் உருவாகி முன்னெழுந்து செல்லாதவரை "சர்வதேச சமூகம்" என்ற ஏகாதிபத்திய சக்திகளின் அடிமைகளாகவே நம் நாட்டின் தலைமைகள் யாவும் செயற்பட வேண்டி இருக்கும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# ஐரோப்பிய ஒன்றிய தடையும் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடைவிதித்துள்ளன. அந்நாடுகளில் த.வி.பு இயக்கம் எந்தவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடமுடியாது.

1998 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் ஐரோப்பிய நாடுகள் மெல்லமெல்ல தலையிட்டு 2002 ஆண்டில் நோர்வே சமாதான நடவடிக்கைகளில் அனுசரணையாளர்களாக வந்துவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை விட ஐரோப்பிய நாடுகள் இலங்கையில் தமிழ்மக்களுக்கு விஷேடமான பிரச்சினைகள் இருப்பதாக ஏற்றுக் கொள்வதாகவும் தமிழ் மக்களின் போராட்டத்தில் நியாயம் இருப்பதாகவும் வெளிக்காட்டிக் கொண்டன. தமிழ்மக்களின் பிரச்சினைகளில் ஐரோப்பிய நாடுகள் அனுதாபம் கொண்டனவாக காட்டிக் கொண்டன. அதற்கு பலவிதமான காரணங்கள் இருந்திருக்கலாம். இலங்கைத் தமிழர்களில் அதிகமானோர் ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக இருப்பது முக்கிய காரணமாக இருக்கலாம். அத்துடன் அவற்றின் நிகழ்ச்சி நிரலுக்குட்பட்ட எதிர்பார்ப்புகளும் காரணமாக அமையலாம்

சமாதான நடவடிக்கைகளில் அனுசரணையாளராக நோர்வே இருக்க இணைத்தலைமை நாடுகளாக அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் என்பன வந்து நுழைந்து கொண்டன. படிப்படியாக அமெரிக்கா இணைத்தலைமை நாடுகளில் அந்தஸ்திலிருந்து தலைமை நாடாக சமாதான நடவடிக்கையிலும் மறைமுகமாக கட்டளை இடும் நாடாக மாறிவிட்டது. இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஆகிய நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்து பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்துக் கொண்டன. அண்மையில் கனடா புலிகள் இயக்கத்தை தடைசெய்தது. தற்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் தடை விதித்துள்ளன. அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவே அத்தடை கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஐ.நா. சபையினால் மனித உரிமைகளை மீறுகின்ற நாடுகள் மீது பொருளாதார வர்த்தக தடைகள் கொண்டு வரப்படுவதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. இவ்வாறான தடைகள் தென்னாபிரிக்காவின் வெள்ளை அரசாங்கத்தின் மீது விதிக்கப்பட்டன. இஸ்ரேலுக்கு எதிராகவும் விதிக்கப்பட்டன. அதே வேளை கியூபா, வடகொரியா போன்ற நாடுகள் மீது நியாயமான காரணங்கள் எதுவுமேயின்றி தடைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அயர்லாந்து மக்கள் மீது கொடூரங்களை புரிந்த பிரிட்டன் மீது எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை. இவ்வாறு இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பல விதமான மனித உரிமைகளை அரசாங்கம் மீறும் சம்பவங்கள் இடம்பெறுகின்றபோதும் சர்வதேசரீதியான தடைகளை விதிக்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

1980, 1990 களில் 2000 இல் ஆயுதப்போராட்டங்களில் ஈடுபடும் அமைப்புகள் உள்நாடுகளில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தடைவிதிக்கப்படும் நடவடிக்கைகள் மேலோங்கியுள்ளன. இவ்வாறு தடைகளை விதிக்கும் அரசாங்கம் அவற்றின் அரசியல் நிலைப்பாடு அந்த இயக்கங்கள் குறித்த பார்வை போன்றவற்றை கருத்திக் கொள்கின்றன.

நிக்கரகுவாவில் சண்டனிஸ்டா இயக்கத்தை பேராடும் போது மட்டுமன்றி அவ்வியக்கம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிய பிறகும் கூட அமெரிக்கா தடைவிதித்திருந்தது. ஆனால் சண்டனிஸ்டாவிற்கு எதிராக 'ஹொன்ரா' என்ற அமைப்பை உருவாக்கி நிக்கிரகுவாவில் அமெரிக்காவே வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டது. 'ஹொன்ரா' இயக்கத்தினூடாக போதை வஸ்துகளையும் ஆயுதங்களையும் நிக்குரவாவிற்குள் கொண்டு சென்றது.

1989 இல் முற்றாகவே சோவியத்யூனியனின் சிதைக்கப்பட்ட பின்பு அமெரிக்கா பல போராடும் இயக்கங்களை குறிப்பாக புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கங்களை தடைசெய்தது. பின்னர் அமெரிக்காவிற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்ட போராடுகின்ற அமைப்புகளையும் படிப்படியாக தடைசெய்து வந்தது. அண்மைக்காலமாக அமெரிக்காவிற்கு எதிராக வெளிவெளியான நிலைப்பாட்டை கொண்டிராத அமைப்புகளையும், அமெரிக்காவிற்கு ஆதரவான அமைப்புகளையும் தடைசெய்து வருகிறது.

குர்திஷ் விடுதலை இயக்கத்தை ஐரோப்பிய நாடுகள் தடைசெய்தது மட்டுமன்றி சில ஆண்டுகளுக்கு முன்பு அதன் தலைவர் ஒகேலானை இத்தாலி கைதுசெய்து துருக்கியிடம் கையளித்தது. எனவே தடை என்பது பல விடயங்களை உள்ள டக்கியதாகும். அந்நாடுகளில் நிதிசேகரிப்பு, பிரசாரம் போன்ற அரசியல் வேலைகளை முடக்குவது மட்டுமன்றி சம்மந்தப்பட்ட இயக்கத்தினரை கைது செய்து இலங்கைக்கு நாடுகடத்தும் அளவிற்கும் விரிவடையும்.

போராட்டங்களுக்கு வெளிநாட்டு மக்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதாகும். வெளிநாட்டு அரசாங்கங்களை தந்திரோபாயமாக பயன்படுத்திக் கொள்வதும் அவசியமாகலாம். இங்கு அமெரிக்கா, கனடா, பிரிட்டன் இந்தியா தற்போது ஐரோப்பிய ஒன்றியம் என்பன புலிகள் இயக்கத்தின்

**மிக்கல்**

மீது விதித்துள்ள தடை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு எதிராக செய்யப்படும் ஏகாதிபத்திய சதியாகும். அப்போராட்டம் முன்னெடுக்கப்படும் விதம், கொள்கை வேலைத்திட்டம் என்பன விமர்சனங்களுக்குரியனவாக இருப்பினும் அப்போராட்டத்தை நசுக்குவதற்கு அல்லது முடக்குவதற்கு ஏகாதிபத்திய நாடுகள் அல்லது பலம் பொருந்திய நாடுகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை எவ்வகையிலும் அங்கீகரிக்க முடியாது. இத்தடை அடக்குமுறை அரசாங்கத்திற்கு வலுசேர்ப்பதாகவும் பௌத்த சிங்கள பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளை மகிழ்வூட்டுவதாகவும் இருக்கிறது.

சர்வதேச ரீதியாக மனித உரிமைகள் பற்றி எவ்வளவு தான் பேசப்பட்டபோதும் நாடுகளுக்கும் நாடுகளுக்குமிடையேயான உறவு என்பது அரசிற்கும் அரசிற்குமிடையேயான உறவே ஆகும். அதில் மக்களின் நியாயமான கோரிக்கைகள் அதிகமாக இரண்டாம் பட்சமானதாக்கப்பட்டுவிடும். இதனை விளங்கிக் கொண்டே வெளிநாட்டு அரசாங்கங்களை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகப் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்க வேண்டும். இதில் வீணான கனவு காணக் கூடாது. சுயநிர்ணய உரிமைக்கு ஏகாதிபத்தி யம் எப்போதும் துணை புரிவதில்லை. அதன் நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டு அதற்கு ஆதரவு போன்று காட்டிக்கொள்ளும். எப்போதும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டையே ஏகாதிபத்தியம் எடுக்கும்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

# யுத்தச் சந்தையில் ஊடக வியாபாரம் ஒருபுறம் இலாபம் மறுபுறம் இனவாதம்

கடந்த ஆறு மாதங்களாக வடக்கு கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்று வரும் கொலைகள், கடத்தல்கள், தாக்குதல்கள் குறித்து எமது நாட்டின் சிங்கள, தமிழ், ஆங்கில ஊடகங்கள் மக்களுக்கு வழங்கி வருகின்ற செய்திகள் மக்களுக்கு நம்பிக்கை தருவதாக இல்லை.

தேசிய இனப்பிரச்சினையைப் பற்றியும் அதன் விளைவாக ஏற்பட்டுட்டுள்ள யுத்த மோதல்கள் கொலைகள் தாக்குதல்கள் அந்நிய தலையீடுகள் பற்றி தமிழ்ப் பத்திரிகைகள் ஒரு விதமாகவும் சிங்களப் பத்திரிகைகள் மறு விதமாகவும், ஆங்கிலப் பத்திரிகைகள் வேறுவிதமாகவும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகள் இயக்கத்தின் மீதான தடை பற்றி தமிழ் பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகின்றபோது அந்நாடுகளின் ஆசீர்வாதமில்லாமல் எதுவும் நடக்காது என்பதை வலியுறுத்தி அந்நாடுகள் த.வி.பு. இயக்கத்தின் மீது தடை விதித்தாலும் அந்நாடுகளைத் தமிழ் மக்கள் எதிர்க்கக் கூடாது என்றும் அந்நாடுகளை நம்பியே நாம் செயற்பட வேண்டும் என்ற அடிப்படையில் அடிமை விசுவாசமாகவே செய்திகளை வெளியிட்டு வருகின்றன. சில தமிழ்ப் பத்திரிகைகள் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு போதும் தடையை விதிக்காது என்றும் ஒருவகைக் குருட்டு நம்பிக்கையுடன் எழுதுகின்றன.

ஆங்கிலப் பத்திரிகைகளோ ஐரோப்பிய ஒன்றியத் தடையின் காரணமாக புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு செல்லும் நிலை ஏற்படுமென்றும், பேச்சு வார்த்தைக்கு கொண்டு செல்வதற்கான நிர்ப்பந்தமே இத்தடை என்றும் எழுதுகின்றன. அரசாங்கம் எல்லாவற்றையும் அள்ளிக் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றது. ஆனால் புலிகள் இயக்கம் தான் அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்து வருவதாகவும் இத்தடை புலிகள் இயக்கத்திற்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதாகவும் எழுதிவருகின்றன.

சிங்களப் பத்திரிகைகள் ஐரோப்பிய ஒன்றியத் தடையுடன் தமிழர் போராட்டமே முற்றுப் பெற்றுவிட்டது போல் உச்சகத்தொனியில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. அதனால் இத்தடையுடன் சேர்த்து அரசாங்கம் புலிகள் இயக்கத்துடன் யுத்தம் செய்து இராணுவ ரீதியாக அவ்வியக்கத்தை தோற்கடித்து விட முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் செய்திகளை வெளியிடுகின்றன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் அமெரிக்காவும் இந்தியாவும் சிங்கள மக்களின் இரட்சகர்களாக காட்டப்படுகின்றன. நோர்வேயும், ஜப்பானும் துரோகிகளாகச் சித்தரிக்கப்படுகின்றன.

தமிழ்ப் பத்திரிகைகளை பொறுத்துவரை ஒரு சம்பவம் பற்றிய செய்தியோ அல்லது அதற்கான வியாக்கியானங்களையோ எழுதும் போது தமிழ்த் தேசியத்தின் பழமைவாத ஆதிக்க கண்ணோட்டத்தில் அமைந்து கொள்வதையே காண முடிகிறது. ஆனால் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவரும் சம்பவங்கள் செய்திகளில் உண்மைத் தன்மைகள் இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆங்கிலப் பத்திரிகைகள் அரசாங்கத்தின் உத்தியோக பூர்வமான அறிக்கைகளை ஆதாரமாக கொண்டே பெருப்பாலான செய்திகளை வெளியிடுகின்றன. அதற்கு மாறாக சில செய்திகள். கட்டுரைகள் வெளியிடப்பட்டாலும் பேரினவாத ஆதிக்க அடிப்படையிலேயே அவை வெளியிடப்படுகின்றன. தேசிய இனப்பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினையாகக், காட்டி பாதுகாப்பிற்கு சவாலானதாகவே காட்டுகின்றன.

சிங்களப் பத்திரிகைகள் சம்பவங்கள் பற்றிய வியாக்கியானங்களை மட்டுமல்ல சம்பவங்கள் பற்றியே உண்மைக்குப் புறம்பாகவே செய்திகள் வெளியிடுகின்றன. சிங்கள இனவாதத்தை தொடர்ந்து தூண்டி உயர்வர்க்க நலன்களைப் பேணி நல்ல வியாபாரம் செய்வதையே அவை நோக்காகக் கொண்டுள்ளன.

தற்போதைய யுத்த நிலைமை எவ்வாறு ஏற்பட்டது என்பதற்கு




சிங்களப் பத்திரிகைகளும், ஆங்கிலப்பத்திரிகைகளும் ஏறக்குறைய ஒரே விதமான காரணங்களையே கூறுகின்றன. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் 4வது ஈழப்போரை தொடங்கி விட்டது. அதனாலேயே தற்போதைய நிலை ஏற்பட்டது என்றும் கூறுகின்றன. உதாரணத்திற்கு மே 14 ஆம் திகதி சீனன் குடாவில் பௌத்த விகாரை மீது புலிகள் இயக் கத்தினர் (பயங்கரவாதிகள் என்று அவை எழுதியுள்ளன) கைக்குண்டு தாக்குதல் செய்தனர். மட்டக்களப்பில் புலிகள் இயக்கம் நடத்திய கைக்குண்டு தாக்குதலில் ஒரு இராணுவ வீரர் காயமடைந்தார். வவுனியாவில் இராணுவ வீரர்கள் மீது புலிகள் இயக்கம் துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளது. மூதூரில் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மே 15 பொத்துவிலில் விஷேட அதிரடிப்படையினர் கொண்டு சென்ற தண்ணீர் தாங்கி தாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கொக்குவில் புலிகள் இயக்க துப்பாக்கி சூட்டினால் இரண்டு இராணுவ வீரர்களுக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது. நெல்லியடியில் இராணுவ டிரக் கிளைமோர் தாக்குதலுக்குட்பட்டது. அத்துடன் ரோந்து சென்ற இராணுவ வீரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

மே 16 ஆணைப்பந்தியில் புலிகள் இயக்கம் இராணுவத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு தாக்குதலினால் இரண்டு வீரர்கள் காயமடைந்தனர் தம்பலகாமத்தில் கிளைமோர் தாக்குதலில் ஒரு ஊர்காவல் படைவீரர் கொல்லப்பட்டார். இரண்டு பொலிஸார் காயமடைந்தனர். நல்லூரில் இராணுவத்தின் மீது புலிகள் இயக்கம் கைக்குண்டு தாக்குதல் மேற்கொண்டது.

மே 17 பொத்துவில் கல்முனை வீதியில் கிளைமோர் தாக்குதல் நடைபெற்றுள்ளது. உடுப்பிட்டியில் நடத்தப்பட்ட குண்டுதாக்குதலினால் ஒரு இராணுவ வீரர் காயமடைந்தார்.

இவ்வாறு செய்திகளை வெளியிட்டு அடுத்த 4வது ஈழப்போர் தொடங்கிவிட்டதாக ஆங்கில பத்திரிகைகளும் சிங்கள பத்திரிகைகளும் ஒருபக்கமாக எழுதுகின்றன.

மட்டக்களப்பில் ஜோசப் பராராஜசிங்கம் எம். பி கொல்லப்பட்டமை, திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்டமை, அங்கு சுடரொளி பத்திகையாளர் சுகிர்தராஜன் கொல்லப்பட்டமை. பின்பு திருகோணமலையில் சாதாரண மக்கள் தாக்கப்பட்டமை, விக்னேஸ்வரன் கொல்லப்பட்டமை. புத்தூரில் 5 பேர் கொல்லப்பட்டமை மந்துவிலில் 7 இளைஞர்கள் கடத்தப்பட்டமை நெல்லியடியில் 7 பேர் கொல்லப்பட்டமை அல்லைப்பிட்டியில் 13 பேர் கொல்லப்பட்டமை போன்ற தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட தாக்குதல்களை புலிகள் இயக்கமே செய்தது என்று சில சிங்களப் பத்திரிகைகள் கூசாமல் செய்தி வெளியிட்டுள்ளன. இச்சம்பவங்களும் போர் சூழ்நிலையை தோற்றுவித்தன என்பதை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் கண்டு கொள்வதில்லை. சிங்கள பேரினவாதத்தை வளர்த்து வியாபாரம் செய்வதே அவற்றின் நோக்கம். அதே வேளை பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ்ப்பத்திரிகைகள் குறுகிய தமிழ் தேசியவாதக் கட்டுப்பாட்டுடன் செயற்படுவதாகவே காண படுகின்றன. அவை தமிழ் இன உணர்வை தூண்டி தமிழ்மக்களை பொய்மைக்குள் மூழ்கடித்து ஒருவழிப்பாதையில் வழிநடக்கச் செய்கின்றன. இது வியாபாரத்திற்கு உகந்தது என்பதாகவும் உயர்வர்க்க நலன்களைப் பேணும் வகையிலுமே செயலா ற்றிய வருகின்றன.

மாற்று பத்திரிகைகள் என்று இயங்கிய என். ஜி. ஒக்களின் சிங்களப் பத்திரிகைகளும் நின்று போய்விட்டன. அவையும் நின்று போகும் தருவாயில் சிங்கள உணர்வை வெளிப்படுத்துவனவாக செய்திகளை வெளியிட்டன என்பதை மறந்துவிட முடியாது.

ஊடகங்கள் இன்றைய உலகமயமாதல் சூழ்நிலையில் அவற்றின் வியாபாரத்தை விரிவாக்க யுத்தச் சந்தையில் மட்டுமன்றி தேசிய இனப்பிரச்சினையிலும் சரியான பக்கத்தையும் காட்டுவதில்லை. இன்றைய நிலையை மேலும் குழப்பமாக்குகின்ற நடவடிக்கைகளிலேயே அவை ஈடுபட்டுள்ளன. அவ்வூடக நிறுவனங்கள் நடத்துவது வியாபாரம் என்றாலும் அவற்றில் தொழில் புரியும் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றனர். அச்சுறுத்தப்பட்டுள்ளனர். உண்மைகளை வெளியே கொண்டு வந்தார்கள் என்பதற்காக அவர்கள் இலக் காகின்றனர். ஆனால் ஊடக நிறுவனங்களின் வியாபாரம் நன்றாகவே நடக்கிறது.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 1

## பேராசிரியர் சி.சிவசேகரம்

"பண்பாட்டின் பேராலே பல சோலி எங்களுக்கு" என்று கவிஞர் முருகையன் பொருத்தமாகச் சொல்லி வைத்து முப்பத்தைந்து வருடங்கட்கும் மேலாகிவிட்டது என்று நினைக்கிறேன். இன்னமும் நாங்கள் எங்கள் முதுகின் பாரம் இறக்கி முன்னேறக் கற்றோமா என்று தெரியவில்லை.

தமிழ்ச் சமூகத்தின் பெரிய சுமையாகவுள்ளது தமிழினது பழமையோ தமிழ்ப் பண்பாட்டினது பழைமையோ அல்ல. ஆனால் தமிழின் பழமையும் தமிழ்ப் பண்பாட்டின் பழமையும் பற்றிய புனைவுகள் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பெரியதொரு தடையாகிவிட்டன. இவை கவிஞர் முருகையன் சொன்னதுபோல, நாம் கீழிறக்க வேண்டிய சுமைகள்.

மரபு என்ற பேரில் சமூக மாற்றத்தை மறிக்கிற தன்மை எல்லாச் சமுதாயங்களிலும் இருந்துள்ளது. மரபு என்பது என்றென்றைக்கும் மாறாமல் சமுதாயம் உருவான நாள் தொட்டு இருந்து வருகிற ஒன்றல்ல. மரபு என்பது மொழி, சமயம், சடங்குகள், சம்பிரதாயங்கள், சமூக உறவுகள், சமூக நடத்தை, கலை, இலக்கியம், கல்வி ஆகிய பல வேறு துறைகளிலும் ஊடுருவி நிற்பது. குறிப்பிட்ட ஒரு துறை சார்ந்த மரபு அத்துறையில் கட்டுப்பாட்டையும் உறுதி நிலையையும் பேண உதவுகிறதுடன் சமூகத்தின் உறுதி நிலைக்கும் உதவுகிறது. இது மரபின் சாதகமான பக்கம். மாறிவருகிற சமூகச் சூழலுக்கு முகங்கொடுக்க இயலாத விதமாக மாற்றங்களை மறித்து நிற்கிற ஒரு பண்பின் விளைவாகச். சமுதாயத்திற்கு நன்மையா

## பண்பாட்டின் பேரிலான சுமைகள்

னதும் காலப்போக்கில் அவசியமானதுமான சமூக விருத்திக்குத் தடையாகவும் மரபு செயற்படுகிறது. இது மரபின் பாதகமான பக்கம்.

மனிதர் போல மனித சமுதாயமும் ஒரு புறம் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளது. இன்னொரு புறம் சூழ்நிலையின் தேவைகளால் பழக்கத்திலிருந்து விடுபட்டுக் கொள்கிறது. எந்தவொரு நடைமுறையும் தனிமனிதருக்கும் சமூகத்திற்கும் நன்மையானதா, தீமையானாதா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது. குறிப்பாக. ஒரு சமூகம் நெருக்கடிக்குள்ளாகும் போது பலவேறு சமூக நடைமுறைகளும் மீள் விசாரணைக் குட்படுகின்றன. சில துணிவாக மீறப்படுகின்றன.

மரபு என்பது கிரமமான முறையில் சமூக வளர்ச்சியையொட்டி மாறி வருகிறது என்பதுடன், அடிப்படையான மாற்றங்கள் நிகழும் போது மரபில் பெரும் மாற்றங்களும் முறிவுகளும் நிகழுகின்றன. இங்கு நாம் கவனிக்க வேண்டியது ஏதெனில், வரலாற்று நோக்கில் மரபு என்பது நெகிழ்வான தன்மையுடயது. சமூகமொன்றன் சமகால நோக்கில் குறுகியகாலத்தில் அதில் ஏற்படும் மாற்றங்கள் எளிதாகத் தெரியாததால் அது மிகவும் விறைப்பானதும் கட்டுப்பாடானதுமாகக் காணப்பட இடமுண்டு. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையின்" என்பது மொழிக்கு மட்டுமில்லாமல் சமூக நடைமுறை அத்தனைக்கும் பொருந்துகிற உண்மை. எனினும் பழையன எல்லாம் தாமாகக் கழிவதும் இல்லை, புதியன எல்லாம் எளிதாகப் புகுவதுமில்லை. மாற்றங்கள் எல்லாமே ஏதோ வகையான போராட்டங்களின் மூலமே இயலுமாகின்றன.

பழையன கழிவது என்பதைப் பழையன சுவடில்லாமலே கழிவது என்ற நோக்கில் நாம் கொள்ள இயலாது. காலத்தால் வழக்கொழிந்து போன சில சமூக நடைமுறைகள் பல நூறு ஆண்டுகளின் பின்பும் சடங்குகளின் வடிவில் தொடர்கின்றன. அச் சடங்குகள் காலத்துடன் மாற்றமடைந்தாலும் பழைய சமூக நடைமுறையுடனான தொடர்பைப் பல சமயங்களில் அடையாளங் காணலாம். இது சமூகத்தின் மீது மரபின் வலுவான பிடியின் வெளிப்பாடு எனலாம்.

இன்னொரு புறம் பண்பாட்டின் பேரால் மரபுகள் சில புனையப்படுகின்றன. ஒரு சமுதாயம் நெருக்கடிக்குள்ளாகி அழிவையும் இடப்பெயர்வையும் அடையாள இழப்பையும் எதிர்நோக்கும் போது, அச் சமுதாய அடையாளத்தை வற்புறுத்தும் நோக்கில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நடையுடைபாவனைகளும் பழமையில் இருந்தும் பிற சமூக நடைமுறைகளிலிருந்தும் பெற்ற விடயங்களைக் கொண்டு வலிந்து புனையப்படுகின்றன. இப் புனைவுகளில் ஒரு சமூகத்தின் தேவையை விட அச் சமூகத்தின் ஆதிக்கத்தில் உள்ள அல்லது ஆதிக்கத்தை வேண்டுகிற ஒரு பிரிவினரது நலன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எந்தவொரு அயல் ஆதிக்கத்தினின்றும் ஒரு சமூகம் விடுதலை பெறுவதாயின் அரசியல், பொருளாதார, ராணுவ ஆதிக்கங்களைத் தூக்கி எறிவது மட்டும் போதாது. அந்த ஆதிக்கத்தின் விளைவாக அச் சமூகத்தில் உருவான மேலாதிக்கச் சிந்தனையையும் உதறி எறிய வேண்டும். இறுதியாகச் சொன்ன விடுதலை இல்லாமல் அரசியல், பொருளாதார, ராணுவ ஆதிக்கத்திலிருந்து பெற்ற விடுதலை அரை குறையானதாகவே அமைவதுடன் பழைய அடிமைத்தனத்தின் இடத்தில் புதிய அடிமைத்தனம் ஒன்று வருவதற்கு வழி செய்யும். எனினும் சமூகத்தில் மேலாதிக்கத்திலுள்ள சிந்தனையை மாற்றுவது மற்ற எல்லாவற்றையும் விடச் சிக்கலானது. அதற்கான செயற்பாடுகள் பல வேறு தளங்களிலும் மக்களுடைய பங்கு பற்றுதலுடன் நிகழ வேண்டும்.

மூட நம்பிக்கைகள் எனப்படுவனவற்றில் ஒரு பகுதி சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பானது. அதைவிட மதமும் சமுதாய வழக்கிலுள்ள சோதிட, மாந்திரிக நடைமுறைகளை மட்டுமன்றித் தர்க்க ரீதியாக நியாயப்படுத்தக் கூடிய மருத்துவ, கட்டிடவியல் நடைமுறைகளை ஒட்டியும் உருவாகின்றன. எந்த நடைமுறையும் கேள்வியின்றி ஏற்கப்பட்டுக் கண்மூடித்தனமாகப் பின்பற்றப்படும் போது அது மூடநம்பிக்கைகளை இலகுவாக உள்வாங்கிக் கொள்கிறது. மூட நம்பிக்கைகள் பல காலங் காலமாக இருந்து வந்தாலும் பழைய மூட நம்பிக்கைகளின் இடத்தில் புதிய மூட நம்பிக்கைகள் வருவதும் வழக்கொழிந்து போன மூட நம்பிக்கைகளுக்குப் புத்துயிரூட்டப்படுவதும் நாங்கள் காணக்கூடிய விடயங்கள்தாம். இவற்றுட் கணிசமானவை சமூதாயப் புல்லுருவிகளின் மூலம் உட்புகுத்தப்பட்டாலும் அவற்றை ஏற்கும் மன நிலை ஒரு சமுகத்துள் இருக்கும் வரை அவற்றை முறியடிப்பது சமூக மட்டத்தில் விஞ்ஞான ரீதியான சமூக மேம்பாடு சார்ந்த சிந்தனைகளை வேரூன்றச் செய்வதன் மூலமே இயலுமானது.

சமூகக் கேடானதும் முன்னேற்றத்திற்குத் தடையானதுமான நடைமுறைகளை அடையாளங் காணுவது சிரமமானதல்ல. அவற்றுக்குப் பின்னாலுள்ள சிந்தனைகளது வர்க்க இயல்பையும் வர்க்க நலன்களையும் அடையாளங் காணுவதும் மக்களுக்கு ஏற்புடைய முறையில் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்திப் பரவலாக்குவதும் கடினமான பணிகள்.

இவ்வாறான பணிகள் வெவ்வேறு காலங்களில் சமூகச் சீர்திருத்த பகுத்தறிவு இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டுச் சமூகத் தீங்கான நடைமுறைகள் பல மட்டுப்படுத்தவும் தடுக்கவும் பட்டுள்ளன. எனினும் நோய்க் கிருமிகளும் நச்சுப் பூண்டுகளும் போல அவை மீண்டும் உயிர்த்தெழுகின்றன. உடல் நலத்தைப் பேண மருந்துகளை விட முக்கியமானது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு வலிமை. அது போல, ஒரு சமூகம் தன்னைத் தற்காத்துக் கொள்ளும் வலிமையை விருத்தி செய்யாதவரை, எந்தவிதமான சட்ட விதிகளாலும் தண்டனைகளாலும் சமூகச் சீரழிவுச் சக்திகளைத் தோற்கடிக்க இயலாது.

இனி வரவுள்ள கட்டுரைகளில் பண்பாடு என்றால் என்ன என்பது பற்றியும் பண்பாடு பற்றி நமக்குள் நிலவுகிற குழப்பமான சிந்தனைகள் பற்றியும் பண்பாட்டின் பேரால் சமூகத்தில் ஆதிக்கஞ் செலுத்துகிற பிற்போக்குத்தனங்கள் பற்றியும் பண்பாட்டின் பேரால் தொடரும் சமூகக் கொடுமைகள் பற்றியும் அவற்றை வென்று மனித விடுதலையை உறுதிப்படுத்தும் வழிகள் பற்றியும் புதிய பண்பாட்டுக்கான தேவை பற்றியும் கவனிப்போம்.

# சிவில் சமூகமும் என். ஜி. ஓ சமூகமும்

## திருமுகன்

சிவில் சமூகம் என்ற கருத்தாக்கம் முதலில் இத்தாலிய மாக்ஸியச் சிந்தனையாளரும் ஃபாஸிஸ எதிர்ப்புப் போராளியுமான அந்தோனியோ கிராம்ஸ்ச்சியால் முன்வைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டது. அவர் அரசு யந்திரத்தின் கருவிகளாகச் செயற்படுகிறவர்களையும் அதிகாரத்துடனும் தொடர்புடையவர்களையும் விலக்கி எஞ்சியுள்ள சமூகத்தை சிவில் சமூகமென அடையாளப்படுத்தி அச் சமூகத்தில் ஆதிக்கம் செய்கிற மேலாதிக்கச் சித்தாந்தம் பற்றியும் சமூக மாற்றம் பற்றியும் விரிவாக ஆராய்ந்த முக்கியமான சிந்தனையாளராவார். அரசியல் ஆய்வுகளில் சிவில் சமூகம் என்ற சொற்றொடர் 1980கள் வரை பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. சிவில் சமூகம் என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு அமைப்பு என்ற பொருளில் கிராம்ஸ்ச்சி என்றுமே பயன்படுத்தவில்லை.

இந்தச் சொற்றொடர் 1980களில் பெருமளவும் அரசியலிலிருந்து மக்களை அந்நியப்படுத்துகிற நோக்குடன் பரவலாக்கப்பட்டது. இன்று ஏகாதிபத்தியத்தின் முகவர்களாக, அல்லற்படும் சமூகத்தின் உயிர்ச்சத்தை உறுஞ்சிச் சொகுசு வாழ்க்கை வாழும் என்.ஜி.ஓ.புல்லுருவிகள் சிவில் சமூகம் என்பதை இரண்டு நோக்கங்கட்காகப் பயன்படுத்துகின்றனர். முதலாவது பொது மக்களை அரசியலினின்று தனிமைப்படுத்துவது. மற்றது சிவில் சமூகத்தின் சார்பில் பேச வல்லவர்களாகத் தம்மை நிலை நிறுத்துவது.

**சிவில் சமூகம் என். ஜி. ஒக்கள் என்பவை மக்களுக்கான அரசியலை மறுக்கின்ற அமைப்புகளேயாகும்**

சிவில் சமூகம் என்ற பொது அடையாளத்தின் மூலம் சமூகத்தின் வர்க்க வேறுபாடுகளையும் பலபேரின் உழைப்பை ஒரு சிலர் சுரண்டுவதால் ஏற்படுகிற முரண்பாடுகளையும் மூடி மறைக்க என்.ஜீ.ஓக்கள் தீவிரமாக முயலுகின்றனர். சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு அதிகாரத்துவம் வழங்குவது, சிவில் சமூகத்தின் குரலை வலுவூட்டுவது என்றவாறான புனைவுகள் மூலம் என்.ஜீ.ஓக்கள் செய்ய முயல்வது என்ன? தமது ஆளுமைக்குட்பட்ட சமூகப்பிரிவினருக்கு உதவி வழங்குகிற பேரில் அவர்களது சுய முயற்சிக்குக் குழிபறிக்கிறார்கள். என்.ஜீ.ஓ நிதியுதவியில் தங்கியிருக்கும்படி உதவி பெறும் சமூகங்கள் பழக்கப்படுத்தப்படுகின்றன. சமூகங்களுள் என்.ஜீ.ஓக்களால் உருவாக்கப்படுகிற தலைமைத்துவம் என்பது என்.ஜீ.ஓக்களிடம் உயர்ந்த ஊதியம் பெற்று மக்களை அரசியலிலிருந்து விலக்குகிற பணியை முன்னெடுக்கும் எடுபிடிகளையே தோற்றுவிக்கிறது. இந்தக் கூலிப்படைகள் செய்கிற சீரழிவு வேலைகள் பற்றி இப்போது நிறையவே எழுதப்பட்டுள்ளன. அண்மையில் "உதவி என்ற பேரில் உபத்திரவம்" என்ற தலைப்பில் பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை ஒன்று எல்லாரும் படிக்க உகந்தது.

வெகுசன இயக்கங்கள் செயற்பட வேண்டிய இடைவெளியை என்.ஜீ.ஓக்கள் எப்படித் தங்களுடையதாக்க முடிகிறது என்பது நம் கவனத்துக்குரியது. சிவில் சமூகம் என்ற பேர் என். ஜீ. ஓக்கள் அணிந்து கொள்ளுகிற ஒரு முகமூடி என்பதை நாம் கவனிக்க வேண்டும். அது உண்மையான சிவில் சமூகத்திற்கு அரசியல் செயற்பாட்டை மறுக்கும் நோக்குடன் பாவிக்கப்படுகிறது.

எல்லா என்.ஜி.ஓக்களும் ஒரே வகையானவையல்ல. சிலவற்றின் மோசடிகள் அப்பட்டமானவை. வேறு சில மிகவும் தந்திரமானவை. என்றாலும் எல்லா என்.ஜீ.ஓக்களும் பொருளாதார வசதியுள்ள நாடுகளில் இருந்து நிதியைப் பெறுகின்றன. இவற்றிற் பெரும்பாலானவற்றின் தாய் நிறுவனங்களும் நிதி வழங்கும் அமைப்புக்களும் நேரடியானதும் மறைமுகமானதுமான அந்நிய அரச கட்டுப்பாட்டுக்கும் நெருக்குவாரங்கட்கும் உட்பட்டவை. பல அமைப்புக்களின் பின்னால் சி.ஐ.ஏ. போன்ற அந்நிய அரசாங்க உளவு- குழிபறிப்பு அமைப்புக்களின் முகவர்கள் செயற்படுகின்றனர். பொதுமக்களிடமிருந்து நிதி பெறுகிற என். ஜீ. ஓக்களும் தமது அரசாங்கங்களது கட்டுப்பாடுகட்கும் அயல் விவகாரக் கொள்கைகட்கும் முரணாக எதையும் செய்ய முடியாது.

என். ஜி. ஓக்களின் செயற்பாட்டை இயலுமாக்குவதற்கு முதலில் பின்தங்கிய பொருளாதார நிலையில் உள்ள நாட்டில் சமூக நலன் பணிகளில் அரசாங்கத்தின் பங்கு குறைக்கப்பட்டு முடியுமானால் இல்லாமலாக்கப்படுகிறது. பல நாடுகளில் பொருளாதாரச் சீர்குலைவுக்குக் காரணம் உலகின் ஏகாதிபத்தியச் சந்தையில் விலைகளையும் சந்தை நிலவரங்களையும் வலிய முதலாளிய நாடுகள் தீர்மானிப்பதாகும். அயற் சந்தையில் தமது ஏற்றுமதிகளின் விலை விழும்போது விலைச் சரிவை ஈடுகட்ட மேலும் உற்பத்தி செய்து அயற்சந்தை மீது தங்கியிருக்கும் படி நாடுகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன. அப்படியும், ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதிச் செவுகள் கூடுகின்றன. நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மூலதனம் தேவைப்படுகிறது. எனவே நாடுகள் கடனாளிகளாகின்றன. கடன் வழங்கும் நாடுகளும் அவற்றை விட முக்கியமாக அந் நாடுகளின் முகவர்களுமான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை கடனை மீட்க இயலாது தடுமாறும் நாடுகளின் வட்டியைச் செலுத்த மேலும் கடன் வழங்கிக் கடன் சுமையை ஏற்றுகின்றன. அதே வேளை, அதிக கடன் வழங்குவதற்கு முன் நிபந்தனையாகப் பலவேறு "சீர்திருத்தங்கள்" முன்வைக்கப்படுகின்றன. தனியார்மயமாக்கல் கல்வி, உடல் நலம், சமூக நலன் போன்ற துறைகளில் அரசாங்கச் செலவைக் குறைத்தல் என்பன இவற்றுள் முக்கியமானவை.

அரசாங்கங்கள் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளூர் அரசியல் நெருக்குவாரங்கட்கும் இடையே நெரிபட்டு முடிவில் வேறு வழியின்றிச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துகின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துமுகமாக இடதுசாரி இயக்கங்களை ஓரங்கட்டுகிற விதமாக பேரினவாத அரசியல் போன்றவையும் மதவெறியும் கிளறிவிடப்படுகின்றன. தொழிற்சங்கங்கள் போன்ற அமைப்புக்களின் வலிமையைப் பறிக்கும் விதமாகத் தொழிலாளர் உரிமைகட்கு ஆப்பு வைக்கிற காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டங்களை மாற்றியும் தொழிற்சங்க உரிமைகளற்ற அயல் மூலதனக் கம்பனிகளை நிறுவியும் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையைச் சீர் குலைத்தும் தொழிலாளரது போராட்ட வலிமை நசிவுக்குட்படுத்தப்படுகிறது.

வறுமை, வேலையின்மை போன்ற பிரச்சனைகளும் வரட்சி, சுனாமி, வெள்ளம், புயல் போன்ற அனர்த்தங்களும் தலைதூக்கும் போது மக்கள் தமது ஒற்றுமையாலும் சரியான சமூக- அரசியல் வழிகாட்டல்களாலும் பிரச்சனைகளைத் தீர்க்க இயலாத விதமாக என்.ஜி.ஓ நிதி குறுக்கிடுகிறது. அரசாங்கத்திடம் பொருளாதார வசதி போதாத சூழ்நிலையில், துறைகள் வரை என்.ஜி.ஓக்களின் ஊடுரு

அரசாங் கமே என்.ஜி.ஓக்களின் குறுக்கீட்டை ஒரு வசதியான குறுக்கு வழியாகக் கையாளுகிறது. நேரடியாக அந்நிய அரசாங்கங்க உதவி போலில்லாது, பன்னாட்டுத் தரும ஸ்தாபனம், உள்ளூர் தருமஸ்தாபனம் என்ற விதமான ஏற்பாட்டுகளின் கீழ், மக்கள் சந்தேகப்பட இயலாத விதமாகக்

தொடர்ச்சி 9ம் பக்கம்......

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# கருணாநிதி வந்தாலென்ன ஜெயலலிதா போனாலென்ன?

இம்முறை தமிழ்நாடு சட்டசபைத தேர்தலில் எந்தத் தரப்பு வென்றிருந்தாலும் அது குறித்து மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவிக்கக் கூடிய மனநிலையில் ஈழத்துத் தமிழ் நாளேடுகள் இருந்தன என்றே நினைக்கிறேன். கருணாநிதியின் வெற்றியை ஜெயலலிதாவின் தோல்வி என்று கொண்டாடியது போல ஜெயலலிதா வென்றிருந்தால் அதைக் கோபால சாமியின் வெற்றி என்று அவர்கள் கொண்டாடியிருப்பார்கள். மாறாக கருணாநிதியின் வெற்றியை கோபாலசாமியின் தோல்வி எனச் சிங்களப் பேரினவாத ஏடுகள் கொண்டாடின. ஜெயலலிதா வென்றிருந்தால் அதைத் 'தமிழர் ஆதரவு நிலைப்பாடுள்ள' கருணாநிதியின் தோல்வி என்று கொண்டாடியிருப்பார்கள். நமது நாட்டில் நடக்கும் போரிற் போன்று, எதிலும் எவருமே தோற்பதில்லை, மக்களைவிட; எவருமே வெல்லுவதில்லை, அந்நிய மேலாதிக்கவாதிகளை விட.

மேலோட்டமாகப் பார்க்கும் போது தி.மு.க தலைமையிலான அணி அமோக வெற்றியீட்டி அ.தி.மு.க தலைமையிலான அணியை நிர்மூலமாக்கியுள்ளது போலத் தோன்றலாம். இவ்வாறான வெற்றிகள் தேர்தல்களில் முன்னர் இரண்டு கட்சிகளும் பெற்றவைதாம். ரஜீவ் காந்தி கொலையின் விளைவாக ஏற்பட்ட சிறு விகிதாசாரப் பெயர்வும் ஜெயலலிதா முன்னின்று நடத்திய வளர்ப்பு மகனின் ஆடம்பரத் திருமணமும் பிற நடவடிக்கைகளும் ஏற்படுத்திய சிறிய பெயர்வும் ஆசன எண்ணிக்கையில் பயங்கரமான வீழ்ச்சிகளைக் காட்டின. இது இலங்கையில் 1977 வரை நடந்த தேர்தல்களிலும் காணப்பட்ட விடயமே. உற்று நோக்கினால், தமிழக தேர்தல் அரசியலில் கடந்த முப்பது ஆண்டுகளில் கட்சிகளின் ஆதரவுத் தளங்களில் பாரிய மாற்றம் நிகழ்ந்துள்ளதாகக் கூற இயலாது. எம்.ஜி.ராமச்சந்திரனின் தனிப்பட்ட செல்வாக்கின் மீதும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் கருணாநிதி மீதான அதிருப்தியின் மீதும் கட்டியெழுப்பப்பட்ட அ.தி.மு.க. வின் ஆதரவுத்தளம் சமுதாயத்தின் அடிநிலையில் உள்ள மக்களை அதிகளவிற் கொண்டது. வர்க்க உணர்வோ வர்க்கப் போராட்டமோ அதற்குக் காரணமல்ல, மாறாக, தி.மு.கவும் அதற்கு முன்பு காங்கிரஸும் உருவாக்கிய சினிமா மாயையின் அறுவடையாகவே இன்றைய தமிழக அரசியலில் சினிமா மோகம் தொடர்ந்தும் செல்வாக்குச் செலுத்துகிறது. மக்களின் வறுமையும் அறியாமையும் அதற்கு ஊட்டமளிக்கிறது. அதைவிட முக்கியமாகச் சாதி அரசியலுக்கும் ஒரு இடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1970களில் அ.தி.மு.க, தி.மு.க, காங்கிரஸ் என்று இருந்த வாக்கு வங்கிகளில் சாதி அரசியல் கட்சிகள் தமது பங்கை எடுத்துக் கொண்டதாலும் பின்னர் கோபாலசாமி தென் மாவட்டங்களிலும் ராமதாஸ் ஏறத்தாழ வெளிவெளியாகவே சாதி அடிப்படையில் வடமாவட்டங்களிலும் தி.மு.க ஆதரவைப் பறித்துக் கொண்டதாலும், காங்கிரஸுடன் கூட்டணி அமைத்து அ.தி.மு.கவோ தி.மு.கவோ போட்டியிட்ட நிலைமையைச் சிறிது மாற்றிப் பலகட்சிகள் இணைந்த கூட்டணிகளை அவசியமாக்கியுள்ளன. இந்தக் கூட்டணிகட்குக் கொள்கை அடிப்படை கிடையாது. சட்டமன்ற, பாராளுமன்ற ஆசனக் கணக்குகளும் மத்தியில் ஆட்சி யைப் பிடிக்கிறவர்களுடன் இணை வதுமே முக்கியமான விடயம், காங் கிரஸ், பாரதியஜனதா ஆகிய இர ண்டு பெருங் கட்சிகளும் தேசியக் கட்சிகளாக அறியப்படும். இரண்டு கம்யூனிஸ்ற்கட்சிகள் கூட தி.மு.கவினதும் அ.தி.மு.கவினதும் தயவிலேயே தமிழக அரசியலில் ஆசனங்களை வெல்லக் கூடியனவாக உள்ளன. எனவே இலங்கை அரசியலில் நாம் காணுகிற கூட்டணி அரசியலை விட மேலுஞ் சிறிய கோமாளித்தனமான கூட்டணி அரசியலையே தமிழநாட்டில் காணுகிறோம். நடிகர் வியகாந்தின் கட்சியில் அவர் மட்டுமே வெற்றி பெற்றதை வைத்து நமது ஏடுகள் சினிமாக் கவர்ச்சியின் தோல்வி என்று ஆரவாரித்தன. ஆனால் பெரும்பாலான தொகுதிகளில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கக்கூடிய சக்தியாக அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 8% க்கு மேல் பெற்ற ஒரு கட்சி அது. சாதி அரசியலுக்கு ஈடாகச் சினிமா அரசியல் வலுவுடன் உள்ளது என்பதற்கான சான்றாகவே இதை நாம் கொள்ள வேண்டும்.

கருணாநிதி இரண்டு ரூபாவுக்கு கிலோ அரிசி என்ற வாக்குறுதியை உடனடியாகவே நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப் போகிறாராம். இது மணப்பெண்களின் தாலிக்கு இலவசத் தங்கம் என்ற ஜெயலலிதாவின் வாக்குறுதியை விட அதிகச் செலவானது. அடுத்து கருணாநிதி வாக்குறுதி செய்தபடி இலவசத் தொலைக்காட்சிப் பெட்டிகள். வழங்கப்படுமா? சன் டி வியை மட்டுமே காட்டக் கூடியதும் நிச்சயமாக ஜெ.டி.வியைக் காட்டாததுமான டி.வியை யாரும் உற்பத்தி செய்தால், தொலைகாட்சிப் பெட்டிகளை வழங்கும் உரிமை அவர்கட்கே வழங்கப்படும் என்று நாம் நம்பலாம். என்றாலும் அது கஷ்டமான விஷயம். வீட்டுக்கொரு பெட்டியா வீதிக்கொரு பெட்டியா இலவசம் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**-நரசிம்மா-**

**கலைஞர் – அம்மா அரசியலால் தமிழக மக்களுக்கும் விடிவில்லை ஈழத்தமிழருக்கும் பயன்இல்லை!**

தமிழகத்தின் சட்டமன்ற அரசியலில் குறுகிய காலத்தில் அ.தி.மு.க, அணிகளின் ஆதிக்கமே மேலோங்கியிருக்கும். மற்றக் கட்சிகள் தமது அணியை மாற்றி ஆட்சியைக் கவிழ்க்க இயலாத நிலை உள்ளதால் கடுமையான வெகுசன எதிர்ப்பு இல்லாத பட்சத்தில் தி.மு.க ஆட்சி உறுதியானதாகவே இருக்கும். எனினும் தி.மு.கவிலும் அதன் பழைய கூட்டணியிலும் பிளவுகட்குக் காரணமாயிருந்த கருணாநிதி குடும்ப ஆதிக்கமும் வாரிசு அரசியலும், கருணாநிதிக்குப் பின்பு தி.மு.கவை மேலும் பலவீனப்படுத்தலாம். அதே வேளை, அ. தி. மு கவினுள் ஜெயலலிதாவுக்கு ஈடான ஒரு வலிய தலைவர் உருவாகும் வாய்ப்பில்லாமல் அன்னை வழிபாட்டு அரசியல் உறுதிப்படுத்தியுள்ளது. கோபாலசாமி அ.தி.மு.கவுடன் ஏற்படுத்திய கூட்டணிக்கு இதுவும் ஒரு முக்கியமான கணிப்பாக இருந்திருக்கலாம். ஏனெனில் ஜெயலலிதாவுக்குப் பிந்திய அ.தி.முகவுக்கு வை.கோ. ஒரு வல்லமையுள்ள வழிகாட்டியாக அமைவார். அது ஜெயலலிதாவின் ஆசிகளுடனேயே நடக்கும் வாய்ப்பும் இப்போதைக்கு உண்டு. பெரும்பாலான மக்களால் வெறுக்கப்படும் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.கவை முறியடிப்பதற்கு அது வாய்ப்பளிக்கும்.

எப்படியிருந்தாலும், தமிழகச் சட்டமன்ற அரசியலிலும் அரசிற் கட்சிகளிலும் அதிக நம்பிக்கை வைப்பது தமிழக மக்களுக்கே பயனற்றது. தமிழகத் தேர்தல் அரசியற் கட்சிகளில் எதுவுமே ஒடுக்கப்பட்ட மக்களதோ உழைக்கும் பெரும்பான்மையினதோ நலன் சார்ந்தவையல்ல. பிரதேசவாதம், சாதி அரசியல் என்பன மூலம் லாபம் தேடுகிற இக்கட்சிகள் ஈழத் தமிழருக்காக எதையும் செய்யப்போவதில்லை. இதை யாரும் கடந்த இருபது ஆண்டுகளில் கற்றிராவிட்டால் இனியுங் கற்பது கடினம். எனினும் தமிழக மக்களது அனுதாபத்தை ஈழத் தமிழர் எதிர்பார்க்க நியாயம் உண்டு. இந்திய மேலாதிக்க நலன்கட்காக இலங்கையின் பேரினவாத ஒடுக்குமுறைக்குச் சார்பாக இந்திய அரசாங்கம் எதுவும் குறுக்கிடுமாயின் தமிழக மக்கள் அதை ஏற்கமாட்டார்கள். அந்த எதிர்ப்பை ஒரு வலுவான சக்தியாகக் கட்டியெழுப்புவதாயின், அரசியற் பிரசாரப் பணிகள் சட்டமன்ற அரசியற் கட்சிகளது அதிகார இழுபறிகட்கும் அப்பால் சாதாரண மக்கள் நடுவே வர்க்க அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஈழத்தில் இருந்து கொண்டு தி. மு. கவுக்கு ஜே போடுவதும் கருணாநிதிக்குத் துதிபாடுவதும் பயனற்றது. ஏனெனில் கருணாநிதியோ தி.மு. கவோ எந்தளவிலும் ஜெயலாலிதாவையோ அ.தி.மு. கவையோ விட ஈழத்தமிழரது போராட்டத்திற்கு நண்பர்கள் அல்ல. இந்தியா இலங்கையின் உள் விவகாரங்களில் குறுக்கிடுவதை எதிர்ப்பதும் இந்திய மேலாதிக்க ஊடுருவலை எதிர்ப்பதும் இன்று ஈழத்தமிழரது முக்கிய தேவைகள் என்றால், தமிழகச் சட்டமன்ற அரசியலிலிருந்து ஈழத்தமிழரின் போராட்டச் சக்திகள் எட்ட நிற்பது மதியூகமானது.

# ஞாபகம் வருதே.... ஞாபகம் வருதே.... அமெரிக்க மனிதஉரிமை பற்றிய நினைவு

அமெரிக்கக் கடவுளுக்கு எல்லாரையும் விட ஞாபகமறதி அதிகம் என்பது தெரிந்த சேதிதான். அப்படி இருக்கிறபடியால்தான் தகிடுதத்தங்கள் செய்வதும் வாங்கிக்கட்டுவதும் எதிரியாய் பார்ப்பதுவும் பின் காலில் விழுவதுவும் என்றெல்லாம் வெற்றிநடை போட முடிகிறது. அண்மைய இந்திய விஜயத்தில் இலவசமாக வாங்கிவந்த 'மெமறி பிளஸ்' மாத்திரைகளை அருந்தியதாலோ என்னவோ சில விடயங்கள் அமெரிக்கக் கடவுளுக்கு திடீரென ஞாபகம் வரத் தொடங்கியுள்ளது.

சீன ஜனாதிபதி ஹூ ஜின் ராஓ (Hu Jin Tao) வின் அமெரிக்க விஜத்தின் போது நீண்ட நாட்களுக்கு பிறகு எல்லோரும் மறந்து போன விடயமொன்று மீண்டும் நினைவு படுத்தப்பட்டது. அது சீனாவில் தடை செய்யப்பட்ட அதிதீவிர மதப்பிரிவுகளில் ஒன்றான ஃபாலுன் கொங் (Falun Gong) பற்றியது. நினைவுபடுத் தப்பட்டது என்பதை விட நினைவு படுத்தப்பட்டவிதந்தான் அமெரிக்க முத்திரையின் தனித்துவத்திற்கு எடுத்துக் காட்டு.

அமெரிக்க சீன ஜனாதிபதிகள் பேச்சுவார்த்தைகளின் பின்னர் (வேண்டாத வேலை) வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களை சந்தித்தனர். மிகுந்த கெடுபிடிகளின் பின்னரே ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படுவது வழமை. சந்திப்பில் சீன ஜனாதிபதி ஹூ ஜின் ராஓ (Hu Jin Tao) பேசிக் கொண்டிருந்த போது திடீரென ஒரு பெண்மணி கைகளில் வைத்திருந்த ஒலிபெருக்கியில் ஹூ ஜிங் ராவோ வை நோக்கி ஃபாலுன் கொங்கை இயங்கவிடும்படியும் மனித உரிமைகளை சீனா மதிக்கவில்லை எனவும் கத்தினார். "மனித உரிமைகளை மதிக்க அமெரிக்காவைப் பார்த்து சீனா கற்றுக் கொள்ளவேண்டும், அமெரிக்க ஜனாதிபதி அவர்களே உங்கள் நண்பரிடம் ஃபாலுன் கொங்குக்கு சீனாவில் விதிக்கப்பட்ட தடையை நீக்கச் சொல்லுங்கள்" என்றும் அந்தப் பெண்மணி கூக்குரலிட்டார். சில நிமிடங்கள் நீடித்த அந்தப் பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியது.

பின்னர் அமெரிக்கா, அப்பெண்மணி சீனாவைப் பிறப்பிடமாகக் கொண்ட அமெரிக்காவில் வசித்துவரும் வைத்தியர் என்று சொன்னது.

இச்சம்பவம் நடந்த நாள் முதல் அமெரிக்க ஊடகங்கள் ஃபாலுன் கொங் பற்றியும் அதன் தடை பற்றியும் எழுதத் தொடங்கியுள்ளன. சீனா மனித உரிமைகளை மதிப்பதில்லை. ஃபாலுன் கொங் நல்லதொரு ஆன்மிக அமைப்பு என்றெல்லாம் எழுதுகின்றன. இவ்விடத்தில் கடந்த மாதம் நடந்த நிகழ்வொன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அமெரிக்கா தனது வருடாந்த மனித உரிமைகள் அறிக்கையை கடந்த மாதம் வெளியிட்டது. அதில் சீனாவின் மனித உரிமை மீறல்களைக் குறிவைத்து தாக்கியிருந்தது. அமெரிக்க ஊடகங்கள் இதை முதன்மைப்படுத்தின. இரண்டு நாட்களின் பின்னர் சீனா ஒரு மனித உரிமைகள் அறிக்கையை வெளியிட்டது. அதில் அமெரிக்காவின் மனித உரிமை மீறல்கள் பற்றி புள்ளிவிபரங்களுடன் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து அமெரிக்க ஊடகங்களில் தங்களது அறிக்கை குறித்த பேச்சே இருக்க வில்லை.

ஃபாலுன் கொங் என்பது சீனாவில் 1990களில் உருவான அதிதீவிர மதப்பிரிவு. எம்முடைய பாரம்பரிய உடல் உள நல பயிற்சிமுறையாக யோகாசனம் இருந்து வருவது போல சீனாவில் பின்பற்றப்படுவது குயிகோங் (Qigong) என்பதாகும். குயிங்கோக்கும் மதத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. இந்த குயிங்கோக் கை துணைக்கு இழுத்துக் கொண்டு மத அடிப்படைகளையும் மூட நம்பிக்கைகளையும் கொண்டு உருவானதுதான் ஃபாலுன் கொங். மிகச்சிறிய அளவிலான ஒரு குழுவே இதைப் பின்பற்றி வந்தது. இதன் தலைமைக் குருவான லீகொங்ஜீ (LiHongzhi) 90களின் நடுப்பகுதிகளில் மேற்கொண்ட அமெரிக்க விஜயம் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அமெரிக்க நிதியுதவியுடன் மிகப்பெரிய அமைப்பாக ஃபாலுன் கொங் மாறியது. நிறைய மக்களை தம்பக்கம் ஈர்த்து பெரிய ஆர்ப்பாட்டங்களையெல்லாம் நடத்தியது.

'உடலுடனான உறவை அறுப்பதன் மூலமே முத்தி அடையலாம்' என வலியுறுத்தும் ஃபாலுன் கொங் 1999 யூலையில் தடைசெய்யப்படும் வரை இதைப் பின்பற்றிய 1700 பேர் தற்கொலை செய்துள்ளனர். இப்போது அமெரிக்காவில் வசித்துவரும் லீ கொங்ஜீ "உலகம் மிக விரைவில் அழிந்துவிடும், என்னால் மட்டும் உலகைக் காப்பாற்ற முடியும், எல்லோரும் ஃபாலுன் கொங்கை பின்பற்றுங்கள்" என்று சொல்லி வருகிறார்.

இப்போது மீண்டும் இது வெளிச்சத்திற்கு வந்திருப்பது அமெரிக்காவை அறிந்தவர்களுக்கு ஒரு செய்தியாகக் கூட இருக்காது. அமெரிக்கா மிகவும் அஞ்சும் நாடு சீனாதான். போதாதற்கு அமெரிக்கா சீனாவுக்கு 200 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் வைத்துள்ளது.

ஏகாதிபத்தியங்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட பல வழிகளைக் கையாள்கின்றன. அதில் ஒன்றுதான் மதம். மக்களை இலகுவாகக் கவரக் கூடிய ஆயுதமாக ஏகாதிபத்தியங்கள் மதத்தைப் கையிலெடுத்துக் கொண்டிருக்கின்றன. அவசர உலகில் பிரச்சனைகளிலிருந்து விடுபட மனிதர்கள் வழிகளைத் தேடித்திரியும் போது இவ்வாறானவை அவர்களை உள்வாங்குகின்றன. இவை மனிதர்களைத் தனிமைப்படுத்துவதோடல்லாமல் பகுத்தறிவையும் சிதைத்து விடுகின்றன.

காலப் போக்கில் இவர்கள் குருட்டுத்தனமாக சுய அறிவுக்கு அப்பாற்பட்டு இவற்றைப் பின்பற்றத் தொடங்குவதால் ஏகாதிபத்தியங்கள் இவர்களைத் தங்கள் தேவைக்கு பயன்படுத்தவும் பிற நாடுகளில் இலகுவாக ஊடுருவவும் முடிகிறது. எங்கள் நாட்டிலும் அண்மைக்காலங்களில் புதிய புதிய சமூக நலன் அமைப்புகளும் மதநம்பிக்கைக் குழுக்களும் உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

நேரடியாக எதனையும் செய்யமுடியாதவர்கள் தலைகீழாகத் தொங்கும் வௌவால்களின் தோள்களில் ஏறி நின்று தொங்கியபடியே எதையாவது செய்ய முயற்சிப்பர் என்பதை அறிந்து கொள்ளுவது அவசியம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மகிந்த சிந்தனையும் பொருளதார நெருக்கடிகளும்

அ.பூபதி

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகி ஆறுமாதங்கள் கடந்து வட்டன. மகிந்த சிந்தனை என்பதன் மூலம் நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் பொய்யாய் கனவாய் பழங்கதையாய் போய்க் கொண்டிருக்கின்றன. பொருளாதார வளர்ச்சி விகிதம் ஆறுசத விகிதத்தைக் கொண்டிருப்பதாகப் புள்ளி விபரம் காட்டப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் எட்டு விகிதத்தை அடைந்து விடலாம் என்றும் மகிந்த சிந்தனையின் பொருளாதார வல்லுனர்கள் புள்ளிவிபர அறிக்கைகள் காட்டுகின்றனர். ஆனால் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்குரிய சரியான அளவுகோல்தான் என்ன? ஏகப்பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத்தரம் எந்நிலையில் இருக்கின்றது என்பதை அளவு கோலாகக் கொண்டே உண்மையான பொருளாதார வளர்ச்சியைக் காணவேண்டும். அவ்வாறு நோக்கும் போது இன்று அரசாங்க ஊழியர்கள், தொழிலாளர்கள் மற்றும் தனியார் துறையினர் பெறும் சம்பளத்தைக் கொண்டு தமது வாழ்க்கைத் தேவைகளை எந்தளவிற்கு பூர்த்தி செய்து கொள்ள முடிகின்றது. நாட்டில் பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்கள் விவசாயிகள். அவர்களது உற்பத்திகளும் விற்பனையும் நிறைவுடையதாக உள்ளனவா? இலங்கையின் ஏற்றுமதிப் பொருளதாரத்தில் பிரதான இடத்தை வகித்து வரும் தேயிலை ரப்பர் உற்பத்தித்தியில் ஈடுபட்டு வரும் பத்து லட்சத்திற்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் நாட்டிலேயே ஆகக் குறைந்த நாட் சம்பளமாக (ரூபா- 140-151) இருந்து வருகின்றது.

இந்நிலையிலே நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வருகின்றது. இதன் அடிப்படையில் நோக்கும் போது ஏறத்தாள நாற்பது வீதமானோர் வறுமைக் கோட்டிற்கு கீழேயே வாழ்ந்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. உலக அளவில் நாள் ஒன்றிற்கு ஒரு டொலர் முதல் இரண்டு டொலர் வருமானம் அவ்வப்போது பெறும் எண்ணிக்கையானவர்களே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளதாகவே புள்ளிவிபரமிடப்படுகின்றது. நமது நாட்டின் ஆயிரம் முதல் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவிற்குள் மாத வருமானம் பெறுவோருக்கே வறுமை நிலை எனக் கூறி சமுர்த்தி திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைக் கொண்டு பார்த்தால் மூவாயிரம் ரூபா மாத வருமானம் பெறுவோர் வறுமைக் கோட்டின் கீழே வாழ்ந்து வருகின்றனர். இன்று ஆறாயிரம் ரூபா மாத வருமானத்தை பெறும் ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்தால் அன்றாடம் மூன்று வேளைக்கு உணவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. உணவுக்கு அப்பால் உடை, இருப்பிடம், கல்வி, மருத்துவம் என்பனவற்றுக்கான செலவுகளுக்கு எவ்வாறு பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்தளவிற்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் ரொக்கட் வேகத்தில் ஏறிக் கொண்டே செல்கிறது.

இன்று அரசாங்க ஊழியர்களின் மாதச் சம்பளம் ஆகக் குறைந்தது பதினோராயிரம் வழங்கப்படுகின்றது. அதனைக் கொண்டு ஒரு கீழ் மத்தியதர வர்க்கக் குடும்பங்களால் சீவிக முடியுமா? அதனாலேயே சனத்தொகையில் கணிசமான எண்ணிக்கை கொண்ட கீழ் மத்தியதர வர்க்கத்தினர் அவர்கள் எவ்வளவுக்கு முயன்றாலும் மேலே ஒரு அடிதானும் எடுத்து வைக்க முடியாது சறுக்கு மர விளையாட்டுப் போன்று கீழ் நோக்கித் தள்ளப்பட்டு வருகிறார்கள். பலர் பல்வேறு வித கடன்களால் பிணைக்கப்பட்டவர்களாக உள்ளனர். அரசாங்க ஊழியர்கள் தமக்கு சலுகைகள் கிடைப்பதாக நம்பி வரையறுக்கப்பட்ட கடன்களை சில வழிகளில் பெறுகின்றனர். அவற்றுக்கான மாதாந்தத் தொகை சம்பளத்தில் இருந்தே கழிக்கப்படுகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட கடன் கழிப்புகளாலும் ஓய்வூதியக் கழிப்பு போன்றவற்றாலும் இறுதியில் கணக்குப் பார்த்தால் சொர்ப்ப சம்பளத்துடனேயே வீடு வந்து சேருகின்றனர். அரசாங்க ஊழியர் சமன் கடன்காரர் என்ற நிலையிலேயே பெரும்பான்மை யான அரசாங்க ஊழியர்கள் இருந்து வருகின்றனர். இவர்கள் இவ்வாறு இருக்கும் போது அதற்கு கீழே இருந்து வரும் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் நிலை எவ்வாறாக இருக்கும் என்பதை சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகிறது.

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்த காலத்தில் லஞ்சம் ஊழல் அரசாங்க திணைக்களங்களில் அதிகரித்து வந்திருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. மிக உயர்ந்த மாதச்சம்பளத்தைப் பெறும் அதி உயர்நிலை அதிகாரிகள் பெருகி வரும் லஞ்சம் ஊழல் பற்றி மிக அழகாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் எடுத்துப் பேசி வருகின்றனர். அதனை ஏதோ தனிநபர் ஒழுக்கம் மனசாட்சி கடமை கட்டுப்பாடு போன்றவற்றின் காரணமானது என்றும் காட்ட முற்படுகின்றனர். ஒரு சாதாரண அரசாங்க ஊழியன் லஞ்சம் வாங்க நிர்ப்பந்திக்கப்படும் இன்றைய சமூகச் சூழலைப் பற்றி இந்த அறிவுரையாளர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை. இவ்வாறு லஞ்சம் ஊழலை ஆக்ரோசமாக எதிர்த்துப் பேசும் ஒரு உயர் நிலை அதிகாரியின் அல்லது அமைச்சரின் (எல்லா அமைச் சர்களும் பேசுவதில்லை. காரணம் எல்லோரும் அறிந்ததே) ஆகக் கூடிய மாதச் சம்பளம் அல்லது வருமானத்தோடு லஞ்சம் பெறுவதாகக் குற்றம் சுமத்தப்படும் ஒரு சாதாரண அரசாங்க ஊழியரின் சம்பளத்தை ஒப்பிட்டுப்பார்த்தால் எத்தனை மடங்கு வித்தியாசத்தில் இருப்பதைக் கண்டு கொள்ள முடியும். எனவே லஞ்சம் ஊழல் மோசடிகளின் அடிப்படையாகப் பெரும்பாலும் அமைவது வாழ்க்கை நெருக்கடிகளைத் தோற்றுவித்து வரும் இன்றைய சமூகச் சூழல் என்பதை முதலில் அறிவு பூர்வமாக சிந்தித்து ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இவை மட்டுமன்றி நாட்டில் நாளாந்தம் வளர்ந்து தலைவிரித்தாடும் பல்வேறு சமூகச் சீரழிவுகளுக்கும் சீர்கேடுகளுக்கும் போதிய வருமானம் இன்மையும் ஏற்றத்தாழ்வுகளும் அடிப்படைக் காரணங்களாக இருந்து வருகின்றன என்பது முக்கியமானதாகும்.

இவ்வாறான சமூகச் சூழலுக்கு நமது பொருளாதார அரசியல் அமைப்பு முறைகள் காரணமாகின்றன. நாட்டு வளங்களைக் கொண்டு எமது நாட்டு மக்களின் வாழ்வுக்கும் தேவைகளுக்குமுரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. இலங்கை ஒரு விவசாய நாடு. இன்றும் எண்பது வீதமானவை கிராமப்புறங்களாகவே இருந்தும் வருகின்றன. எழுத்தறிவும் கல்வியும் கணிசமானளவு வளர்ச்சி பெற்றிருந்த போதிலும் அவை கொலனித்துவ மயப்பட்டதாகவும் அதன் பின் அரைக்கொலனியத்திற்குரியதாகவுமே இருந்து வந்துள்ளன. அதே கல்வி முறைமையை இன்று உலக வங்கியின் வழிகாட்டலில் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்குரிய கல்வியாக மாற்றப்பட்டும் வருகின்றது. அவ்வாறே சமூக பண்பாட்டுச் சங்கங்களும் வழிநடாத்தப்பட்டு வருகின்றன.

1977ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பதவிக்கு வந்து கொண்டதன் மூலம் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு தாராளமய தனியார்மயப் பாதையில் முன்னெடுத்துச் செல்ல ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்றுவரையான கால் நூற்றாண்டுக்கு மேலான காலகட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதனோடு இணைந்த பாராளுமன்ற இடதுசாரிகளும் சேர்ந்து நாட்டின் பொருளாதாரத்தை இன்றைய பாழ் நிலைக்கு கொண்டு வந்து விட்டுள்ளனர். இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றுக்கு மற்றையது எந்தளவிலும் குறைந்தது என்று கூற முடியாத அளவுக்கு நாட்டின் பொருளாதாரத்தை உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் உலக வர்த்தக அமைப்பு ஆகிய ஏகாதிபத்திய சக்திகளின் ஆலோசனை திட்டங்கள் வழிகாட்டல்கள் என்பனவற்றுக்கு முற்றிலும் அடிபணிந்தே முன்னெடுத்து வந்துள்ளன. பதவிக்கு வந்த அனைத்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளும் மேற கூறிய திசையில் பயணித்து நாட்டையும் அதன் பொருளாதாரத்தையும் அடகுவைத்து மீட்க முடியாத ஒன்றாக மாற்றி வந்துள்ளனர்.

இத்தகைய பொருளாதாரத்தை ஆட்களும் ஆட்சிகளும் மாறிய போதிலும் அதன் அடிப்படைகளை மாற்ற முடியவில்லை. உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் ஊடாக மறுகொலனியாக்கமே இடம் பெற்று வருகின்றது. இதன் மூலம் நவகொலனித்துவ அமைப்பு மேன்மேலும் இறுக்கப்பட்டு வருகின்றது. இந்த அமைப்பை மாற்றுவதற்கு பாராளுமன்ற ஆட்சியில் பங்கு பற்றி வரும் எவரும் தயாராக இல்லை. இந்த அமைப்பின் ஏற்றத் தாழ்வான சுரண்டல்தனம் கொண்டலாபமும் மூலதனம் பெருக்கும் பொருளாதாரத்தின் விளைவானதே நாட்டின் சகல பிரச்சினைகளும் நெருக்கடிகளுமாகும்.

மகிந்த சிந்தனை என்ற பெயரில் தற்போதைய ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட திட்டங்களும் வாக்குறுதிகளும் இன்று நடைமுறைக்கு சாத்தியப்பட்டவைகளாக இல்லை. மிகக் குறைந்த அம்சங்களையே அவை கொண்டிருந்தன. அதனைக் கூட நடைமுறைக்கு கொண்டு வர இயலவில்லை. இதனைச் சந்தர்ப்பமாக வைத்து ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் விமர்சனம் செய்கின்றார்கள். ஆனால் அவர்கள் ஆட்சிக்கு வந்து ரணில் ஜனாதிபதியாகி இருந்தாலும் இதே பிரச்சினைகள்



தான் தொடர்ந்திருக்கும். அடிப்படையில் எல்லோரும் ஏகாதிபத்திய விசுவாசிகளும் அவர்களை மீறிச் செயல்பட முடியாதவர்களுமாவர்.

எனவே வறுமை, வேலையின்மை நிலம், வீடின்மை கல்விச் சீர்குலைவு, சுகாதாரச்சீர்கேடு, தேசிய இனப்பிரச்சினை உள்ளிட்ட அரசியல் நெருக்கடிகள் மற்றும் சமூக பண்பாட்டு சீரழி வுகள் போன்றவற்றுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்குமிடையிலான உறவுகளையும் அவற்றின் சமூகப்பாதிப்பு களையும் ஒன்றோடு ஒன்றிணைத்து பார்ப்பது அவசியமாகும். அத்தகைய பாதிப்புக்கள் ஒவ்வொன்றும் இறுதியாக உழைக்கும் ஏகப்பெரும்பான்மையான மக்களிடம் சுமைகளாக அன்றாட வாழ்க்கை நெருக்கடிகளாக துயரங்களாக பல்வேறு வடிவங்களில் இருந்து வருவதை காண முடிகின்றது. இவற்றின் உண்மைத் தன்மைகளையும் அவற்றின் கோர முகங்களையும் இலகுவில் மக்கள் கண்டுகொள்ள முடியாதவாறு உள்ளார்ந்த திட்டமிட்ட வழிகளில் மறைக்கப்படுகின்றன. ஏகாதிபத்திய உள்நாட்டு ஆளும்வர்க்க மேட்டுக்குடி சக்திகள் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டம்சங்களின் ஊடான பலவாறான பிரசாரங்களையும் திசை திருப்பல்களையும் செய்து வருகின்றன.

இத்தகைய சூழலிலேயே மாக்சிசம் கூறி நிற்கும் சோஷலிசம் பற்றியும் அதன் நடைமுறைச் சாத்தியம் அதற்கான அரசியல் செயற்பாடு பற்றியும் சிந்திக்க வைக்கிறது. ஏகாதிபத்திய பிற்போக்கு பழைமைவாத சக்திகள் சோஷலிசம் தோல்வியடைந்து போன கடந்த காலத்திற்குரியதொன்றாகவே புதிய தலைமுறையினருக்கு ஒன்றைப்பரிமாண நிலையில் இருந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆனால் கடந்த நூற்றாண்டில் சோஷலிசம் சாதித்த வானளாவிய சாதனைகளையும் அது உருவாக்கிய ஒரு மனிதத்துவ நாகரீகத்தைப் பற்றியும் கூறத் தயாராக இல்லை. ஆனால் மாக்சிசம் சோஷலிசம் அவற்றின் நடைமுறைச் சாத்தியம் இன்றும் செல்லுபடியாகக் கூடிய சமூக யதார்த்தமாகவே இருந்து வருகின்றன. அதற்கான சமகால உதாரணங்கள் உலகில் மீள்கட்டமைப்பையும் மீள் எழுச்சிகளையும் பெற்று வருகின்றன. அவற்றின் செழுமையான அனுபவங்கள் நடைமுறைகள் ஊடாகவே நமது நாட்டுப் பொருளாதாரம் பற்றி நோக்குதல் வேண்டும்.

---

## சிவில் சமூகமும்

7ம் பக்க தொடர்ச்சி..........

குழிபறிப்பு முன்னெடுக்கப்படுகிறது.

பலவேறு சமூக சேவைகள் முதலாகக் கலை இலக்கியத் துறைகள் வரை என்.ஜி.ஓக்களின் உடுருவலுக்கு உட்படுத்தப்படுகின்றன. இவை போக, மக்களைக் கொதிப்புறச் செய்கிற ஏகாதிபத்தியச் சுரண்டல் தொடர்பான பிரச்சனைகளிலும் என்.ஜி.ஓக்களின் சமூக அமைப்புக்கள் நுழைந்து கொள்கின்றன. அதன் மூலம் எந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மக்கள் போர்ராட வேண்டுமோ அந்த ஏகாதிபத்தியத்தின் கருவிகளான என்.ஜி.ஓக்கள் மூலம் அந்த எதிர்ப்பு வழி நடத்தப்படுகிறது. இலங்கையிற் போன்று பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளது தவறுகளால் இடதுசாரி இயக்கம் வலுவிழந்து பேரினவாத அரசியலால் இடதுசாரிகளின் எழுச்சிக்கு முட்டுக்கட்டை இடப்பட்டுள்ள நாடுகளிலும் இடதுசாரி இயக்கம் இன்னமும் வளர்ச்சி பெறாத நாடுகளிலும் மக்கள் இடதுசாரிகளின் பக்கம் திரும்பாமல் கவனித்துக் கொள்வதே உள்ளூர் என்.ஜி.ஓ அமைப்புக்களின் பிரதான பணியாகும். அனுராதபுர மாவட்டத்தில் எப்பாவெலையில் உள்ள பொஸ்பேற் படிவுகளைத் தனியார் கம்பனியிடம் பொறுப்பளிப்பதற்கு எதிரான போராட்டத்தில், என்.ஜி.ஓக்களின் குறுக்கீடு காரணமாக அப்போராட்டம் தனது அரசியல் பரிமாணத்தை, அதாவது ஏகாதிபத்திய விரோதப் பண்பை, இழந்தது. அதனால், அரசாங்கம் அதே திட்டத்தை இரகசியமாக நிறைவேற்றக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் போது, மக்களின் எதிர்ப்பு பிசுபிசுத்துப் போய்விடும். ஏனெனில் என்.ஜி.ஓக்களின் அக்கறை பிரச்சனையின் ஆணிவேரைத் தாக்குவதல்ல. மாறாக, அரசாங்கத்துடனும் அந்நியக் கம்பனிகளுடனும் சமரசம் செய்கிற "சிவில் சமூக" தலைமைகளை உருவாக்கிப் போராட்டப் பண்புடைய வெகுசனத் தலைமைகளை ஓரங்கட்டுவதே என். ஜி. ஓக்களது நோக்கமாகும்.

"சிவில் சமூகம்" என்கிற அடையாளத்தில் என். ஜி. ஓக்கள் மக்கள் சார்பாகப் பேசுகிற புதிய பிரமுகர்களை உருவாக்குகிறார்கள். தலைமைத்துவத் திறமைகளை வளர்ப்பது என்ற பேரில் என்.ஜி.ஓக்களின் சித்தாந்தத்தை உள்வாங்கிய புல்லுருவிகளை உருவாக்குகின்றனர். அரசியற் கட்சித் தலைவர்கட்கு மாற்றாக எவ்வகையிலும் மக்களால் தெரிவு செய்யப்படாத என்.ஜி.ஓ. அலுவலர்களும் முகவர்களும் தங்களைச் சிவல் சமூகத்தின் பிரதிநிதிகளாக நிலைநாட்ட முயலுகின்றனர். சகட்டுமேனிக்கு அரசியல் சார்பற்ற தொழிற்சங்கங்கள் எனப்படுவனவற்றின் பிரமுகர்களும் இவர்களுடன் சேர்ந்து கொள்வதால், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்ற மாயையை வலுப்படுத்த முடிகிறது.

நாட்டில் ஒழுங்காகக் கணக்கு வழக்குக் காட்ட வேண்டிய தேவையற்ற அமைப்புக்களான என்.ஜி.ஓக்களின் கையில் தாராளமாக நிதி புரளுவதால், மேலிடத்து அங்கீகாரத்துடனும் சில சமயம் அது இல்லாமலும் சமூகத்தில் உள்ள சில பிரமுகர்களை விலைக்கு வாங்க என்.ஜி.ஓ முகவர்கட்கு இயலுமாகிறது.

இலங்கையில் என்.ஜி.ஓ ஊடுருவலை இயலுமாக்கியது எது? 1977 முதல் யூஎன்.பி. ஆட்சி படிப்படியாகச் சனநாயக உரிமைகட்குக் குழிபறித்து இன ஒழிப்புப் போரொன்றைத் தொடங்கி அதைக் காரணங் காட்டி ஒரு அடக்குமுறை ஆட்சியை நிறுவியதே அதை இயலுமாக்கியது எனலாம். எதிர்க்கட்சிகள் பலவீனப்பட்டும், சில செயலிழந்தும், செயற்பட்ட சிலவும் பலவேறு மிரட்டல்கட்கும் வன்முறைக்கும் உட்பட்டும் இருந்த சூழ்நிலையில், ஊடகத் துறையில் இருந்த இடைவெளியை மேஜ் எனும் ஒரு என்.ஜி.ஓ தனதாக்கிக் கொண்டது. அது போலவே, அரசாங்கத்தின் பண்பாட்டுத்துறைச் செயற்பாடுகள் மிகவும் பாரபட்சமானவையாயும் மாற்று அரசியல் அடையாளமுடையவை நிதிவசதியின்மை உட்பட்ட பலவேறு நெருக்கடிகளால் இயங்குவதில் சிரமங்களை எதிர் நோக்கிய வேளை பலவேறு என்.ஜி.ஓக்கள் கலை- இலக்கிய- நாடகமேடைச் செயற்பாடுகளின் புரவலர்களாத் தம்மை அடையாளப்படுத்துவது எளிதாயிற்று. அதுபோலவே, சமூக சேவைகள், சமூகக் கொடுமைகட்கு எதிர்ப்பு என்பனவற்றிலும் என்.ஜி.ஓக்கள் தங்களையே சமூகச் செயற்பாட்டாளர்களாகக் காட்டிக்கொள்ள இயலுமாயிற்று.

மேற்கூறியவாறு பலவேறு முனைகளில் உண்மையான சிவில் சமூகம் தன் அரசியற் குரலை மீட்பதற்குப் போராடத் தொடங்க வேண்டிய வேளையில் சிவில் சமூகத்திற்கு அரசியலை மறுக்கிற விதமாக என்.ஜி.ஓக்களின் 'அரசியலின்மை' யின் அரசியல் அரங்கிற்கு வந்தது.

என். ஜி. ஓக்களின் எழுச்சிக்கும் திட்டமிட்ட முறையில் அவை தம்மை சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் என்று தம்மை முன்னிறுத்தி வருவதற்கும் வாய்ப்பாகத் திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவான சமூக அவலங்கள் மிகவும் உதவுகின்றன. உலகமயமாதல் உதவுகிறது. என்.ஜி.ஓ. முகவர்கள் பம்மாத்தாக ஏகாதிபத்தியம் உலகவங்கி போன்றனவற்றுக்கு எதிரான கருத்துக்களை இடையிடையே சொன்னாலும். அவற்றை எதிர்த்து மக்கள் போராடுவதையோ. அரசியல் அடிப்படையில் அணிதிரளுவதையோ அவர்கள் எதிர்க்கின்றனர். ஏனெனில், என்.ஜி.ஓக்கள் ஏகாதிபத்திய உலகமயமாதல் திட்டத்தினின்று பிரிக்க இயலாத ஒரு பகுதியினர்.

என்.ஜி.ஓக்களை அம்பலப்படுத்துகிறது கடினமல்ல. எனினும் வெகுசன சனநாயக நோக்கில் மக்களின் அடிப்படையிலான வெகுசன நலன் பேணும் அமைப்புக்கள் மீளக் கட்டியெழுப்பப்படாமல் என்.ஜி.ஓக்களை முறியடிப்பது கடினமானது. ஆயினும், இன்று அவசியமானது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# நேபாளத்தில் மக்கள் எழுச்சியும் ஆயுதப் போராட்டமும்

இமயத்தின் உச்சியிலே உலகின் ஒரே ஒரு இந்து இராச்சியம் மன்னர் ஆட்சியின் கீழ் மாண்புற இருந்து வருவதாக நம் நாட்டு ஊடகங்கள் இடையிடையே வர்ணித்து வந்தன. ஆனால் அத்தகைய தொருநாட்டில் தான் அண்மைய காலத்தில் மாபெரும் மக்கள் எழுச்சிகளும் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான ஆயுதப் போராட்டமும் உச்ச நிலைக்கு வந்துள்ளன.

அரச சொத்துடைமை, சுகபோக வாழ்வு, அடக்குமுறை ராணுவம், மக்களை வெறும் தூசாக மதிக்கும் மன்னராட்சித் திமிர் போன்றவற்றில் ஊறித்திளைத்த மன்னர் ஜயனேந்திரா, இன்று மக்கள் முன்னால் கை கட்டி வாய்பொத்தி நிற்கும் நிலைக்கு வந்துள்ளார். ஏற்கனவே இன, சாதிய, பால் ஒடுக்குமுறைகளாலும் அவற்றின் அன்றாடத் தாக்கங்களாலும் கடும் பாதிப்புகளையும் கொடுமைகளையும் அனுபவித்து வந்தனர்.

மன்னராட்சியின் கீழ் அதிகாரங்கள் பெருமளவிற்கு கட்டுப்படுத்தப்பட்ட பாராளுமன்ற ஆட்சி முறை நடாத்தப்பட்டு வந்தது. அதில் நேபாள காங்கிரஸ் கட்சியும் நேபாள பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் இடதுசாரிக் கட்சிகளும் பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டும் வந்தன. ஆனால் மாஓவாத நேபாள கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்றப் பாதையை நிராகரித்து ஆயுதப் போராட்டத்தில் இறங்கியது. மக்கள் விடுதலைப் படையைக் கட்டி எழுப்பி மன்னராட்சிக்கு எதிராக மக்களை உணர்ச்சி முழக்கங்களாலும் வெற்றுக் கோசங்களாலும் வழி நடாத்தப் படவில்லை. அரசியல் விழிப்புணர்வுடன் கூடிய சரியானதும் சகலரையும் ஐக்கியப்படுத்தும் அடிப்படையிலுமான கோரிக்கைகளை முன்வைத்தே வீதியில் இறங்கினர். வேலை நிறுத்தங்கள், பணிப்புறக் கணிப்புக்கள், கடையடைப்புகள், இயல்பு வாழ்க்கையை முடக்குதல், வீதி மறியல்கள், ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் என மக்கள் திரள்திரளாகப் பங்கு கொண்டனர். மன்னரும் அவரைப் பாதுகாக்கும் ராணுவமும் பொலிசுமே அவர் பக்கம் நின்றன. அதேநேரம் மக்கள் பல தளங்களிலும் அரசியல் எழுச்சியுடன வெகுஜனப் போராட்டங்களில் மூன்று வாரங்களுக்கு மேல் ஈடுபட்டனர். ராணுவம் அவ்வப்போது சுட்டதில் ஒன்பது பேர் வரை இறந்தனர். குறைந்த உயிர் இழப்புகளுடன் எவ்வாறு மக்கள் எழுச்சியை அரசியல் மயப்படுத்தி மன்னரையே அடிபணிய வைத்த நேபாள மக்களின் போராட்ட எழுச்சியில் இருந்து உரிய படிப்பினைகளை நாமும் பெற வேண்டும்.

அங்கு இடம் பெறும் ஆயுதப் போரா



இருந்த மன்னரையும் அவரது குடும்பத்தினரையும் 2001ம் ஆண்டு அரண்மனையில் வைத்தே படுகொலை செய்து பின் பதவிக்கு வந்தவரே தற்போதைய மன்னர் ஜயனேந்திரா. இவ் ஆட்சி மக்கள் விரோத மன்ன ராட்சியை நடாத்த தனது சர்வவல்லமை கொண்ட அதிகாரங்களைப் பிரயோகித்தது. பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்றவாறு கொடுங்கோலாட்சி செய்யத்தலைப்பட்டான். மக்கள் போராட்டங்களை நசுக்கியும் வந்தான். அதேவேளை 1996ம் ஆண்டிலிருந்து நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஓ) நடாத்தி வந்த ஆயுதப் போராட்டத்தின் மீது தனது ராணுவத்தை ஏவிவிட்டும் வந்தான். இதனால் நேபாள கம்யூனிஸ்ட் மக்கள் படைக்கும் அரச படைகளுக்குமிடையில் நீண்ட போராட்டம் நடைபெற்றும் வந்தது.

நேபாள நாட்டின் மன்னராட்சியின் கீழ் வறுமை தலைவிரித்தாடியது. எங்கும் பொருளாதார நெருக்கடிகள் வேலை இன்மை வளர்ந்து சென்றன. நிலம் என்பது மன்னருக்கும் அரண்மனை வாசிகளுக்கும் அவர்களது விசுவாசிகளான நிலப்பிரபுக்களுக்குமே சொந்தமாக இருந்து வந்தன. விவசாயிகளின் வாழ்க்கை நிலை மோசமடைந்தது. சிறு பான்மை இனங்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. சாதியமும் தீண்டாமையும் அங்கு தாழ்த்தப்பட்ட மக்களை கொடுமைப்படுத்தின. பெண்கள் பழைமைவாத பெண்ணடிமைத் தனத்தால் அமுக்கப்பட்டனர். இவ்வாறு நேபாளத்தின் சமூக அமைப்பில் ஏகப் பெரும்பான்மையான மக்கள் வர்க்க அணிதிரட்டிப் போராடிவந்தது. விடுதலைப் பிரதேசங்களை உருவாக்கி பாதுகாத்து விரிவுபடுத்திக் கொண்டது. இன்று நேபாளத்தின் ஏறத்தாள எண்பது சத வீத நிலப்பரப்பை கம்யூனிஸ்ட் கட்சி தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றது. அப் பிரதேசங்களில் மக்கள் அதிகாரமையங்கள் நிறுவப்பட்டு பொருளாதாரம் கல்வி சுகாதாரம் பண்பாடு என்பனவற்றில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் விடுவிக்கப்படாத நகரங்கள் நகர் சார்ந்த பிரதேசங்களில் மன்னராட்சியின் அதிகார வெறி தாண்டவமாடியது. அங்கிருந்து வந்த பாராளுமன்றமும் கலைக்கப்பட்டது. அதனை எதிர்த்த பாராளுமன்றக் கட்சிகள் ஒடுக்கப்பட்டன. ஊடகத் தணிக்கையும் எதிர்ப்பு நடவடிக்கைகளை அடக்குவதும் மன்னரால் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிலையிலேயே கடந்த ஏப்ரல் மாதத்தில் ஏழு பாராளுமன்ற அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து மக்கள் எழுச்சிக்கு அறைகூவல் விடுத்தன. அத்துடன் இவ் ஏழு கட்சிக் கூட்டணி ஆயுதப் போராட்டம் நடாத்தி வரும் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியுடன் பன்னிரண்டு அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையில் இணக்கமும் கண்டன. இவற்றின் அடிப்படையில் மன்னர் ஆட்சிக்கு எதிரான மக்களின் ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தி தொடர்ச்சியான போராட்டங்கள் பல முனைகளிலும் முன் சென்றன. தொழிலாளர்கள் விவசாயிகள் நடுத்தர வர்க்கத்தினர் பெண்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் வழக்கறிஞர்கள் எனப் பல நிலைகளில் மக்கள் திரண்டனர். அவ்வாறு திரண்ட நேபாள மக்கள் வெறும் ட்டத்திலும் ஆயுதங்கள் இரண்டாம் பட்சமானவையாகவே கொள்ளப்படுகின்றன. முதன்மையானது மக்களும் அவர்களது அரசியல் குறிக்கோளும். அதற்கான உறுதியான நிலைப்பாடுமாகும். அதன் காரணமாகவே மக்கள் விடுதலைப்படையானது கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் கடந்த பத்து ஆண்டுகளில் குறைந்த அல்லது அநாவசிய உயிரிழப்புகளை தவிர்த்து கொரில்லாப் போராட்டப் பாதையில் பெரும் வெற்றிகளைப் பெற்று வந்திருக்கிறது. மக்களுக்கான சமூக மாற்றத்திற்கு ஆயுதப் போராட்டம் நடாத்திவரும் நேபாள மாஓவாத கம்யூனிஸ்டுகள் மக்களைப் பாதுகாத்து மக்கள் போராட்டத்தை எதிரிக்கு விட்டுக் கொடுக்காது போராடி வருகின்றனர் என்பது சமகாலத்தில் விடுதலைக்காகப் போராடும் எவரும் படித்துக் கொள்ள வேண்டிய படிப்பினையாகும்.

இன்று நேபாள மக்கள் எழுச்சியால் மீண்டும் பழைய பாராளுமன்றம் கூட்டப்பட்டு அதில் பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மன்னரின் அதிகாரங்கள் குறைக்கப்படலாம். பெயர் மாற்றங்கள் நிகழலாம். இந்து இராச்சியம் என்ற பெயர் மாற்றப்பட்டு மதசார்பற்ற நாடு என்று அழைக்கப்படலாம். வேறும் ஓரிரு சீர்திருத்தங்கள் வரலாம். ஆனால் அடிப்படையான சமூக மாற்றம் என்ற நிலைக்கு பாராளுமன்றமோ அதில் முன் நிற்கும் ஏழு கட்சிக் கூட்டணியோ முன்வரப் போவதில்லை.

நேபாளத்தில் அடிப்படையான சமூக மாற்றச் செயற்பாட்டிற்குரிய வேலைத்திட்டத்தை மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியும் அதனோடு அணிவகுத்துள்ள சக்திகளுமே கொண்டிருக்கின்றன. ஆனால் அவர்களது இவ் இலக்கு நோக்கிய போராட்டத்தை முறியடித்து இந்திய, ஆளும் வர்க்கத்திற்கும் அமெரிக்காவின் விருப்பத்திற்கும் அளவான முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியைக் கொண்டுவரவே முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

ஆதலால் நேபாளத்தில் தொடர்ந்தும் அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்கள் எழுச்சியும் ஆயுதப்போராட்டமும் நேபாள மக்கள் குடியரசை புதிய-ஜனநாயக காலகட்டப் போராட்டத்தின் ஊடாக வென்றெடுக்கும் நிலையை நோக்கி முன்னேற வேண்டும். இம் முயற்சி கடுமையான தடைகள் எதிர்ப்புகள் தலையீடுகள் என்பனவற்றைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளது. நேபாளத்தின் ஜனநாயக புரட்சிகர சக்திகளும் கம்யூனிஸ்ட் புரட்சியர்களும் சரியான தளத்தில் நின்று உரிய நிலையில் பயணிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

சண்முகம்

# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகப் பார்வை

## திருவிளையாடல் காண்போம் வாரீர்

பிரேசிலின் சில நகரங்களில் சிறையுடைப்புகளும் வன்முறைச் சம்பவங்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. ஒன்றரை மாதங்களுக்கு முன்பு பிரேசில் சீனா இடையிலான வர்த்தக ஒப்பந்தங்கள் பற்றி கொண்டலீசா றைஸ் கூறிய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டிய தருணம் இது. 1973இல் சிலியில் நடந்தவைகள் ஞாபகத்துக்கு வருவது தவிர்க்க முடியாதது. இனியென்ன, அமெரிக்கப் பெருமானின் திருவிளையாடல்கள் அரங்கேற்றந்தான் இனி....

## நல்லபிள்ளையாய் இருக்காவிட்டால்

அதிபர் முஷாரப் ஆட்சியைப் பிடிக்கும்வரை பாகிஸ்தான் அரசியலில் பெனாசீர் பூட்டோவும் நவாஸ் செரீப்பும் முக்கியமானவர்கள். இருவரும் பரம எதிரிகள். முஷரப் வந்தவுடன் இருவரும் நாடுகடத்தப்பட்டனர். இப்ப கொஞ்சக் காலமாக முஷாரப் அமெரிக்காவுக்கு நல்லபிள்ளையாக இல்லை. பெனாசீர் பூட்டோவும் நவாஸ் செரீப்பும் இணைந்து இங்கிலாந்தில் 'ஜனநாயகத்துக்கான பட்டயமொன்றை' உருவாக்கி அதில் கையெழுத்திட்டுள்ளனர். 2007தேர்தலில் தாங்களிருவரும் இணைந்து ஒன்றாகப் போட்டியிடப் போவதாகவும் பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மலரச்செய்வதே தமது நோக்கம் என்றும் கூறியுள்ளனர். சொல்ல வேண்டியவர் சொல்லிவிட்டால் பிறகு நண்பனென்ன எதிரியென்ன.. எல்லோரும் சொல்லுக்கேட்டு நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும். இருக்காவிட்டால்...

## யுத்த நிறுத்தத்தின் பெயரால்

சூடானின் டாவ்வோர் (Darfur) பகுதியில் இடம்பெற்ற கொலைகளைத் தொடர்ந்து எல்லோரும் மிகுந்த பாடுபட்டு அங்கொரு யுத்தநிறுத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். (இதை சில போராட்டக் குழுக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை) இப்போது அமைதிப்படையை அனுப்பவேண்டும் என்று அடம்பிடிக்கிறது அமெரிக்கா. ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றி மனிதாபிமான உதவிகளை சூடானிற்கு அமெரிக்கா செய்யும் என்கிறார் புஷ். ஒன்று முடிந்தால் மற்றொன்றென தொடரவேண்டாமா என்ன....

## அன்றும் இன்றும்

மக்கள் போராட்டங்களின் இறுதியில் நேபாளத்தில் ஏதோ ஒருவகையில் ஜனநாயகம் திரும்பியிருக்கிறது. தனது தள்ளாத வயதிலும் பிரதமாயிருக்கிறார கொய்ராலா. 1960இல் மன்னர் மகேந்திரா (ஜயனேந்திராவின் தந்தை) ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராயிருந்த இதே கொய்ராலாவையும் அரசையும் கலைத்து மன்னராட்சியை நிறுவினார். சிறையிலிருந்த கொய்ராலா தனது சிறைக்குறிப்பில் இப்படி எழுதினாராம். "மன்னரையும் நேபாளிய அரச இராணுவத்தையும் கொண்டிருக்கும் வரை நேபாளத்தில் எப்படி ஜனநாயகம் தோன்றும்".

## தருணப் பொருத்தம்

இந்திய மாநிலத் தேர்தல் முடிவுகளை NDTV 24ஒ7 என்ற செய்திச் சேவையில் பார்த்துக் கொண்டிருந்தேன். தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகள வெளியான பின்னர் கருணாநிதி பற்றிய ஒரு பார்வை செய்திக் கோவையாகக் காட்டப்பட்டது. கருணாநிதியின் நீண்ட கால அரசியல் பற்றியும் திரையுலகத்துடனான தொடர்புபற்றியும் அங்கு கூறப்பட்டது. முடிவில் "சிறந்த திரைக்கதை எழுத்தாளரான கலைஞர் இம்முறை வெற்றிகரமான ஒரு திரைக்கதையை எழுதியிருக்கிறார்" என்று சொல்லிவிட்டு 'பராசக்தி' திரைப்படத்திலிருந்து சிவாஜி பேசும் ஒரு காட்சியை ஒளிபரப்பினார்கள். அது இதுதான் "சக்சஸ்! இனி நான் மோசடிக்காறன்".

## அக்கறையின் திருவுருவம்

பொலிவிய ஜனாதிபதி ஈவோ மொறாலஸ் எண்ணெய் வளங்களையும் இயற்கை எரிவாயுவையும் தேசியமயமாக்கியுள்ளார். இது குறித்து கருத்துத தெரிவித்த பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் "இது மிகவும் கவலையளிக்கின்ற விடயம். ஆட்சியாளர்கள் எப்போதும் உலக மக்களின் நன்மையையே கருத்திற்கொள்ள வேண்டும். உலகத்து மக்கள் மீது அக்கறையில்லாதவர்கள் தான் இப்படியான கீழ்த்தரமான வேலைகளைச் செய்வார்கள்" என்றார். புஷ் குறித்த அக்கறையின் திருவுருவம் இவரின்றி யாராக இருக்க முடியும். அவர் சொன்ன உலக மக்கள் யாரென்று எல்லாருக்கும் தெரியுந்தானே...

## அருமையான பதில்

2002இல் நடந்த இனக்கலவரம் போலவே இம்முறை 'வதோத்திரா' வில் நடந்த இனக்கலவரத்தையும் அடக்காமல் வேடிக்கை மட்டும் பார்த்தார் முதலமைச்சர் நரேந்திர மோடி. இவர் உண்மையில் மோடி இல்லை கேடி. இந்துத்துவ வெறிச்செயல்கள் எல்லாவற்றுக்கும் முதல் ஆசிர்வாதம் வழங்குவது இந்த கேடிதான். உலகப் புகழ் பெற்ற இந்திய நாடகாசிரியர் விஜய் டெண்டுல்காரிடம் ஒரு பேட்டியில் கேட்டார்கள். "உங்களிடம் ஒரு துப்பாக்கியை தந்து ஒருவரைச் சுடச் சொன்னால் யாரைச் சுடுவீர்கள்". அவர் சொன்ன பதில் "நரேந்திர மோடியை".

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# வரலாற்றுத் திரிப்பில் யோதிலிங்கத்தின் இன்னொரு அப்பியாசம்

இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு: 1933- 1990 வரை கால வரிசைப்படுத்தப்பட்ட சிறு குறிப்புக்கள், சி. அ. யோதிலிங்கம் விழுது கொழும்பு- 7, ப.54,விலை குறிப்பிடப்படவில்லை.

இந்த நூலில் 1833 முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரையுமான காலம் பற்றி வெகு மேலோட்டமான சிலவரிகளே உள்ளன. சிங்கள பௌத்த் எழுச்சி யின் வர்க்கப் பின்னணி பற்றிய எந்த விதமான பார்வையும் இல்லை. உண்மையில் நூல் நெடுகிலும் வர்க்கம் என்கிற பரிமாணத்துக்கே இடமில்லை. அக்காலத்தில் நடந்த கத்தோலிக்கர் கட்கு எதிரான வன்முறையும் குறிப்பிடப்படவில்லை.

தமிழ்த்தலைவர்கள் என்ற பேரில் முற்றிலும் எதிரான சமூகப் பார்வை கொண்ட பொன்னம்பலம் ராமநாதன் போன்றோரும் பொன்னம்பலம் அருனாசலம் போன்றோரும் ஒன்றாகவே உள்ளடக்கப்படுவதுடன், முஸ்லீம்கள் தமது தனித்துவத்தைப் பேண விரும்பியதற்கான காரணங்களும் மிகவும் கொச்சைப்படுத்தப்படுகி

## வரலாற்றுப் புரட்டல்களால் உண்மைகள் மறைக்கப்படுகின்றன வக்கிரங்கள் வளர்க்கப்படுகின்றன

ன்றன. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசிற்கும் தமிழர் மகாஜன சபைக்குமிடையிலான அடிப்படையான வேறுபாடு சமூகப்பார்வை பற்றியது என்பதும் நூலாசிரியருக்குத் தெரியவில்லை. தேசிய இனப்பிரச்சினையின் வர்க்கப்பரிமாணத்தை வேண்டுமென்றே புறக்கணிக்கிறதன் மூலம், பிரச்சனையை வெறுமனே பலவேறு சமூகங்கட்கிடையிலான முரண்பாடுகளின் சேர்க்கை என்று காட்டுவது தான் நூலாசிரியரின் நோக்கம் என்றால், அதை அவருக்குச் சமமாகவோ அவரை விடத் தீவிரமாகவோ ஆனால் அவரைவிட ஒழுங்காக செய்யக் கூடியவர்களும் செய்தவர்களும் பலர் உள்ளனர்.

1947ல் டி.எஸ்.சேனநாயக்க அரசாங்கம் அமைக்க உதவியவர் சி. சுந்தரலிங்கம் என்பதைச் சொல்லாமல் மழுப்பி விட்டு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் "பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய" சமஷ்டி கோரப் போவதாகச் சொன்னாரென்று கயிறுவிடுகிறார். கலாநிதி நளின் டி சில்வா என்கிற சிங்களப் பேரினவாதி கூட இது வரை அறியாத தகவல் இது.

1948ல் ஜி.ஜி.பொன்னம்பலமும் செல்வநாயகமும் மட்டுமே பிரசாவுரிமைச் சட்டத்திற்கெதிராக வாக்களித்தனர் என்று சொல்லுகிற நூலாசியருக்கு ஜி.ஜி.பொன்னம்பலமும் செல்வநாயகமும் ஆள் மீது ஆள் சொன்ன குற்றச்சாட்டுக்கள் பற்றியோ எவ்வாறு வன்னியசிங்கம் வாக்களிப்பிலிருந்து ஒதுங்கி நிற்க நேர்ந்தது என்றோ சொல்ல அக்கறையில்லை.

1948 ல் தமிழ்க் காங்கிரஸில் இருந்த செல்வநாயகம் தனது வாகனத்தில் சங்கிலியனின் நந்திக் கொடியை ஏற்றினார் என்றும் சொல்லப்படுகிறது. 1950கள் முழுவதும் தேசியக் கொடி விவகாரம் தமிழ் மக்களின் பல போராட்டங்கட்கும் காரணமானது என்றும் சொல்லப்பட்டுள்ளது. இவர் வைக்கிற பூவை எல்லாம் தாங்க நமது காதுகளின் அளவு போதாது என்று தான் சொல்ல வேண்டும்.

1940 களில் டி. எஸ். சேனநாயக்க வடக்கு கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்களை முன்னெடுத்த வேளை அப்போது இடதுசாரியாக இருந்த பிலிப் குணவர்த்தன அதை எதிர்த்தார். திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தெற்கின் நிலவுடைமையாளர்களது நலன்கள் பேணப்பட்டதையும் திருகோணமலையைத் தனிமைப்படுத்துகிற விதமான குடியேற்றத்திட்டங்கள் 1940 களில் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் நூலாசிரியர் வேண்டுமென்றே தவிர்த்தும் திரித்தும் எழுதியுள்ளார். 1956 ல் யூ என். பியும் சிங்களம் மட்டுமே கொள்கையை முன்வைத்தே தேர்தலில் போட்டியிட்டது. என்பதும் கவனமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. சிங்களம் மட்டுமே சட்டம் அங்கீகரிக்கப்பட்டதையொட்டிக் காலி முகத்திடலில் சக்தியக்கிரகம் நடந்தது. தமிழரசுக்கட்சியில் எட்டுப் பாரளுமன்ற உறுப்பினர்களே இருந்தனர். அவர்களில் ஓரிருவருக்கு இரத்தக் காயங்கள் ஏற்பட்டன. ஆனால் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் காயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக நமக்குச் சொல்லப்படுகிறது.

1957 சிங்கள ஸ்ரீ. எதிர்ப்புப் போராட்டத்தின் போது கறுப்புக் கொடி கட்டக் கம்பத்தில் ஏறிய நடராசன் என்பவர் ஒரு சிங்களவரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீ எதிர்ப்பின் போது எங்குமே கறுப்புக் கொடி ஏந்தப்படவுமில்லை. யாரும் கொல்லப்படவுமில்லை. 1957 சுதந்திர நாளைத் தமிழரசுக்கட்சி துக்க நாளாகப் பிரகடனம் செய்த தால் தமிழரசுத் தொண்டர்கள் கறுப்புக்கொடி ஏற்றப் போன போது நடராசன் சுடப்பட்டார். நூலாசிரியர் வரலாறு எழுதுவதற்குப் பதிலாக சரித்திர நாவல் எழுதலாம். யாராவது அதைத் தமிழில் திரைப்படமாக்கலாம். பண்டாரநாயக்க- செல்வநாயகம் உடன்படிக்கையிலும் நூலாசிரியர் தன் கைவண்ணத்தைக் காட்டத் தவறவில்லை. "தமிழே வடக்கு கிழக்கின் மாகாண மொழியாக இருக்கும்" என்று அவர் அதை வியாக்கியானப்படுத்துகிறார். இது இன்றைய வடக்கு கிழக்கு மாகாணம் என்ற அடிப்படையில் வலிந்து புனையப்பட்ட சொல்லாடல்.


ஸ்ரீ. எதிர்ப்புப் போராட்டம் காரணமாக பண்டாரநாயக்க- செல்வநாயகம் உடன்படிக்கை கிழித்தெறியப்பட்டது என்று சொல்லப்பட்ட போதும் அந்தப் போராட்டம் தொடர்ந்ததாக

## ஜெ

இன்னொரு கதை சொல்லப்படுகிறது. ஸ்ரீ. எதிர்ப்பும் போராட்டம் தொடங்கிச் சில காலத்திற்குள்ளேயே பிசு பிசுத்துவிட்டது. யாழ்ப்பாணத்திற்கு "ஸ்ரீ" பொறித்த பஸ்களை அனுப்பாமல் தமிழ்த் தலைவர்கள் தடுத்தனர். அதனால் நட்டப்பட்டோர் சாதாரண குடா நாட்டு மக்கள் மட்டுமே.

1960ல் தமிழரசுக்கட்சிக்கும் ஸ்ரீ. ல. சு. கட்சிக்குமிடையே எவ்விதமான திட்டவட்டமான கொள்கை உடன்பாடோ தேர்தல் உடன்படிக்கையோ இருக்கவில்ல. ஆனால் யோதிலிங்கம் கதை எழுதுவதற்கு ஆதாரங்கள் தேவையா?

1961 சத்தியாக் கிரகத்தின் போது மாரடைப்பால் இறந்த மூதூர் பா.உ.ஏகாம்பரம் பொலிஸ் தாக்குதலில் படுகாயமுற்று இறந்ததாக இன்னொரு புளுகு. திருகோணமலையில் சத்தியாக்கிரகம் மிக அமைதியாகவே நடந்தது. யாழ்ப்பாணத்தில் தொடக்கத்தில் நடந்த வன்முறையின் விளைவாக சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவு கூடியதை அவதானித்த அரசாங்கம் பொலிசாரைக் கவனமாக நடந்து கொள்ளுமாறு எச்சரித்தது என்பது எனது ஊகம். அதைவிடவும் அன்று பொலிஸ்காரர்கள் ஓரளவு ஒழுங்காக நடந்து கொள்ளக் கூடியவர்களாகவே இருந்தனர்.



1963ல் நடந்த "எல்லாம் தமிழ்" இயக்கம் 1961 சத்தியாக்கிரகத்தின் தோல்வியை மழுப்புகிற ஒரு பரிதாபமான முயற்சி. 1964 வரையுமான தமிழரசுக்கட்சியின் தடுமாற்றத்திற்குப் பலவேறு சோடனைகளுடன் 1964 பாதயாத்திரை, தமிழரசுக்கட்சியின் போராட்டத்திற்கு அஞ்சிச் சிங்கள ஊழியர்கள் வடக்கு- கிழக்கிற்கு போக மறுத்தமை போன்றவை போராட்ட வடிவில் புனையப்படுகின்றன.

1961 சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவளித்த இ.தொ.கா. தலைவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. எந்தத் தலைவர் எங்கே மறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்று சொன்னால் உதவியாயிருக்கும். சத்தியாக்கிரகம் முடங்கிப் போனது 1961 ஏப்பிரல் 17ம் நாள். மலையகத்தில் ஏப்பிரல் 25 அன்று நடந்த வேலை நிறுத்தத்திற்கும் சத்தியாக்கிரகத்துக்கும் என்ன சம்மந்தம்? தொண்டமான் தங்களுடன் போதியளவு ஒத்துழைக்காத தால், மலையகத்தில் 1962ல் போட்டித் தொழிற்சங்கம் அமைக்கத் தமிழரசுக் கட்சியினர் இளஞ்செழியன் போன்ற சில 'திராவிட இயக்கப்' பேச்சாளர்களை நாடினர். அது பலனளிக்கவில்லைப் யோதிலிங்கம் சொல்லப் பார்ப் பது என்ன? மலையக மக்கள் வட க்கு- கிழக்கிலுள்ள தமிழரின் போரா ட்டத்தில் இணைந்தனர் என்கி றாரா?

அவரது எழுத்தில் பயங்கரமான நகைச்சுவையும் அவர் அறியாமலே தொற்றிவிடுகிறது. 1964ல் சாதி பேதத்தை ஒழிக்கிற நோக்கத்தில் தமிழரசுக்கட்சி பாதயாத்திரை நடத்தியது என்ற மகத்தான பகிடி போக, 1957ல் தேனீர்கடைகளில் சாதி அடிப்படையில் பாரபட்சமாக 'வித்தியாசமான கோப்பைகளில்' (சிரட்டை, தகரப்பேணித் போத்தல் என்று சொல்லக் கூசுகிறாரா?) தேனீர் வழங்கப்படுவதை எதிர்த்துத் தமிழரசுக் கட்சி போராட்டம் நதியதாகவும் சொல்லி நம்மைச் சிரிக்க வைக்கிறார். தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்காக பலர் எப்போது எப்படிப் போராடினார்கள் என்பது தெரியாதவரா நமது வரலாற்றுக் குறிப்புக்காரர்? முஸ்லீம்கள் தமது தனித்துவத்தை எப்போதிருந்தோ வலியுறுத்தி வந்துள்ளனர். அவர்கள் 1960ல் தமது இயல்மொழியாக அரபு மொழியை அறிவித்ததாக அவர் சொல்லுகிறார். அப்படியானால் அவர்கள் ஏன் தமது மொழியுரிமை என்ற பேரில் தமிழிற் கற்கும் உரிமையையே தொடர்ந்தும் வற்புறுத்தி வந்துள்ளனர் என்றோ அவர்களில் அற்பச் சிறுபான்மையோரே அரபு மொழியைக் கற்கின்றனர் என்றோ, அதிலுங் குறைவானோரே அரபு மொழியில் உரையாடுகின்றனர் என்றோ, அவரால் ஏன் விளங்க இயலவில்லை? தமிழ்த் தேசிய மேலாதிக்க கண்ணோட்டம் உடையவர்கட்கு முஸ்லீம்களின் தேசிய இன அடையாளம் என்பது ஏற்கக் கஷ்டமானவிடயம். எனவே அதைக் கொச்சைப்படுத்துவது வசதியானது. அதையே யோதிலிங்கமும் செய்கிறார்.

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் 1960க்கு முன்பே தனிநாயகம் அடிகள் போன்றோரதும் தமிழரசுக்கட்சியினரதும் ஊக்குவிப்புடன் தொடக்கப்பட்டது. அதை எதிர்த்தவர்களுள் முக்கியமானோர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர். அவர்கள் "இந்துப் பல்கலைக்கழகம்" ஒன்றை வேண்டினர். தமிழ்ப் பல்கலைக்கழக முயற்சியின் தோல்விக்குத் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினுள் இருந்த அதிகார இழுபறிகளும் பங்களித்தன. தமிழரசுக் கட்சி யூஎன்.பியுடனான பயனற்ற கூட்டணியிலிருந்து வசதியாக நழுவி அடுத்த தேர்தலைச் சந்திக்கவே திருகோணமலையைப் புனித நகராக்கும் பிரச்சினைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

1971 தரப்படுத்தலில் தமிழ் மாணவர்கள் சிங்கள முஸ்லீம் மாணவர்களை விட அதிக புள்ளிகள் எடுக்க வேண்டியிருந்தது என்பது நூலாசிரியரின் விஷமத்தனமான திரிப்பு. 1971 தரப்படுத்தல் கல்வி- பரீட்சை மொழி அடிப்படையிலானது மட்டுமே. ஆங்கிலத்தில் படித்த முஸ்லீம், பறங்கி, சிங்கள- தமிழ் கலப்பினத்தவர் அதனாற் சொற்ப நன்மை பெற்றிருக்கலாம். ஆனாற் பெருவாரியான முஸ்லீம் மாணவர்கள் தமிழிலேயே பரீட்சை எழுதியதால் அவர்களும் தமிழ் மாணவர்களவுக்குப் பாதிக்கப்பட்டனர். எனினும், முஸ்லீம் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அன்று குறைவாக இருந்ததால் அது பெரிய பிரச்சனையாகவில்லை. 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதத்திலும் யோதிலிங்கத்தின் பூத்திரிப்புக்கட்குக் குறைவில்லை.

1982ல் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்க ஜே.ஆர்.ஜவர்த்தன மேற்கொண்ட முயற்சியை யார் எதிர்த்துப் பிரசாரம் செய்தனர் என்பதோ அதிகாரமற்ற மாவட்ட அபிவிருத்தி சபை என்ற அமைப்பை ஏற்றதன் மூலம் தமிழ் மக்களை முட்டாளாக்கும் முயற்சிக்குத் த.வி.கூட்டணி ஒத்துழைத்ததோ நூலாசிரியர் பேச விரும்பாத விடயங்கள்.

இந்தியா தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தது என்ற படிமத்தைப் பேணும்படி 1987–90 கால இடைவெளி மிகவும் சுருக்கமாக் கையாளப்பட்டுள்ளது. இந்தியப் படைகளின் அட்டூழியங்கள் கண்டுங்காணாமல் விடப்பட்டுள்ளன. முக்கியமான பல நிகழ்வுகள் முற்றாகவே புறக்கணிக்கப்பட்டுள்ளன. தென்னிலங்கையின் உள்நாட்டுப் போர் ஜே.வி.பிக்கும் இந்தியாவுக்கு மெதிரான போராக ஒற்றைவழியில் அமுங்கிவிடுகிறது.

இந்த நூலின் போதாமைகள் அறியாமையின் விளைவானவை என்பதை விட திட்டமிட்ட ஒரு அரசியல் நோக்குடன் செய்யப்பட்ட திரிப்புக்கள் என்று சொல்வது பொருந்தும். இந்த நூலை வெளியிட்டுள்ளது ஒரு என்.ஜி.ஓ.அமைப்பு. என்.ஜி.ஓக்களின் "அரசியல் மறுப்பின்" அரசியல் பற்றி அறிந்தவர்கட்கு இது போன்ற ஒரு நூல் ஒரு என்.ஜி.ஒ. அமைப்பிலிருந்து வருவது வியப்பளிக்காது.

## நாமென்ன செய்கின்றோம்?

ஆண்டாண்டு கால அடக்கு முறைக்கெதிராக
மூண்டெழுந்த போராட்டம் முடிவின்றித் தொடர்கிறது
நாமென்ன செய்கின்றோம்?
நாமெங்கே செல்கின்றோம்?

ஆராரையோ நம்பிப் போராடப் போனவர்கள்
ஆளுக்கு ஒரு திசையாய் வழிமாறிப் போனார்கள்
ஆரும் அழையாமல் அமைதியினைக் காப்பதற்கு
ஆட்கொண்டு வந்தவர்கள் ஊரை அழித்தார்கள்
அடுப்படியில் நெருப்பணைக்க வந்த அயலவர்கள்
வீடெரியத் தீ மூட்டி விலகியதன் பின்னாலும்
ஆராரோ அந்நியர்கள் அமைதி தர வருவரென
ஆவலுடன் வரவேற்று ஆசையிலே ஏமாந்தோம்
நாமென்ன செய்கின்றோம்?
நாமெங்கே செல்கின்றோம்?

போர் நிறுத்த உடன்பாடு உயிரோடு இருக்கிறதாம்.
தீர்வுக்குப் பேசுவது பற்றி மிகப் பேசுகிறார்.
போரில்லாப் போரொன்றில் ஆளாளாய்க் கொல்லுகிறார்.
அமைதியிலா அமைதியிலே ஊருராய் அழிக்கின்றார்
போர் மூழச் செய்தவரை துணைக்கு வரக் கேட்போமா?
அடக்குமுறை ஆட்சிக்கு ஆயுதங்கள் தந்தவரை
அமைதிக்கு வழி செய்யப் படையனுப்பக் கேட்போமா?
நாமென்ன செய்கின்றோம்?
நாமெங்கே செல்கின்றோம்?

எதிரிக்கு எதிரி எங்களுக்கு நண்பனென
வாய்ப்பாடு சொல்லாதீர் வீண் வினையைத் தேடாதீர்.
முள்ளை எடுப்பதற்கு முள்வேண்டும் என்பதனால்
வாளேந்தும் அந்நியரை வரவழைக்கப் போகாதீர்.
உள்வீட்டுச் சிக்கல்களைக் களைவதற்கு அந்நியரை
வரவழைத்த கதைகள் பல நிறைந்ததொரு வரலாறும்
அந்நியர்க்கு அடிபணிந்து ஆண்டு பல தேய்ந்ததுவும்
எப்போதும் எம்மனதில் நீங்காமல் நினைவிருத்தி
நாமென்ன செய்வோம்?
நாமெங்கு சென்றிடுவோம்?

மக்கள் விடுதலையை மற்றெவரும் தரமாட்டார்
போராட்டம் இல்லாமல் விடுதலைக்கு வழியில்லை
மக்கள் அணிதிரண்டு ஒன்றுபட்டுப் போராடின்
மக்கள் வரலாற்றை மக்களே எழுதிடுவர்
நண்பர் எவர் என்றும் பகைவர் எவர் என்றும்
நாம் முதலில் ஆராய்வோம்.
எங்கட்குப் பகைவர் சிலர், உலகெங்கும் நண்பர் உளர்
என்றாலும் எங்களது விடுதலையை நாம் வெல்ல
எங்களது கால்களிலே நிற்போம்
நிலைப்போம்.
போராடி நாம் வெல்வோம்.
புதுவுலகு ஒன்றைக்
காணப்புறப்படுவோம்!

-ஷ்வப்னா-

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று13 ஆனி 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 92

## படுகொலைகளைக் கண்டிக்கின்றோம்

வடக்குகிழக்கிலும் அதற்கு அப்பாலும் ராணுவம் துணைப்படையினர் கருணா குழுவினர் புலிகள் இயக்கப் படைகள், இனவெறிக் குண்டர்கள் என்போரால் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்கள் நாளாந்தம் படுகொலைகள் செய்யப்படுகின்றனர். நிராயுதபாணியான மக்கள் பழிக்குப் பழி என்ற ரீதியில் நாளாந்தம் மனிதநேயமற்ற வகையில் கொல்லப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அநாதரவான நிலைக்கு ஆளாக்கப்பட்ட அனைத்து குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். இத்தகைய படுகொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் எனப் புதிய பூமி வற்புறுத்துகிறது.

-ஆசிரியர் குழு-

## அரசாங்க- புலிகள் இயக்க ஒஸ்லோ சந்திப்பு
## யுத்தத்தை நிறுத்துமா அல்லது வெடிக்கவைக்குமா

இம்மாதம் 8ம் 9ம் திகதிகளில் நோர்வேயின் ஒஸ்லோ நகரில் அரசாங்கமும் புலிகள் இயக்கமும் சந்திக்க இருக்கிறனர். இது கடந்த பெப்பவரி மாத சந்திப்பிற்குப் பின்பு இடம் பெறும் மற்றொரு சந்திப்பாகும். இது ஒரு வித்தியாசமான சூழலிலும் வேறுபட்ட பாணியிலுமே இடம் பெறுகின்றது. இச் சந்திப்பிற்கான அழைப்பை இருதரப்பினருக்கும் விடுத்தவர்களே நோர்வே அனுசரணையாளர்கள் ஆவர். இதனை இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டு பேச்சுவார்த்தைக்குச் செல்லும் இரண்டாவது சந்திப்பு எனக் கொள்ள முடியாது. அனுசரணையாளர்கள் தாமே முடிவு செய்து முன்னின்று இரு தரப்பையும் மறைமுகமான கட்டாயத் தொனியில் ஒஸ்லோவிற்கு வரவழைத்துள்ளனர். அதில் முக்கியமான சில விடயங்கள் மட்டுமே பேசப்படும் என்றே அறியப்படுகிறது. ஒன்று, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சில சரத்துக்கள் தெளிவற்றவைகளாகவும் தத்தம் வசதிக்கு ஏற்ப வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டு வரும் நிலை பற்றி தெளிவாக்குவது. இரண்டாவது கடலிலும் தரையிலும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அச்சுறுத்தல்களையும் உயிராபத்துக்களையும் எதிர் கொண்டு வருகின்றமை பற்றியது. மூன்றாவது, சர்வதேச- உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் வன்முறைகள் சம்மந்தமானது. இவற்றுடன் யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களைக் கட்டுப்படுத்துவது பற்றியும் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இச் சந்திப்பு வடக்கு கிழக்கில் மனிதப்படுகொலைகள் நாளாந்தம் உச்ச நிலையில் இடம் பெற்று வரும் சூழலில் நடைபெறுகிறது. அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான தடை இணைத்த தலைமை நாடுகளின் கூட்டம் அமெரிக்க தென்னாசியச் செயலாளரின் இலங்கைப் பயணம் என்பனவற்றுகருப் பின்பே இச் சந்திப்பு நடைபெறுகிறது. ஆதலால் இச் சந்திப்பு பயன்தர வேண்டும் என சமாதானத்தை விரும்புவோர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் யுத்தத்தை விரும்புவோரும் அதன் மூலம் தத்தமது அரசியல் பொருளாதார நலன்கள் ஆதாயங்களைத் தேட நிற்போரும் மேற்படி ஒஸ்லோ சந்திப்பு தோல்வியில் முடிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பையே கொண்டிருக்கின்றனர்.

ஆனால் கொலைக்களத்தில் உயிரிழப்புகளுடனும் இரத்த வெள்ளத்தின் மத்தியிலும் அச்சம் பீதி பதற்றத்துடன் வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கு மக்களுக்கும் யுத்த நிறுத்த சூழலும் இயல் வாழ்வுக்கு திரும்புதலுமே இன்று அவசியமாகத் தேவைப்படுகிறது. அந்த வகையில் மீண்டும் ஒரு யுத்தம் வெடிப்பதற்கு ஒஸ்லோ சந்திப்பு வழிவகுக்கக் கூடாது. அவ்வாறான சூழலைத் தடுப்பதற்கே அது பங்களிப்பு வழங்கவேண்டும்.

### அமெரிக்காவின் தலையீடு

1ம் பக்க தொடர்ச்சி.....தயாராக இல்லை. தவறான பொய்ப் பிரசாரங்களின் அடிப்படையிலேயே கனடா, ஐரோப்பிய ஒன்றியம், அமெ ரிக்கா புலிகள் மீது தடைவிதித்தனரே தவிர அடிப்படையில் தமிழர் தரப்பின் இயல்பான நண்பர்கள் என்றே இன்னும் நம்ம முற்படுகின்றனர். தமிழர் தரப்பின் மேட்டுக்குடி உயர்வர்க்க சக்திகள் எவ்வளவிற்கு அமெரிக்காவிற்கு அடிமை விசுவா சம் தெரிவித்தாலும் அவர்கள் தமது உலக மேலாதிக்க நலன்களுக்கு யார் குறுக்கே வந்தாலும் அனுமதிக்கமாட்டார்கள். அந்த வகையில் புலிகள் இயக்கத்தின் தரை கடல் ராணுவ வலிமையை அமெரிக்கா அளந்து வைத்துள்ளது. ஆசியப் பசுபிக் பிராந்தியத்தின் பிரதான கடல் மார்க்கத்தில் தனது ஆதிக்கத்திற்கு புலிகள் அச்சுறுத்தலாக அமைந்து விடக்கூடாது என்பதில் அமெரிக்கா முன்னெச்சரிக்கையாக இருக்கிறது. மேலும் ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும் அதிகரித்து வந்துள்ள தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை எதிர் கொள்ள முடியாது அமெரிக்கா தத்தளிக்கிறது. அந்த வரிசையில் புலிகள் இயக்கமும் இணைந்து கொண்டுவிட்டால் உருவாகும் எதிர்விளைவுகளை அமெரிக்கா முன் உணர்ந்து கணக்கிட்டுப் பார்க்கின்றது. ஆதலினாலேயே தனது பயங்கரவாத வியாக்கியானப் பட்டியலில் புலிகள் இயக்கத்தை சேர்த்து நிற்கிறது. இத்தகைய நிலைப்பாடு தெற்கின் பேரினவாத ஒடுக்குமுறையாளர்களுக்கு மிகவும் உவப்பான நிலைப்பா டேயாகும். தமிழர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என விசமத்தனமாக கேள்வி எழுப்பும் ஜே.வி.பி. ஹெல உறுமயவிற்கும் ஏனைய பாராளுமன்ற பிரதான பேரினவாதக் கட்சிகளுக்கும் அமெரிக்காவின் நிலைப்பாடு மிகுந்த குளிர்ச்சியைக் கொடுத்துள்ளது. ஆனால் அமெரிக்கா இதன் ஊடாக முழு இலங்கைக்கும் சுருக்குக்கயிறு மாட்டி சிறுகச் சிறுக இறுக்கி வருகி ன்றது என்பது சிங்கள மக்களுக்கு உடனடியாக விளங்கப் போவதில்லை.

ஆறுமாதங்களுக்கு முன்பு மகிந்த ராஜபக்ஷவை விட ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாக வருவதையே அமெரிக்கா இதயபூர்வமாக விரும்பியது. அந்த விருப்பத்திற்கு மாறாகவே ஜனாதிபதித் தேர்தல் முடிவு அமைந்து கொண்டது. மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்ததும் அமெரிக்காவை விட இந்தியாவையே நெஞ்சார விரும்பினார். தனது முதலாவது விஜயத்தையும் அங்கு மேற்கொண்டார். அதேவேளை அமெரிக்காவை தூரத்திலேயே வைத்தும் கொண்டார். ஆனால் அவரது மனப்பூர்வமான எதிர்பார்ப்பை இந்தியா உள்வாங்கவில்லை. சம்பிரதாயபூர்வமான அயல் உறவு என்ற எல்லைக்குள் மட்டுப்படுத்திக் கொண்டது. இந்தியாவின் உள்நோக்கம் எது என்பதை சரியாகப் புரிந்து கொள்வதில் அரசியல் விமர்சகர்களுக்கு சிரமம் உண்டாயினும் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் முற்றாகக் கைழுவிக் கொள்ளும் நிலையிலும் இந்தியா இல்லை என்பதைத் துணைக் குழுக்கள் கருணா குழுவினர் மற்றும் முஸ்லீம் தரப்பினருடனான உள்ளார்ந்த உறவுகளின் மூலம் அறிய முடிகிறது. இவ்வாறான இலங்கை இந்திய இடை வெளியை நிரப்பிக்கொள்ள அமெரிக்கா மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துடனான நெருக்கத்தை வளர்க்க முற்பட்டு வெற்றியும் பெற்று வருகிறது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீராவின் வாஷிங்டன் பயணம் பயன்தரத் தொடங்கியது. கனடாவும் ஐரோப்பிய யூனியனும் புலிகள் மீதான தடைகளைக் கொண்டு வந்தன. இணைத்தலைமை நாடுகள் நாசுக்கான அழுத்தங்களை புலிகள் மீது பிரயோகித்தும் வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஒரு மாதம் அமெரிக்காவில் தங்கியிருந்த பின் நாடு திரும்பியிருக்கிறார். அவர் மகிந்த தலைமையிலான ஆட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதுடன் அமெரிக்க மேற்குலக தடைகளுக்கும் இணைத்தலைமை நாடுகளின் அணுகுமுறைக்கும் ஆதரவு தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் சகோதரர் கோதபாய ராஜபக்ஷ தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் ஒரு முன்னாள் ராணுவ அதிகாரி மட்டுமன்றி அமெரிக்காவில் வாழ்ந்து அந்நாட்டின் பிரசாவுரிமையும் பெற்றவர். இவற்றை எல்லாம் அவதானிக்கும் போது இன்றைய அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்களில் முக்கியமானவர்கள் எல்லோரும் அமெரிக்க சார்பானவர்களும் விசுவாசிகளுமாகவே இருந்து வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ் மக்களின் நீதி நியாயங்களோ சுயநிர்ணய உரிமை பற்றியோ அமெரிக்கா காது கொடுத்து கேட்கும் எனயாராவது எதிர்பார்ப்பது அரசியல் அறியாமையேயாகும். ஏகாதிபத்திய நலன்களும் உலக மேலாதிக்கத்திற்கான நீண்டகாலத் தந்திரோபாயங்களும் தான் அமெரிக்காவின் மூலோபாய நிலைப்பாடாகும். முழு இலங்கையுமே அதன் குறிக்கோளாகும். இது வரை காலமும் அதற்காகவே செயலாற்றி வந்தது. அதற்கான சூழல் வரும் போது ஆளும் வர்க்கத்தரப்பிலே தான் அமெரிக்கா தன்னை வைத்துக் கொள்ளும். அதனையே அமெரிக்க தெற்கு- மத்திய ஆசிய விவகாரங்களுக்கான செயலாளர் றிச்சார்ட் பௌச்சர் கொழும்பில் தெளிவாக எடுத்துக் கூறி இருக்கிறார். இது பற்றி சுயநிர்ணய உரிமைகான போராட்டத்தை முன்னெடுத்து வரும் தமிழ் மக்களும் இறைமை சுதந்திரம் பற்றிய அக்கறையுடன் இருந்து வரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சிங்கள மக்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய காலம் வந்து விட்டது. சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்க வேண்டும். இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியத்தைப் பாதுகாக்க சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். இதுவே இரு புறத்திலும் எடுக்க வேண்டிய அடிப்படை நிலைப்பாடாகும்.

### ஐரோப்பிய ஒன்றிய தடை.....

1ம் பக்க தொடர்ச்சி....

அந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கின்ற போது ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் இயக்கத்தின் மீதான தடை ஆச்சரியத்தை தர வேண்டியதில்லை. மாறாக போராட்டத்தில் இக்கட்டம் எதிர்பார்த்திருக்க வேண்டிய தேயாகும்.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் தங்களை ஏமாற்றிவிட்டதாக தமிழ் மக்கள் நினைக்க வேண்டியதில்லை. மாறாக அத்தடையினால் பலமடையும் பேரினவாதத்திற்கு எதிரான உறுதியான போராட்டத்தை முன்னெடுப்பது பற்றியே சிந்தித்து செயல்பட வேண்டும். தடைசெய்யும் நாடுகளில் அகதிகளாக இருக்கும் இலங்கைத் தமிழர்களை மட்டுமன்றி, அங்கு வாழும் சதாரண மக்களதும் முற்போக்கு ஜனநாயக அமைப்புகளினதும் ஆதரவை பெற்றுக் கொண்டு அவ்வரசாங்கங்களை தனிமைப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இது இந்தியாவிற்கும் பொருந்தும். இந்திய அரசின் தயவை விட இந்திய மக்கள் குறிப்பாக தமிழக மக்களின் முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

சுயநிர்ணய உரிமைப்போராட்டத்திற்கு எதிராக செயற்படும் ஏகாதிபத்தியத்திடம் கெஞ்சிக்கேட்பதற்கு எதுவுமே இல்லை. சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்கச் சக்திகளுக்கு எதிரானதாக விரிவுபடுத்த வேண்டும். அதற்கு விரிந்த ஐக்கிய முன்னணி வேலைத்திட்டம் அவசியம். அவ்வேலைத்திட்டம் வெற்றியளிக்கும் போது தடைகள் சதிகள் எல்லாமே தவிடு பொடியாக்கப்படும். தடை செய்த பிறகும் தடைசெய்த நாடுகளை மேலுவான நெகிழ்ச்சியான பார்வைக்குட்படுத்துவது அடிமைத்தனமேயன்றி போராட்ட உணர்வல்ல. தமிழ்த் தரப்பின் உயர்வர்க்க மேட்டுக்குடி சக்திகள் வெள்ளைக்கார எசமானர்கள் மீது வைத்திருக்கும் அடிமை விசுவாசத்தை இனியாவது கைவிட வேண்டும்.

ஒன்றிப் ஏகாதிபத்தியத் எதிர்த்துப் போராடமுன்வரல் வேண்டும். அல்லது ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்து சேவை செய்ய வேண்டும். இந்த இரண்டுக்குமிடையில் மூன்றாவது தெரிவு ஒன்று இருக்க முடியாது. இதுவே ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைக்கான போராட்டத்தில் சுற்க வேண்டியபாடமாகும்.

### யுத்த சந்தையில்

6ம் பக்க தொடர்ச்சி..............

ஊடக முதலாளிகளின் விருப்பு வெறுப்பிற்கு ஏற்றவாறே ஊடகவியலாளர்கள் எழுத வேண்டியுள்ளது.

ஊடக நிறுவனங்களுக்கு வியாபாரமே முக்கியம். சில சம்பவங்களை வெளியிட்டாலும் அவற்றின் வியாபாரத்தை தொடர்ந்து நடத்துவதற்காக தற்போதைய யுத்தச் சூழலும் ஆட்சி முறைமை அவற்றிற்கு மிகவும் அவசியமாகும். அவற்றை மாற்றும் நோக்கில் செயற்படப்போவதில்லை.

தேசிய இனப்பிரச்சினைப்பற்றி சரியான முறையில் சிங்கள, தமிழ் முஸ்லீம், மலையக மக்கள் என்போரை அறிவூட்டுவதற்கு எந்தவொரு பிரதான ஊடகங்களும் செயற்படப்போவதில்லை மாறாக எந்தெந்த வழிகளில் பிரச்சினையை சிக்கலாக்கி மோதலாக்கி வியாபாரத்தை விரிவாக்குவதை நோக்கமாக கொண்டே ஊடக நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவற்றின் வர்க்க, இன, கட்சி நிலைப்பாடுகளை கொண்டு விடயங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஆனால் அவற்றில் தொழில் புரியும் பல ஊடகவியலாளர்களோ மறைக்கப்பட்ட உண்மைகளைத் தேடி கண்டுப்பிடித்ததற்காகக் கொல்லப்படுகின்றனர். அதிலும் ஊடக நிறுவனங்கள் பெரும் லாபத்தையே ஈட்டிக் கொள்கின்றன. அந்த ஊடகவியலாளர்களின் உயிர், உழைப்பு, தியாகம் எல்லாம் ஊடக நிறுவனங்களின் வியாபார லாப வளர்ச்சிக்கு உரமாக்கப்படுகின்றன. ஆனால் ஊடகங்களின் கொள்கைகளில் மாற்றம் இருப்பதில்லை. உற்று நோக்கினால் ஒவ்வொரு ஊடக நிறுவனத்திற்கும் பிரதான முதலாளித்துவக் கட்சிகள் பின்புலமாகப் பக்கத்துணையாக இருந்து வருவதைக் காணலாம்.

மாற்று ஊடகப்பண்பாடு பலமாக கட்டி வளர்க்கப்பட்டு மக்கள் சார்பு ஊடகங்கள் பல்கிப் பெருகி மக்கள் சார்பு நிலைக் கொள்கையும் நடைமுறையும் பேணப்பட்டாலேயே மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் பிரதான ஊடகங்களுக்கு சரியான பாடத்தைப் புகட்ட முடியும். அதற்கு மக்கள் மத்தியில் உரிய அரசியல் விழிப்புணர்வும் செயல்பாடும் அவசியம். அல்லாது விடின் தேசிய இனப்பிரச்சினையின் பெயரில் வீழும் கொலைகள் தாக்குதல்கள் ஆட்கடத்தல்கள் அவற்றின் மூலமான இயல்பு வாழ்க்கை சீர்குலைதல்களை வைத்து பெரும் ஊடக நிறுவனங்கள் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் வீழுத்தும் செயல்களைச் செய்யும் வாய்ப்பு தொடர்ந்து இருந்த வரவே செய்யும்.

### அமைதி வழியில்

4ம் பக்க தொடர்ச்சி

● ஈட்டா அரசியல் நீரோட்டத்தில் இணைய அவர்களது அரசியல் கட்சியான பட்டசூனாவுக்கு விதிக்கப்பட்ட நீதிமன்றத் தடை விலக்கப்படுமா?

● அமைதி நடவடிக்கைகள் சரிவராத நிலையில் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடக் கூடிய வலு ஈட்டாவுக்கு இருக்குமா?

● அமைதி வழிக்கு இறங்கியதன் மூலம் பாஸ்க் மக்களின் நம்பிக்கையை ஈட்டா இழந்து விட்டதா?

இவை எல்லாம் பதிலை வேண்டி நிற்கும் வினாக்கள். ஏகாதிபத்தியங்கள் தமக்கெதிரான எந்தவொரு போராட்டத்தையும் அனுமதித்தோ அங்கீகரித்ததோ கிடையாது. ஏதாவதொரு வழியில் அவற்றை ஒடுக்கியே வந்துள்ளன. அமைதி வழியில் ஒடுக்கப்பட்ட போராட்டத்திற்கு வட அயர்லாந்தின் போராட்டம் ஒரு நல்ல சான்று. அராஜக வழியில் அடக்கப்பட்ட போராட்டத்திற்கு குர்திஷ் இன மக்களின் அப்துல்லா ஒச்சலான் தலைமையிலான குர்திஷ் தொழிலாளர் கட்சி (PKP) ஒரு சான்று.

இதே நிலைமை ஈட்டாவுக்கும் ஏற்படக் கூடும். ஆனால் உரிமைகளும் சரி, சுதந்திரமும் சரி எந்தவொரு வழியிலுமே மறுக்கப்பட முடியாதவை. ஒடுக்கப்பட்ட மக்கள் ஏதாவதொரு வழியில் போராடி வெற்றி பெறுவர் என்பதே வரலாறு சொல்லும் வலுவான உண்மை.

பாஸ்க் மக்களையும் பிரச்சினையும் பொறுத்தமட்டில் 1832 இல் விக்டர் ஹியுகோ (VICTOR HUGO) சொன்னது போல

"பாஸ்க் என்பவன் ஒரு ஸ்பானியனோ அல்லது பிரெஞ்சுக்காரனோ அல்லன், அவன் ஒரு பாஸ்க்"

-ஏகலைவா-

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்